


மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net
TAMIL EBOOKS

# 1

சரிதா வாசலில் வந்தாள்.

மெல்லிய மாலை இறங்கி, அந்தி மினுப்பு எங்கும் தூவியது.

கம்பங்கள் மீது விளக்கு தொற்றிவிட்டன.

சரிதாவின் மிருதுவான கண்கள் சுற்றிலும் படர்ந்து ஓடின.

தன் இளம் உடலை மென்மையாக வளைத்து காரில் ஒரு ஒய்யார வனப்புடன் ஏறினாள்.

கார் பறக்க ஆரம்பித்தது.

காட்சிகள் இருபுறமும் வழிந்து ஓடின.

மனம் தெளிவான பளிங்குபோல் நிச்சலமாக இளகியது.

அரை மணி பிரயாணம்.

விஸ்வா மனநல கிளினிக் முன் கார் நின்றது.

இறங்கினாள். உள் நோக்கி நடந்தாள்.

பாதை இருமருங்கும் சோலையான தோட்டம்.

அங்கங்கே புஷ்பித்த மலர்க் கொத்துகள் அவள் மனத்தில் ஒரு குளிர்வை உண்டாக்கின.

ஒரு கணம் அவள் பிடரி குறுகுறுத்தது.

ஒரு நிழல் அங்கு நின்று அவளைப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை ஓடியது.

திரும்பிப் பார்த்தாள்.

எதுவும் இல்லை.

மேலே நடந்தாள்.

முகப்பு வந்ததும் படிகளில் ஏறினாள்.

ரிசப்ஷன் கவுண்டரில் நின்றாள்.

- நீங்க மிஸ் சரிதாதானே? என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

தலையை அசைத்தாள்.

- கரெக்ட் டயத்துக்கு வந்துட்டீங்களே? என்றாள்.

உள்ளே டாக்டர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

கதவை மூடி ரிசப்ஷனிஸ்ட் வெளியே போக,

அறையின் ஏஸி குளிர்ச்சி, பனிச் சிலிர்ப்பில் சரிதாவைத் தழுவ,

- குரல் வந்த திசையில் டாக்டர் நின்றார்.

அவள் உட்கார்ந்தாள்.

வெளிச்சத்தில் அவள் முகத்தில் ஒரு பேதலிப்பு தெரிந்தது.

அவளுக்குள் ஏதோ இருந்து தொந்தரவு செய்கிறது என்று டாக்டர் நினைத்தார்.

இந்த பேதலிப்பு இருக்கும் வரை அவள் தனது மனதைத் திறந்து காட்டமாட்டாள்.

இது ஒரு இரும்பு கவசம்!

இதை இளக வைத்து அவளது அந்தரங்கத்துள் புகுவதற்குள்...

புன்னகை ஒன்றை பிரமாதமாக அவர் வரவழைத்தார்.

- நான்தான் டாக்டர் ரவீந்திரன்! என்றார்.

அவள் குரல் தொலைவில் இருந்து கேட்பதுபோல கேட்டது.

துளியாகப் புன்னகை அவளிடம் வந்தது.

அவள் படிப்பு, குடும்பம் என்று ஆரம்பித்து பல விஷயம் கேட்டார் டாக்டர். காப்பி வரவழைத்துக் கொடுத்தார்.

- சரிதா! உங்க மனசை லேசாக்கிக் கொள்ளுங்க! இறுக்கம் எதுவும் இல்லாமப் பேசணும். நான் உங்கள் நண்பன்தான். டாக்டர் என்கிற மனப்பான்மையில் பேசல்லே! உங்கள் மனச்சிக்கல்லே நானும் பங்கெடுத்துக் கொள்ளப்போறேன்!

- தாங்க்யூ டாக்டர்!

- உங்களுக்கு என்ன செய்யறது?

- ராத்திரி பயம் வருது.

- அவ்வளவுதானா! இது ரொம்ப சிம்பிள் விஷயமாச்சே.

- அப்படியா டாக்டர்? பளிச்சென்று கேட்டாள்.

- என்ன பயம்?

- ஒரு சூறாவளிவர்ற மாதிரி. . .

- மனசில் பிரளயமே வர மாதிரிகூட வரட்டும். சீக்கிரம் நிறுத்திடலாம். ஒவ்வொருத்தரும் ஒரு மாதத்திலே குணமாயிட்டுப் போயிருக்காங்க.

- உண்மையா டாக்டர்? முகத்தில் இன்னொரு பளிச்!

- உண்மை. . . உண்மை. . . !

- என் மனம் பெக்யூலியர் டாக்டர். இரவு பத்து மணிக்கு. . .

- இந்தா சரிதா அதை விடுங்க. ஒரு விநாடியிலே அதைக் குணப்படுத்திடுவேன். இப்போ நோயைப் பத்தி பேச வேண்டாம். உங்களைப் பத்தி சொல்லுங்க! உங்க முகத்தைப் பார்த்தா உங்களுக்கு கலைகளிலே இன்ட்ரஸ்ட் வரும்னு தோணுது!

- யூ ஆர் ரைட் டாக்டர்! எப்படிச் சொல்றீங்க? ஜோசியம் தெரியுமா?

- அதெல்லாம் இல்லை. சில முகங்கள் தங்களைப் பற்றி சொல்லிக்கும்! என்ன கலையிலே உங்களுக்கு இன்ட்ரெஸ்ட்?

- எனக்கு. . . ஓவியம். . .

- கொஞ்சம் இருங்க! இங்கே வர்ற வாடிக்கை யாளருக்கு உட்கார்ந்து பதில் சொல்லக் கூடாதுன்னு வெள்ளைக்காரனே இந்தச் சாய்வுக் கட்டிலைக் கண்டுபிடிச்சிருக்கான்! இதிலே ஏறி சாஞ்சுக்குங்க.

- நீங்க உட்கார்ந்திருக்கிறீங்களே?

- அதோ அந்த சோபாவில நான் போய். . . என்று சொல்லி அவரும் சாய்ந்து கொண்டார்.

- நல்லா சாய்ஞ்சுக்குங்க! உங்க குரலை நான் கேட்கணும்! என்றார் டாக்டர். அவள் சாய்ந்து கொண்டாள்.

- சரியா இருக்கா! உடம்பை தளர்ச்சியா வச்சுக்குங்க! தலையை நிமிர்த்தி என்னைப் பார்க்க வேண்டாம்.

- எஸ் ஸார்.

அப்போது திடீரென்று குறைவாக, அவள் பேதலிப்புடன் அதைப் பார்த்தாள்.

டக்கென்று மின்சாரம் போய்விட 'வீல்' என்று ஒரு இரைச்சல் போட்டாள்.

அறை அந்த சத்தத்தில் கிழிந்தது.

டாக்டரே நடுங்கினார்.


மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net
TAMILEBOOKS

# 2

அந்த இரவு வேளையில் மின்சாரம் திடீரென்று நின்று எங்கும் இருள் உலகையே மூடிவிட,

சரிதாவிடம் இருந்து வீறிட்டு வெளிப்பறந்த 'வீல்' டாக்டர் ரவீந்திரனையே நடுங்க வைத்தது.

அரை விநாடி அதில் அச்சப்பட்ட அவர், அடுத்த கணம் - நர்ஸ்! நர்ஸ்! என்று கத்தினார்.

- இதோ வரேன்! நர்ஸ் கீழே இருந்து குரல் கொடுத்தாள்.

மறுவிநாடியில் மாடிப்படியில் 'டக்டக்டக்' என்று ஏறினாள்.

அவள் உள்ளே நுழையவும் மீண்டும் மின்சாரம் வரவும் சரியாக இருந்தது.

பளிச்சென்ற அறை திரும்பவும் சிரித்தது.

சரிதா எங்கே?

ரவீந்திரன் கண்களை வீசினார்.

அங்கே, கதவு மூலையில், கீழே தரையில் அவள் குத்தியிட்டு உட்கார்ந்திருந்தாள்.

கண்கள் பெரிதாக விரிந்து வெளிச்சத்தை வெறியோடு பார்த்தன.

உதடு சின்னத்துளிர்போல் துடித்தது.

எச்சரிக்கையாக அருகில் போனார்.

-வாங்க சரிதா! எழுந்திருங்க. . .

மிருதுவாக அணைக்கும் குரலில் பேசினார்.

அவள் இன்னும் வெறித்துக் கொண்டிருந்தாள்.

அவள் பார்வை சூன்யத்துள் எதையோ துழாவிப் பார்த்திருந்தது.

- வாங்க சரிதா! எழுந்திருங்க!

எழ முயன்றாள். ரவீந்திரன் உதவி செய்தார்.

மெல்ல அவளை அழைத்து மெத்தை நாற்காலியில் அமர்த்தினார். அவள் கனமாக மூச்சு விட்டாள்.

- இப்போ சரியா இருக்கீங்களா? ரவீந்திரன் கேட்டார்.

அவள் பதில் பேசவில்லை.

சிறிது நேரம் இழைத்தாள். பிறகு மெள்ள மெள்ள ஆசுவாசம் ஆனாள்.

இது மாதிரி இருட்டைக் கண்டா பயப்படுவீங்களா?

பதில் இல்லை.

- நர்ஸ் காப்பி கொண்டு வாங்க! ரவீந்திரன் உத்தரவு கொடுத்தார்.

நர்ஸ் பறந்தாள்.

அடுத்த சில கணங்களில் காப்பி வந்தது.

- டேய்! விஸ்கி கிடைக்குமா?

திடுக்கிட்டு ரவீந்திரன் பார்த்தார், அறைக்குள் அதற்குள் எப்படி ஒரு ஆண் புகுந்தார்?

விருட்டென்று நாலு பக்கமும் பார்த்துவிட்டு, குரல் சரிதாவிடமிருந்து வருகிறது என்று தெரிந்தவுடன் திடுக்கிட்டார்.

அவளை அழுத்திப் பார்த்தார்.

- விஸ்கியா?

- ஆமாண்டா!

சரிதாவின் குரல் மாறியிருந்தது. இந்தக் கரகரப்பு எப்படி வந்தது?

நர்சும் அதைக் கேட்டு ஒரு அடி பின் வைத்தாள்.

- வேற பீர், ரம். . .

- அதெல்லாம் வேண்டாம். கேட்டதைக் கொடு!

- இந்தா நர்ஸ், இவருக்கு விஸ்கி கொண்டு வா!

அவளிடம் ரவீந்திரன் கண்களைக் காட்டினார்.

நர்ஸ் கீழே விரைந்தாள்.

திரும்பி அவள் வந்தபோது கையில் டம்ளர் வைத்திருந்தாள். ரவீந்திரனிடம் அதைக் கொடுக்க, அதை அவர் சரிதாவிடம் கொடுத்தார்.

ஆவலுடன் சரிதா வாயில் வைத்தாள்.

அடுத்தகணம் டம்ளர் திரவத்தை அவர் மீது வீசியெறிந்தாள்.

பளார் என்று ரவீந்திரனின் முகத்தை அது அடித்தது.

- நர்ஸ்! பாலுவைக் கூப்பிடு! கூவினார் ரவீந்திரன்.

சரிதா அப்போது திடீரென்று எழுந்தாள். அருகே மேஜை மீதிருந்த கண்ணாடி வெயிட்டை எடுத்தாள். சுவரில் ஓங்கி அடித்தாள்.

கிளிங் பளிங் என்று கண்ணாடிச் சிதறல்கள்.

அடுத்து நாற்காலியைப் பலமாக உதைத்தாள். அது ஓசையோடு கவிழ்ந்தது. அதை அடுத்து டேபிள் வெயிட் காற்றில் பறந்தது.

கடைசியில் சுவரில் தொங்கிய கடிகாரத்தை எம்பி எடுத்து படார் என்று தரையில் போட்டு உடைத்து விட்டு விர்ரென்று வாயில் வழியே சரிதா வெளியேறினாள்.

நர்சும், ரவீந்திரனும் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் வாசலுக்கு வருவதற்குள் அவள் வெகுதூரம் தெருவில் ஓடிவிட்டாள்.

அடுத்த தெரு.

அவள் திரும்புவதைப் பார்த்த பிறகு, அவசரமாக ரவீந்திரன் நின்றார்.

சரிதாவின் கார் அவர் கட்டிட வாசலில் சற்று ஒதுங்கி இருந்தது.

கார் அருகே போய், - டிரைவர், டிரைவர் என்று இரைந்தார்.

எதிர் வரிசை வீட்டு வாசலில் போய் கண்ணை மூடி இருந்தார் டிரைவர்.

ரவீந்திரன் குரல் கேட்டதும் திடுக்கிட்டு ஓடி வந்தார்.

- உங்க அம்மா அதோ அந்தப் பக்கம் திரும்பி ஓடறாங்க! அவங்களைப் போய்ப் பிடிச்சு வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க! சீக்கிரம் காரை எடுங்க! என்றார்.

டிரைவர் ஒரு மத்திய வயதுக்காரர். டாக்டரைப் பார்த்து முகத்தைக் கோணினார்.

-பேஜாரு ஸார்! ஓடிட்டாங்களா? இன்னிக்கு ராத்திரி சிவராத்திரிதான்! வீட்டை துவம்சம் பண்ணிடு

வாங்க! என்று சொல்லியவாறு கதவைத் திறந்து விருட்டென்று உள்ளே ஏறி, காரை சுருக்காக ஸ்டார்ட் செய்தார்.

கார் பறந்து மறைந்தது.

ரவீந்திரன் ஒரு பெருமூச்சு விட்டார். அவர் நெற்றி சுருங்கியது.

அவருக்கே அது பிடிபடவில்லையோ?

- ஸார்! இது ஸ்கிஸோபிரனியாவா? என்றாள் நர்ஸ்.

டாக்டர் பதில் பேசவில்லை.

மாடிப்படிகளில் ஏறினார்.

- பாரனோயியா இருக்குமா?

ரவீந்திரன் முகம் தீவிரத்தில் இருந்தது.

12 வருடம் மனநோயில் குப்பை கொட்டிவிட்டார்.

மனநோயை எத்தனை வகையாகப் பிரித்தால் என்ன?

அவருக்கு என்னவோ எல்லாம் ஒன்றுதான் என்று தோன்றியது.

இன்னும் மேனாட்டு விஞ்ஞானம் மூளையின் நுண்ணிய செயல் அனைத்தையும் கண்டுபிடிக்கவில்லை.

இன்னும் மேற்பரப்பில்தான் இருந்து கொண்டிருந்தது.

மாடி ஏறி அறைக்குள் போனார்.

அங்கே கீழே ஏதோ அவர் கவனத்தை இழுக்க, திரும்பிப் பார்த்தார்.

ஒருகணம் அவர் பார்வை உறைந்துவிட்டது.

மணி ஆறு. மாலை!

கம்பெனியில் இருந்து சிவராம் வீடு வந்தான்.

நேராகத் தன் அறைக்குள் போனான்.

கோட், பாண்டுகளை அவிழ்த்து, பாத்ரூம் சென்றான்.

ஷவரில் இரண்டு நிமிடம் உடம்பை நனைய விட்டான்.

பிறகு புதிது உடுத்தி நிம்மதி உணர்வுடன் சோபாவில் வந்து அமர்ந்தான்.

வசுந்தரா காப்பி கொண்டு வந்து வைத்தாள்.

ஒரு வினாடி அவன் முன் நின்றாள்.

- ஏதாவது விசேஷமா? என்றான்.

- ஒண்ணுமில்லை.

- சொல்லு! இழுக்கறியே?

- ராமர் கோவில்லே விசேஷ பூஜை! நீங்க வந்தா-

- நானா?

- ஆமா, தம்பதிகளாக வந்தா மாங்கல்ய சரடு தருவாங்க!

- என்னை இதுக்கெல்லாம் கூப்பிடாதே! நான் இப்போ கிளம்பியாச்சு! எனக்கு ஆளுங்க காத்திட்டிருப்பாங்க! எல்லாரும் பிஸினஸ் பீப்பிள்!

காப்பியை அருந்தினான்.

சட்டென்று எழுந்தான்.

- வரேன்! என்பதைப் பாதி வார்த்தையாகக் கூறிவிட்டு வெளியே பாய்ந்தான்.

அடுத்தகணம் அவர் கார் விர்ர்ரிடும் சப்தம்!

இரவு பத்து மணி நெருங்க வசுந்தரா சன்னல் பக்கம் அமர்ந்தாள்.

காம்பவுண்டுக்கு வெளியேயும் கண் ஓடிக் கொண்டிருந்தது.

ஆனால் அவன் வரவில்லை.

மணி பத்தரை ஆகியது. பதினொன்றும் ஆகியது.

இப்போது இருப்புக் கொள்ளவில்லை.

என்ன செய்யலாம் என்று யோசனை.

எந்த இடம் போகிறேன் என்று சிவராம் சொல்லவில்லை.

சொல்லவும் மாட்டான்.

இப்பொழுது மணி பதினொன்று ஆகிவிட்டது. கவலை மெல்ல அரிக்க ஆரம்பித்தது.

யாருக்குப் போன் செய்து கேட்டாலும் - அவங்களுக்கு ஏன் செய்தே? என்று கூட கேட்பான். அவன் போக்கே விநோதமானது.

இந்த மாதிரி சமயங்களில் தேவகிதான் அவளுடைய உயிர்த் தோழி. அவளது வகுப்புத் தோழியாக இருந்தவள்.

இப்போது ஒரு அட்வகேட்டுக்கு வாழ்க்கைப்பட்டு நன்றாக குடித்தனம் நடத்தி வருகிறாள்.

அவளுக்குப் போன் செய்தாள்.

தூக்கக் கலக்கத்தில் எழுந்தாள் தேவகி.

- ஸாரி தேவகி. தொந்தரவு கொடுத்துட்டேன். என் கணவர் வெளியே போனவர் இன்னும் வரவில்லை. எனக்கு கவலையா இருக்கு! என்றாள் அவள்.

- சரிதான் போ. . ! போனவர் கட்டாயம் திரும்பி வருவார். நீ ஏன் அதைப் பத்திக் கவலைப்படறே! என்றாள் தேவகி.

- இல்லே மணி பதினொண்ணு ஆயிடுத்து இல்லையா?

- பதினொண்ணு ஆகட்டுமே! ஆண்கள் எல்லோருக்கும் வெளியில் போனா எப்ப வரணும்னு தெரியாது. நாலு பேர் சேர்ந்துட்டா கேளிக்கையில போயிடுவாங்க.

- இல்லை கிளப்புக்கு போனாலும் பதினோரு மணிக்கு வந்துடுவாங்க!

- கிளப் இல்லாட்டி வேற இடம் போயிருப்பாரு. இதையெல்லாம் கேட்டுக்கிட்டு இருக்காதே. ஒரு அளவுக்கு மேல இதைப் பத்தி தெரிஞ்சுக்காம இருக்கிறது நல்லது.

- நிச்சயமா வந்து விடுவார் இல்லையா?

- வந்துடுவார்.

போனை வைத்தாள்.

திரும்பவும் ஜன்னல் அருகில் அமர்ந்தாள்.

பிறகு அவளுக்கே ஒரு அச்சம். ஊரில் என்ன வெல்லாமோ வதந்திகள் பரவியிருந்தன.

பல அனாவசியக் கொலைகள் நடந்துவிட்டன.

பத்திரிகைகள் - அவைகளைப் பிரபலப்படுத்தின.

இதனால் அவளுக்கு சில கலக்கங்கள்.

விளக்குகள் அவ்வளவு நேரம் எரிவதற்கு விருப்பமில்லை. அவைகளை அணைத்துவிட்டு ஜன்னல் தெரியுமாறு தள்ளி அமர்ந்தாள்.

வெகுநேரம் விழிப்பு இருந்தது.

பிறகு மெள்ள மெள்ள கண்கள் மூடின. தூங்கி விட்டாள்.

காலை ஐந்து மணிக்கு மணியடிக்கும்போதுதான் அவள் கண்ணை விழித்தாள்.

அவர்தான் வந்து விட்டாரா என்று சட்டென்று பார்த்தாள். பால் கவர் போடுபவன் குரல்.

போய் கவரை வாங்கினாள்.

உள்ளே போனாள்.

ஆறரை இருக்கும், திரும்பவும் மணியடித்தது.

அவசரமாய் போய் பார்த்தாள்.

ஒரு அன்னியனான நபர் நின்று கொண்டிருந்தார்.

- நீங்க யாரு? என்று கேட்டாள்.

- இந்த வீட்டிலேதான் மிஸ்டர் சிவராமன் இருக்காரா? என்று கேட்டார்.

- ஆமாங்க!

- அவருக்கு நீங்க யாரு? என்று கேட்டார் அவளைப் பார்த்து அந்த நபர்.

- நான் அவர் மனைவி!

அந்த ஆள் தயங்கினார்.

- என்ன விஷயம்? சொல்லுங்க! என்றாள் அவள்.

- முதல் அவென்யு இருக்கு பாருங்க.

- ம். . . சரி!

- அங்கே சிவராம் கார் நிக்குதுங்க.

- சரி!

- அங்கே காருக்குள்ளே. . . என்று இழுத்தார் அவர்.

- என்ன?

- அதுக்குள்ளே அவர் உடம்பு சரியில்லாம படுத்திருக்காரு. என்னன்னு போய்ப் பாருங்க.

அவர் நிற்கவில்லை. போய்விட்டார்.

சட்டென்று உணர்வு வந்ததுபோல் தன்னை முடுக்கிக் கொண்டாள். கதவுகளைச் சாத்தி பூட்டி விட்டு விரைந்தாள்.

விறுவிறுவென்று தெருவில் நடந்து சீக்கிரத்தில் சாலையை அடைந்தாள்.

ஆட்டோ ஒன்று மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

கையைக் காட்டினாள்.

ஏறி உட்கார்ந்து - முதல் அவென்யூ என்றாள்.

வண்டி ஓட ஆரம்பித்தது.

மனதில் பெரிய குழப்பம்.

அந்த ஆள் சொன்னார். முதல் அவென்யூவில் கார் நிற்கிறது என்று. அவருக்கு உடம்பு சரியில்லை என்று தானே அர்த்தம்.

ராத்திரி முழுதும் அவர் உடம்பு மோசமாக இருந்திருக்குமோ? ஏன் காருக்குள்ளே இருந்துட்டார்.

முதல் அவென்யூ ஒரு நீண்ட சாலை.

தூரத்திலிருந்து பார்க்கும்போதே கூட்டம் தெரிந்தது.

சின்னக்கலக்கம் மனசில் ஏறியது.

ஆட்டோவை சீக்கிரமாக விடச் சொன்னாள்.

விரைந்து போய் அது நின்றது.

சட்டென்று கீழே குதித்து இறங்கினாள்.

ஆட்டோவிடம் பணத்தை தந்தாள்.

கூட்டத்தை நோக்கி ஓடினாள்.

அவள் நினைத்தது சரிதான்.

கூட்டத்தின் நடுவே பார்த்தபோது அங்கே அவள் வீட்டுக் கார் நின்று கொண்டிருந்தது.

- வழி விடுங்க! வழி விடுங்க! என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

கீழே ஒரு ஸ்ட்ரெச்சர் வைக்கப்பட்டிருந்தது.

அதில் ரத்தக்கறையான ஒரு சடலத்தை வைத்திருந்தார்கள்.

கூர்ந்து கவனித்தாள் வசுந்தரா.

சிவராமா! அவர்தானா? 'வீல்' என்ற அலறல் அவள் வாயிலிருந்து ஒரு பட்சிபோல் வெளிப் பறந்தது.

ஜ௦ஞ

# 3

இன்ஸ்பெக்டர் செந்தில் அந்த இடத்தில் அரை மணி நேரம் இருந்தார்.

ஏற்கனவே கூட்டம்!

எல்லாரும் நிசப்தமாக இருக்க, வசுந்தராவின் அழுகை, பிரதானமாக இருந்தது.

செந்திலுக்கு எப்போதும் கொலைத்தலம் அருவெறுப்பாகவே இருக்கும்.

மனிதனின் சோகம், வேதனை, வெறுப்பு, குரோதம், அழுகை எல்லாவற்றுக்கும் அதுதான் இடம்.

அந்த இடத்தில் அவர் வேலை செய்ய வேண்டி வருகிறது.

கான்ஸ்டபிள் 304 அவரை அழைத்துப் போனார்.

ஸ்ட்ரெச்சரில் ஒரு சடலம் கிடந்தது. சட்டை பாண்டுகளில் பெரிய ரத்தக்கறை!

முகம் திரும்பி இருந்தது!

- கொலைதானா? ராஜன்!

- ஆமாம் ஸார்! வயிற்றில் குத்தி இருக்கு!

- பர்ஸ், கிர்ஸ் இருக்கா? திருடு போயிருக்கா?

- அப்படியே இருக்கு.

- பணம்?

- பணமும் அப்படியே இருக்கு. 1500 ரூபாய்.

- காரணம் ஏதாவது தெரிஞ்சதா?

- இல்லை ஸார்!

- மனைவி என்ன சொல்றாங்க?

- அழுதுட்டே இருக்காங்க.

- கைரேகை?

- ரேகை பார்க்க மிஸ்டர் மூர்த்தி இருக்கார். நிறைய இடம் பார்த்துட்டார்.

- ஏதாவது கிடைச்சுதா?

பாதி வேலையில் மூர்த்தி வந்தார். - ஸார் ஸார்! ரேகை எதுவும் கிடைக்கலை.

- எல்லா இடத்தையும் பார்த்துட்டீங்களா?

- ம். . . ஆச்சு. . . !

- கார் ஹேண்டில் பார்த்தீங்களா?

- ஆச்சு! எங்கேயும் இல்லை இன்னும் தேடிட்டிருக்கேன்.

செந்தில் கார் பக்கம் வந்தார். அது பிளாட்பாரம் ஓரமாக நின்றது.

- கீழே தரையில் பிரேக் போட்டதுக்கு அடையாளம் இருக்கிறதா?

- இல்லை.

- பிளாட்பாரத்தில் ஏதாவது அடையாளம்?

- இல்லை. கார் எந்த தொந்தரவும் இல்லாம ஓரம் கட்டியிருக்கு.

சாலையை இருபுறமும் பார்த்தார். வீசி வளர்ந்த வாகை மரங்கள் இரு வரிசையும். நடுவில் ரஸ்தா!

இருட்டு நேரத்தில் அதிக இருட்டாக இருக்கும்.

நகரத்திலிருந்து வெளியே போகும் ரஸ்தா!

சொற்பமான போக்குவரத்து.

வசுந்தராவை அணுகினார்.

அவளது முதல் வேக அழுகைகள் முடிந்து விட்டன. தேகம் சோர்ந்து விட்டது. சின்னச்சின்ன விம்மல்களோடு இருந்தாள். கண்ணீர் மட்டும் தளும்பிக் கொண்டே இருந்தது.

- மேடம்! அழாதீங்க ஸாரி! என்ன செய்யறது? என்று இழுத்து விட்டார் அவர்.

பிறகு, - மேடம் நேத்திக்கு வீட்டுக்கு வந்துட்டுப் புறப்பட்டாரா? இல்லாட்டி. . .

- ஆமாம்.

- எங்கே போறேன்னு சொன்னாரா?

- இல்லை.

- நீங்க கேட்கலையா?

- கேட்டாலும் சொல்ல மாட்டார்.

- சாதாரணமாக எங்கே போவார்னு தெரியுமா?

- கிளப், ஹோட்டல், எங்கே வேண்டுமானாலும் போவாரு.

அதை அடுத்து அவரது நடத்தையைப் பற்றி செந்தில் கேட்க வேண்டும்.

ஆனால் அதைக் கேட்க அது சமயமல்ல!

இதற்குள் தடயஇயல் துறை பணியாளர்கள் வந்துவிட்டார்கள்.

அவருக்கு தெரிந்த நடேசன் வந்திருந்தார்.

சிறிது நேரம் இருவரும் அளவளாவினார்கள்.

- கொஞ்சம் கவனமா பாருங்க நடேசன்! எனக்குத் தடயம் அவசியம் தேவை.

- பார்க்கிறேன்.

- ஏதாவது நிச்சயம் வேணும். ஒரே தவிப்பிலே இருக்கேன்.

- எஸ் ஸார்!

செந்தில் அவரை விட்டு சில அடிகள் வைத்தார்.

அதே மாதிரி. . . அதே மாதிரி என்றது மனம்.

இதற்கு ஒரு மாதம் முன் ஒரு கொலை நடந்தது.

இதேபோலத்தான் காரில் கொலை!

அது இன்னொரு கொலை!

அதுவும் தனிமையான சாலைதான்! அதிலும் இரவில்தான் கொலை நடந்தது.

இரண்டையும் இணைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

செந்திலின் மனதுள்ளே ஒரு குட்டி செந்தில் கத்தினான்.

- டேய் செந்தில்!

- பேசாதேடா!

- ஏன் மனசு குத்துதோ! பேசத்தான் செய்வேன்.

- சரி பேசு!

- முதல் ஆசாமி கொலை ஆனாரே அவர் யாரு?

- துரைசாமி!

- அதிலே விசாரணைகள் பண்ணினோமே என்ன ஆச்சு?

- அதுவும் எந்த பிரயோஜனமும் இல்லாமபோச்சு.

- அப்போ இதுவும் அப்படித்தான் ஆகப்போவுது.

- அட சீ! ஏதாவது அபசகுனம் மாதிரி சொல்லாதே!

இருட்டில் கீழே போய் சரிதாவைத் தேடி விட்டு வியர்க்க விறுவிறுக்க ரவீந்திரன் மாடிக்கு வந்தார்.

அறைக்குள் போனார்.

மெள்ள நடந்து கீழே பார்த்தபோது ஏதோ சிறிதாகக் கிடந்தது. எடுத்துப் பார்த்தார்.

ஒரு தாயத்து.

மஞ்சள் கயிறு நடுவில் அது கட்டியிருந்தது.

வெள்ளி அல்லது எவர்சில்வராக இருக்கும். சின்ன குழல். அதன் இரு பக்கமும் மூடி இருந்தன.

அதைப் பார்த்தபோது ரவீந்திரனுக்கு கசப்பாக இருந்தது.

சீ! ஏதாவது துர்தேவதை சமாச்சாரமாக இருக்கப் போறது! என்று நினைப்பு.

உண்மையில் ரவீந்திரன் மன வியாதி மருத்துவத்தில் பெரிய பட்டம் பெற்றவர். ஒரு வருடம் ஜெர்மனியில் தங்கி சர்டிபிகேட் கூட வாங்கி இருக்கிறார்.

ஆனால் மனவியாதி பற்றிய சில மேனாட்டுக் கொள்கைகளில் அவருக்கு நம்பிக்கை கிடையாது.

உதாரணமாக சிலர் மீது இன்னொரு ஆவி ஆக்கிரமிப்பதை அவர் நம்பினார்.

இப்படி இதை 'பாராஸைகாலஜி'யாக எடுத்துக் கொள்ள வேண்டும். மேனாட்டில் பலர் பாரா ஸைகாலஜியை நம்புவதில்லை.

தாயத்தை எடுத்தார்.

கையில் ஒரு தேவதை அமர்ந்தது போல தோன்றியது.

அவசரமாக டிராயரில் அதைப் போட்டு மூடினார்.

சரிதாவை ஆவி பிடித்திருக்கிறது.

வெறும் மனோதத்துவ வழியில் அவளை குணப்படுத்த முடியுமா?

இரவில் ரவீந்திரன் பல நோயாளிகளைப் பார்த்தாலும் சரிதாவின் கேஸ் மட்டும் மனதில் ஓடிக் கொண்டே இருந்தது.

**கா**லையில் ரவீந்திரன் காபி அருந்திவிட்டு அமர்ந்தபோது மணி அடித்தது. போனில் சரிதா பேசினாள்.

- ஸாரி ஸார்! நேத்து ரொம்ப மோசமா நடந்துக் கிட்டேன். மன்னிச்சுக்கணும்! என்று சரிதாவின் குரல் கேட்டது.

திடுக்கிட்டார்.

- ஓ! சரிதாவா? வீட்டுக்கு போன் செய்தீங்களா? கவலை கொடுத்து விட்டீர்களே? என்றார் ரவீந்திரன்.

- இல்லை டாக்டர்! எனக்கு அவமானமா இருக்கு! ரொம்ப ரகளை பண்ணிட்டேன்போல இருக்கு.

- அதனால என்ன? எனக்கு சகஜம்தானே.

- நீங்க எதிர்பார்த்திருக்க மாட்டீங்க?

- இல்லைதான்! இருந்தாலும் எச்சரிக்கையா இருப்பேன்.

- ஸாரி டாக்டர்!

- பரவாயில்லை.

- எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?

- என்ன?

- இங்கே அவசரமாக வந்துட்டுப் போக முடியுமா?

- இப்பவா?

- ஆமாம்! எனக்கு அது சமாதானமா இருக்கும்.

- பார்க்கிறேன்.

- அப்படிச் சொல்லாதீங்க. எனக்கு ஒரு பெரிய நிம்மதி கொடுக்கும்!

- பார்க்கிறேன்.

- அப்படிச் சொல்லாதீங்க. எனக்கு ஒரு பெரிய நிம்மதி கொடுக்கும்!

- சரி வரேன்.

மணியைப் பார்த்தார்.

கிளினிக் தொடங்க அரை மணி நேரம் இருந்தது. கிளம்பினார்.

காரை எடுத்தார். வேகமாகப் போனார்.

சரிதா வீட்டை அடைந்தார்.

கதவைத் திறந்து உள்ளே போனபோது சரிதா ஒரு கையில் பத்திரிகையுடன் சோபாவில் அமர்ந்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும் ரவீந்திரன் முகத்தில் புன்னகை வரவழைத்தார்.

சரிதா ஒரு புன்முறுவலுடன் எழுந்தாள்.

- வாங்க! உட்காருங்க! என்று கூறினாள்.

உட்கார்ந்தார்.

இந்த அழகான இளம்பெண்ணா நேற்று கிளினிக்கில் புயல் வீசினாள்?

முகம் எவ்வளவு நிர்மலமான ஒரு அமைதிப் பூங்கா போல இருக்கிறதே!

ரவீந்திரனிடம் நீண்ட மூச்சு வந்தது.

- உங்களை இப்படிப் பார்க்க சந்தோஷமா இருக்கு!

அவள் மவுனமாக உள்ளே வருத்தப்படுவது தெரிந்தது.

- அப்புறம் எப்படி வீட்டுக்கு வந்தீங்க? என்றார்.

- அதுவா. . . ரொம்ப தூரம் ஓடி. . . ஒரு கோவில் வாசல்லே இளைப்பாறி. . . அப்புறம் நானாகவே வீட்டுக்கு வந்துட்டேன்.

- டிரைவர்?

- அவன் அப்புறந்தான் வீட்டுக்கு வந்தான்.

- ராத்திரி சரியா தூங்கினீங்களா?

- மாத்திரை போட்டுக்கிட்டேன். நல்லா தூங்கினேன்.

அவர் பார்வை அவள் கையில் உள்ள பேப்பரில் விழுந்தது.

- ஸார்! உலகில் என்னெல்லாம் அக்கிரமங்கள் நடக்கிறது பார்த்தீர்களா? என்று பத்திரிகையைக் காட்டினாள் அவள்.

- என்ன என்று கேட்டார் ரவீந்திரன்.

பேப்பரை அவள் அவரிடம் கொடுத்தாள்.

- இதுதானா? என்று சொல்லி, ரவீந்திரன் நிறுத்தினார்.

- சரிதா இதெல்லாம் நடந்துக்கிட்டுதான் இருக்கும். வருத்தப்பட்டா முடியாது தெரிஞ்சுதா? என்றார்.

- உங்க சொந்த விஷயத்துல எதுவும் நடக்கலை! அதான் அப்படிச் சொல்றீங்க! என்று கூறினாள் அவள்.

- ஓ! நடந்தா நானும் வருத்தப்படப் போறேன்! என்றார் அவர்.

- ஸார்! ஒரு கொலை நடந்திருக்கு! ஒரு உயிர் போயிடுத்து! ஒரு ஜீவன் நஷ்டமாயிடுத்து. அது பெரிய சமாச்சாரம் இல்லையா? அந்தக் குடும்பத்தினுடைய வாழ்க்கையே மாறிடுமே! என்று கூறினாள் அவள்.

- அது சரிதான். என்ன செய்ய முடியும்?

- இல்லே ஸார்...! எனக்கு மனது கலக்கமா இருக்கு!

ரவீந்திரன் நிமிர்ந்து பார்த்தார்.

- சரிதா! உங்க மனசு பாதிக்கப்பட்டிருக்கு! நீங்க இந்த பேப்பர் எல்லாம் படிக்கக் கூடாது.

- கூடாதா?

- ஆமாம், ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கு. அதனாலதான்! என்று இழுத்தார் அவர்.

அவள் புருவம் நெளிந்தது.

மனதுள்ளே அவள் யோசிப்பது தெரிந்தது.

பிறகு மெதுவாக - டாக்டர் நீங்க சொல்றது இப்போ புரியுது. நான் இந்த மாதிரிதான் பல செய்திகளைப் படிச்சிட்டு கலக்கமாயிடறேன்! என்றாள்.

- அதெல்லாம் நிறுத்துங்க. அதேபோல டி.வி.யிலே க்ரைம், பாண்டஸீ சீரியல் எதுவும் பார்க்காதீங்க. ஏதாவது கலக்கம் தர்ற சமாச்சாரம் கூடாது. தெரிஞ்சுதா? என்றார்.

- தெரிஞ்சுது! என்று ஈன ஸ்வரத்துடன் கூறினாள் அவள்.

- அப்ப எப்படி ஸார் பொழுது போகும்?

- ஏதாவது ஹாபி வச்சுக்கிடணும்.

- நான் ஏற்கனவே வேலை பார்க்கிறேன்!

- என்ன வேலை?

- பிஸியோ தெரபிஸ்ட்

- எந்த ஹாஸ்பிடல்?

- பல்லவா ஹாஸ்பிடல்.

- ஓ! நீங்க கூட மெடிகல் லைனைச் சேர்ந்தவங்க தானா?

- ஆமாங்க.

- உங்களுக்கா அந்த மாதிரி மனநோய் வந்திருக்கு!

- ஆமாம்.

ரவீந்திரன் அவள் முகத்தைப் பார்த்தார்.

- நீங்க சொல்லுங்க! அன்னிக்கு எங்க கிளினிக்குக்கு வந்தீங்க. திடீர்னு இருட்டாப் போச்சு. அப்போ உங்களுக்கு என்ன நடந்துச்சு?

- சொல்றேன் ஸார்! நீங்க சிரிக்க மாட்டீங்களே?

- இதிலே என்ன சிரிப்பு? என்றார் அவர்.

- இல்லே! எனக்கே சமயத்துலே அதை நினைச்சா சிரிப்பு வரும் ஸார்!

- சொல்லுங்க!

- என் முன்னாலே ஆவியை பார்க்கிறேன் ஸார்!

- ஆவியா? என்றார் அவர்.

- நீங்க அதை நம்பினா நம்புங்க. நம்பாட்டி போங்க! என் கண் முன்னால நிழல்போல் ஒரு உருவத்தைப் பார்க்கிறேன்.

- ஓ! அது என்ன செய்யுது?

- அது வந்து நிக்கறது. என்னை ஒரு மாதிரி பார்க்குது. சில சமயம் என்னைப் பார்த்து ஆக்ரோஷத்தோட கழுத்தை நெரிக்க வரும். அப்போதான் நான் 'வீல்'ன்னு கத்தறேன்.

- ஓ! இதுதான் எப்பவும் நடக்கிறதா?

- ஆமாம்!

- இந்த நிழல் உருவம் எப்போதில் இருந்து வர ஆரம்பிச்சது?

- கிட்டத்தட்ட அஞ்சு வருஷமா இருக்கும் ஸார்!

- முத முதல்லே எப்படி வந்தது சொல்ல முடியுமா?

- சொல்லுவேன் ஸார். அது ஒரு கதை.

- சொல்லுங்க.

# 4

டாக்டர் ரவீந்திரன் சரிதாவை ஊன்றிப் பார்த்தார்.

- சரி சொல்லுங்க!

- எனக்கு ஒரு சிநேகிதி இருந்தாள். நீலான்னு பேரு. கல்லூரியில் நாங்கள் சேர்ந்து படிச்சோம். ரொம்ப அன்னியோன்யமா இருப்போம். எல்லா விஷயத்தையும் பகிர்ந்துப்போம். சாப்பாடும் சரி, விளையாட்டும் சரி, சினிமாவுக்கும் சரி எல்லாத்திலேயும் ஜோடியாத்தான் இருப்போம்.

- அந்தப் பெண்ணுக்கு ஏதாவது நடந்துச்சா? என்று குறுக்கிட்டார்.

- கரெக்டா சொல்லிட்டீங்க. அவ விமன் ஆக்ஸிலெரியில் சேர்ந்தா. அதிலே சேர்ந்து புனாவுக்கோ எங்கேயோ போயிட்டா ஸார்! அதுக்குப் பிறகு லெட்டர் எழுதிக்கிட்டே இருப்பா. நானும் பதில் எழுதிக்கிட்டே இருப்பேன். ஒரு இரண்டு வருஷம் ஆனப்புறம் லெட்டர் வர்றது குறைய ஆரம்பிச்சது. என்ன இருந்தாலும் பக்கத்துல இருக்கிற மாதிரி ஆயிடுமா? அப்புறம் லெட்டர் வர்றது நின்னே போயிடுத்து. நானும் போடறதில்லே. அப்பதான் ஒரு திடுக்கிடும் சம்பவம் நடந்தது.

- என்ன சொல்லுங்க?

- நான் ராத்திரி சாதாரணமா என் தங்கைகளோடு தான் படுக்கிறது வழக்கம். ஆனா அவங்களுக்கு

எக்சாமினேஷன்! ராத்திரியெல்லாம் படிப்பாங்க! அம்மா ரூமிலே தனியா படுத்துப்பாங்க. நான் தனியா என் ரூமிலே படுத்துக்கிட்டு இருப்பேன்.

அந்த ராத்திரிலேதான் திடீர்னு கண் விழிச்சுப் பார்த்தேன். பக்கத்திலே ஒரு உருவம் நின்னுட்டு இருந்துச்சு!

- பக்கத்திலேன்னா உங்க கட்டில் பக்கத்திலேயேவா?

- கொஞ்சம் தள்ளி ஜன்னல் பக்கத்திலே. ஒரு உருவம் மாதிரி தெரிஞ்சது.

- நிஜ உருவம் மாதிரி தெரிஞ்சுதா?

- ஆமாம். அப்படி அழகா ஜன்னல் விளிம்பு மாதிரி இருக்கு பாருங்க. அதிலே உட்கார்ந்திருந்திச்சு!

- முகம் நல்லாத் தெரிஞ்சுதா?

- நல்லாத் தெரியலை. லேசா நிழல் மாதிரி தெரிஞ்சுது. ஆனா அந்த நிழலை நான் புரிஞ்சுக்க முடிந்தது. விளக்கு இல்லாட்டா யார் உருவமும் கருப்பாத்தான் தெரியும். அந்த மாதிரி ஆனா நிஜ உருவம் மாதிரித்தான் தோணித்து, நீலாதான் அவள்!

- அழைச்சுப் பார்த்தீங்களா?

- ஆமாம். நீலான்னு கூப்பிட்டேன். அவ பேசலே. கையை மட்டும் எடுத்து இடுப்பிலே வச்சுக்கிட்டா. என்னை இன்னும் பார்க்கிறா.

- பார்வை தெரிஞ்சுதா?

- ஆமாம். கண்ணு மட்டும் ஸார்! நல்லா துல்லியமா அவ கண்ணு எப்படி இருக்குமோ அதே மாதிரி தெரிஞ்சுது. என்னை அப்படியே பார்த்துக்கிட்டே இருக்கா.

- என்ன நீலா பேசாமல் இருக்கேன்னு நான் சொல்றேன். நான் தூக்கத்திலேர்ந்து எழுந்திருந்திருக் கிறேன் என்பதெல்லாம் கூட அந்த் அந்த சமயத்திலே ஞாபகம் இல்லே.

- ஓ! அப்படியா? ஏதோ சூழ்நிலையிலே அவளைப் பார்த்த மாதிரி இருக்கு. அப்படித்தானே? என்று கேட்டான் ரவீந்திரன்.

- ஆமாம். அது மாதிரித்தான் இருந்தது. அவளைப் பார்த்தவுடனே என் நிலைமை எனக்குத் தெரியலை. ஆனா அந்த நிலைமை ஒரு நிமிஷம் கூட நீடிச்சிருக்காது. சட்டுன்னு ஏதோ தோணித்து. அடடா! ராத்திரியாச்சே நம்ம தூங்கற அறையாச்சே. அவ இங்கே எப்படி வந்தாள்னு ஒரு பயம் வந்துட்டு. திடீரென நீலா நீதானே? அல்லது வேற ஆளா? அப்படின்னு கூச்சல் போட்டுக் கேட்டேன்.

- பதில் சொல்லிச்சா?

- இல்லே. அதுக்கும் கிடையாது. ஆனா என்னை அழுத்தமாப் பார்க்கிறா! ஒரு மாதிரி லேசா சிரிக்கிறா. சிரிப்பை பார்த்தா எனக்கு பயமாகக்கூட தோணிச்சு. அடுத்த வினாடி பாருங்க, நான் ஓ . . ன்னு கத்திட்டேன்.

- அப்புறம் என்ன? என் தங்கை அம்மா எல்லோரும் எழுந்திட்டு கதவைத் தட்டினாங்க. கதவு எப்போதும் திறந்துதான் இருக்கும். உள்ளே வந்து வெளிச்சத்தை போட்டாங்க. நான் மிரள மிரளப் பார்த்துட்டு இருந்தேன்.

- என்னைப் பார்த்து அவங்க பயப்பட்டாங்க.

- உருவம் என்ன ஆச்சு?

- அது போன இடம் தெரியவில்லை. நான் கத்தின உடனே அது மறைஞ்சாச்சு.

- அப்போ அம்மாவுக்கு என்ன பதில் சொன்னீங்க?

- அம்மா என்னைப் பார்த்து, உடம்பெல்லாம் தடவி விட்டாங்க. முகத்தை துடைத்து விட்டாங்க. தண்ணியை எடுத்து முகத்திலே அடிச்சாங்க. கடைசியிலே நான் பெருமூச்சு விட்டுட்டே இருந்தேன்.

என்னடி? என்ன சமாச்சாரம்? என்ன பார்த்தேன்னு அம்மா கேட்டா. நான் சொன்னேன். இந்த மாதிரி நான் ஒரு கெட்ட கனவு கண்டேம்மா. அதனாலே கத்திட்டேன்னு பொய் சொன்னேன்.

- ஓ! அம்மா சமாதானம் ஆகி போயிட்டாங்களா?

- ஆமாங்க! நீ இனிமே தனியா படுக்கக் கூடாது. படுத்தா இந்த மாதிரிதான்னு சொல்லி விட்டு தங்கச்சியை பக்கத்திலே இருக்க விட்டுட்டு போயிட்டாங்க.

- சரி! அப்புறம் என்ன நடந்தது? சொல்லுங்க!

- ஸார்! மறுநாளைக்கு எனக்கு என்னவோ மனசு சரியாவேயில்லை. எனக்கு நடந்ததெல்லாம் உண்மை தாண்ணு தோணிட் டே இருக்கு. ராத்திரி வந்த அந்த நிகழ்ச்சியை நான் கனவுன்னு அவங்ககிட்டே எல்லாம் சொல்லிட்டேன். ஆனா என்னை சமாதானப்படுத்திக்க முடியவில்லை. அது நிஜமான உருவம் ஸார்! அழகாக வந்து ஜன்னல் விளிம்பிலே உட்கார்ந்திருந்தது. யாரும் அது உருவம் அல்ல என்று சொல்ல முடியாது.

- சரி அப்புறம்?

- இருங்க! அப்புறம்தான் கதை. எனக்கு ஒருநாள் இல்லை. இரண்டு நாள் இல்லே ஒரு வாரமும் அந்த உருவம் என்னுடைய மனத்தில் நின்று கொண்டே இருந்துச்சு. ராத்திரி என் கூட அம்மா படுத்துக்கிட்டாங்க. அதனால மற்ற நாள் எனக்கு பீதி எதுவும் தெரியவில்லை. ஆனா மனசில் என்னவோ நான் நிஜமா எதையோ

பார்த்துட்டு முழிக்கிறேன்னு தெரிஞ்சு போச்சு! நானும் படிச்சவதான். உலகத்திலே ஆவி, கீவி எல்லாம் பொய் என்கிறது தெரியும். ஆனா என் கண் முன்னாடி ஒரு உருவத்தைப் பார்த்த பிறகு நான் அதை நம்பாமல் இருக்க முடியவில்லை.

- சரி, அப்புறம் என்ன செய்தீங்க?

- என்னுடைய சிநேகிதிக்கு லெட்டர் எழுதணுமின்னு நினைச்சேன். அட்ரசை போய் தேடி எடுத்திட்டு வந்தேன். உடனே அவளுக்கு கடிதம் எழுதினேன். 'நீலா! நம்ப ரெண்டு பேரிடம் இருந்தும் கடிதத் தொடர்பு நின்று ரொம்ப நாளாச்சு! இப்ப இந்த கடிதம் எழுதறேன். ஒரு வாரத்துக்கு முன்னால போன வெள்ளிக்கிழமை நீ பன்னிரெண்டு மணிக்கு என் கட்டில் பக்கத்திலே வந்து நிக்கற மாதிரி பார்த்தேன். அது நீயேதான். அப்புறம் வெளிச்சம் போட்டுப் பார்த்ததிலே நீ இல்லாமல் போயிட்டே ஆனா உனக்குத் தெரியும். நான் ஆவிகளை எல்லாம் நம்ப மாட்டேன். அன்னிக்கு நின்னது நீதான்னு சத்தியமா சொல்லுவேன். அது எப்படி நடந்தது? என்று என்னாலே ஊகிக்க முடியல்லே. இதெல்லாம் உலகத்திலே விந்தைகளா இருக்கும்னு நினைக்கிறேன். தயவு செய்து போன வெள்ளிக்கிழமை ராத்திரி சுமார் பதினோரு மணிக்கு நீ எங்கிருந்தே? என்ன செய்தே? என்பதை யெல்லாம் எனக்குத் தெரிவிக்க முடியுமா? என்று உன் அன்புள்ள சரிதான்னுதான் கடிதம் எழுதிட்டேன்!

- ஓ! நல்ல வேலை செய்தீங்க!

- அப்புறம் அதை போஸ்ட் பண்ணின பிறகு ஒவ்வொரு நாளும் அவள்கிட்டேயிருந்து பதில் வருமான்னு காத்திருந்தேன். கிட்டத்தட்ட பத்து நாள் ஆனபிறகுதான் கடிதம் வந்திச்சு!

- பதில் எழுதினாளா?

சரிதா எழுந்தாள்.

- அந்தக் கடிதத்தை நீங்களே பாருங்க! எனக்கு நிக்கிறதுக்கே பயமாயிருக்கு! என்று சொல்லி அலமாரிப் பக்கம் போய் ஒரு புத்தகத்துக்கு இடுக்கில் பத்திரமாக வைத்திருந்த கடிதத்தை எடுத்து அவரிடம் காட்டினாள்.

அவர் அதைத் திறந்து கொண்டிருந்தபோதே, அவள் கண்கள் பெரிதாக விரிந்தன. முகம் விகாரமாகியது!

— **அ**தே மாதிரி என்றான் போரன்சிக் நடேசன்.

சுருக்கென்று தைத்தது! செந்தில் படபடத்தான்.

- ஒரு துளிப் பிசகில்லை! வயத்திலே கத்தியைப் போட்டுக் குடைஞ்சிருக்கான். கிளவுஸ் போட்டு நடேசன் பிரேதத்தை சோதித்துக் கொண்டிருந்தார். பிரேதம் பிறந்த நிலையில் கிடந்தது.

அதே பிரேதத்தின் மேல் மாலை போட்டு மரியாதை செய்ய வேண்டிய கூட்டம் ஒன்று ஏற்கனவே வாசலில் கிடந்தது.

ஆனால் இங்கே கவர்ன்மெண்ட் மலிவு கொட்டேஷனில் எடுத்த சாதாரண கடப்பைக் கல்லில் பல கறைகளுக்கு மத்தியில் அந்தச் சடலம் கிடந்தது.

கழுத்திலிருந்து இடுப்பு வரை இரண்டாக வகிர்ந்திருந்தார்கள்.

- கத்தியைக் கூட அதே நீளத்திலேதான் உபயோகிச்சிருக்கான். நாலு அங்குலக்கத்தி!

- அப்போ இது ஒண்ணே போதும், ஒரே மாதிரிக் கொலைன்னு தெரியறதுக்கு! என்று மெல்லிதாகக் கூறினான் செந்தில்.

- எஸ் செந்தில்! போன கொலை கூட ஒரு பெரிய மனிதர்தானே?

- ஆமாம்! துரைசாமின்னு பேரு!

- நீங்கதானே விசாரிச்சீங்க!

- ஆமாம்!

- ஏதாவது துலங்கிச்சா?

- இல்லை. அதனால்தான் இந்த கேஸ்லே எச்சரிக்கையா இருக்க விரும்பறேன். ஏதாவது ஒரு தடயம் பிடிச்சுக் கொடுங்க நடேசன்!

- பார்க்கறேன் செந்தில்! என்னால ஆன மட்டும் செய்யறேன்!

அடுத்த 24 மணி நேரமும் சிவராமின் சடலம் அதன் சட்டை, பாண்ட் எல்லாவற்றையும் போரன்சிக் நிபுணர்கள் நுட்பமாக ஆராய்ந்து விட்டார்கள்.

எதுவும் கிடைக்கவில்லை என்ற துரதிர்ஷ்ட பதில்தான் வந்தது.

'ரிச்சி' கிளப்பில் எட்டு மணிக்கு இரவு அட்டகாசமாக இருந்தது.

- சுரேஷ்! என்ற ஒரு குரல்.

- இரு! ஒண்ண போட்டுட்டு வரேன்! என்று பதில்.

- இதோட மூணா நாலா? என்று கேள்வி.

- அஞ்சு! இன்னும் ஸ்டெடியா இருக்கேன் பாரு!

வட்டமாக ரம்மி!

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு சகா!

பக்கத்து ஸ்டூல்களில் கண்ணாடிக் கோப்பைகள்.

உள்ளே பொன்நிற திரவங்கள்.

- பரசு இருக்கானா சுரேஷ்?

- இல்லே.

- வராந்தாவிலே பாரு!

- மாடிக்குப் போயிட்டான்.

- ஓ! மாடிக்கு ரெண்டு வந்திருக்கு.

- புதுசுங்களா?

- எல்லாம் பழைய புதுசுதான்.

யாரோ மாடிப்படிக்கு ஓடினார்கள். நுனிப் படிகளில் நின்று கொண்டு,

- பரசு! உன்னைத் தேடி ஆள் வந்திருக்கு! என்று கூப்பிடும் சப்தம்.

பரசுக்கு நாற்பது இருக்கும். டீ ஷர்ட் பரந்த மார்பை மூடியிருக்க, கால் சட்டைகளைப் பிதுக்கிக் கொண்டு தொடைகள் துருத்தியிருந்தன.

- யார் ஸார்?

மாடியில் இருந்து இறங்கி வந்து லவுஞ்சு சோபாவில் பாதி நிழலாகத் தெரிந்த நபரைப் பார்த்து பரசு கேட்டான்.

- என் பெயர் செந்தில்! போலீசைச் சேர்ந்தவன்.

- ஓ! என்று நீட்டமாகக் குரல் கொடுத்தான் பரசு.

- உங்ககிட்டே சில விஷயங்கள் கேட்கணும்! சிவராம் உங்க நண்பர்தானே?

- ஆமாம்.

- இந்த கிளப்புக்கு தினம் வருவார்ன்னு சொன்னாங்க.

- ஆமாம்.

- நீங்க கொஞ்சம் மனம் திறந்து பேசணும். இங்கே பெண்கள் உண்டா?

- அபிஷியலா கேட்டா இல்லை!

- நான் அப்படிக் கேட்கலை!

- ஸார்! மேலே மாடியில வசதி இருக்கு! வேணுங்கிறவங்களுக்குக் கிடைக்கும்.

- பொண்ணுங்க அங்கே இருக்காங்களா?

- இல்லை சொல்லி விட்டா வருவாங்க!

- யார்கிட்டே சொல்லணும்!

- ஒரு போன் நம்பர் இருக்கு. இந்தாங்க! குறித்துக் கொடுத்தான்.

- சிவராமுக்கு இதிலே சுவாரஸ்யம் உண்டா?

- உண்டு!

- அவருக்கு 'பெட்' யாரு?

- ராகினின்னு பேரு.

- மேலே இருக்காளா?

- இல்லை.

- ஏன்?

- அவள் கொஞ்சம் காஸ்ட்லி! யாரும் பக்கத்திலே போகமாட்டாங்க!

- ஏன் காஸ்ட்லி!

- அசல் பதினாறு

- புரியுது! இந்தப் பெண் விஷயத்திலே ஏதாவது தகராறு உண்டா?

- ஏதோ கசமுசா உண்டுன்னு சொல்வாங்க! அதிகம் தெரியாது.

செந்தில் நாசுக்காக மாடி ஏறிப் பார்த்தான். அங்கே அறைக்குள் இரண்டு இளசுகள் தெரிந்தார்கள். நல்ல சிவப்பு நிறம். குறுகுறுவென்று பார்த்துக்கொண்டே

- ராகினி தெரியுமா? அவள் அட்ரஸ் என்ன? என்று விசாரித்தான் அவன்.

# 5

டாக்டர் ரவீந்திரன் அந்தக் கடிதத்தைத் திறந்து படித்தார். ராணுவத்தில் இருந்து அது வந்திருந்தது.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு பனிரெண்டு மணி சுமாருக்கு நீலா இறந்து விட்டாள் என்று அதில் குறிப்பிட்டிருந்தது.

அவளுடைய சிநேகிதிக்கு தங்கள் வருத்தத்தை தெரிவிப்பதாகவும் ராணுவத்தினர் எழுதி இருந்தார்கள்.

ரவீந்திரன் திரும்பினார்.

சரிதாவின் முகம் அதே விகாரத்தில் இருந்தது.

- சரிதா!

அவள் திடுக்கிட்டதுபோல் பார்த்தாள். மெள்ள அவள் முகம் சீராக ஆரம்பித்தது.

கடிதத்தை நீட்ட அவள் வாங்கிக் கொண்டாள்.

- ஸோ. . . என்று சொல்லி அவர் நிறுத்தினார்.

- ஸார்! இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தா அதை நம்பாமல் இருக்க முடியுமா?

அவர் உடனே பதில் சொல்லவில்லை. கேள்வி அப்படியே தொக்கி நின்றது.

இப்பொழுது அவள் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

அவரது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

- மேடம். . ! என்றார். உண்மையிலேயே கிழக்கத்திய தத்துவத்துக்கும் மேற்கத்திய தத்துவத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கு! இப்போ அந்த ஆவி வந்ததை மேற்கத்திய மனோதத்துவம் ஒத்துக்காது. ஆனா பாராசைகாலஜி இதை ஒத்துக்கும். உங்களுக்கு நேர்ந்தது ஒரு அபூர்வ விஷயம்! உலகம் பூரா பலருக்கு மனசில தோணி இருக்கு. சிலவங்களுக்கு நாளை நடக்கப் போற விஷயமே இன்னிக்கே மனசிலே தோணிடும்! என்று கூறினார் ரவீந்திரன்.

அவளுக்கு பெரிய பெருமூச்சு வந்தது.

அவர் அனுதாபத்துடன் பேசியது அவள் மனதைத் தொட்டது.

- இந்த மாதிரி ஏதாவது ஒரு உருவம் அடிக்கடி உங்களுக்கு வருதா?

- ஆமா ஸார்!

- இதே உருவம்தானா?

- இதே உருவம் மட்டுமல்ல, வேறு உருவமும் வருது. இவளுடைய தோற்றம் போலவும் தோணுது. சமயத்துல இல்லாமலும் இருக்கு! என்று கூறினாள் அவள்.

- இதைப் பார்த்ததும் ராத்திரி பயப்படுவீங்களா?

- ஆமா ஸார்! ராத்திரி வந்துடுத்துன்னா உருவம் சும்மா நிக்கறது இல்ல. நேரே வந்து கழுத்தைப் பிடிக்கப் பார்க்குது.

- நீங்க உடனே கண்ணை விழிச்சுப் பார்க்கலாமில்லே?

- நான் முழிச்சிட்டு எழுந்திருக்கப் பார்க்கிறேன். ஆனா கை, கால் ஓடுறதில்லை. அந்த பிரமை அப்படியே

என் கழுத்துப் பக்கம் வந்து உட்கார்ந்து அமுக்கிற மாதிரிதான் தோணுது.

- ஏதாவது குறிப்பிட்ட நாள்லேதான் வருதா?

- இல்லே ஸார்! எப்ப வேணும்னாலும் வந்துடும்.

- சரி! அது வர்ற விஷயம் உங்களுக்கு முன்னாடியே சூசகமாகத் தெரிந்து போகுதா?

- இல்லே ஸார்! அது மாதிரி எதுவும் தெரியல்லே. இருட்டு அதிகமாகப் போயி ஒரே நிசப்தம் ஆயிடுத்துன்னா எனக்கு உண்மையிலேயே மனசிலே சிலுசிலுன்னு ஒரு சலசலப்பு ஆரம்பிச்சிடுது. அதிலேர்ந்து இந்த திடீர் உருவம் வந்துடுது.

- அதாவது அந்த உருவம் வர ஆரம்பிக்கிறதுக் குள்ளேயே நீங்க அந்த உருவத்தை எதிர்பார்க்க ஆரம்பிச்சிடறீங்க இல்லே! என்று கேட்டார் அவர்.

- டாக்டர்! என்று சொல்லி நிமிர்ந்து பார்த்தாள்.

- எதிர்பார்த்தும் வருது, எதிர்பார்க்காமலும் வருது.

- அப்படி வர்றதை ஒரு நாள் நானும் பார்க்கணும்!

- உங்களுக்குத் தெரியாது.

- பரவாயில்லை! உங்கள் கண்ணுக்குப் பட்டாச்சுன்னா போதும்! நான் உங்களை ஆராய்ச்சி பண்றேன்!

- ஒரு இரவு நானே வரேன் ஸார்! என்றாள் அவள்.

இன்ஸ்பெக்டர் செந்தில் புறநகர்ப் பகுதிகளுக்குப் போனார்.

ராகினியின் பிளாட் தேடுவது கஷ்டமாக இல்லை! புதுப்புது பெயர்களில் கட்டிடம் நவீனமாக நின்றன.

'மலர்' என்ற கட்டிடத்தின் மேல் பிளாட்டில் ராகினி!

உள்ளே போனபோது திகில் நிறைந்த ராகினி அவரை கலக்கத்தோடு பார்த்தாள்.

போலீஸ் என்றதும் சப்தநாடியும் ஒடுங்கியது.

உண்மையில் பதினாறுதான்! 'என் காதல் நிலா' என்று ஒரு படம் எடுக்கலாம். அவளை டூயட் பாட வைக்கலாம்! பாவாடை தாவணி போட்டு துள்ள வைத்து,

உடம்புப் பகுதிகளை சில எக்கச்சக்க கோணங்களில் காட்டினால் நூறு நாள் ஓடும். . .

இங்கே சோகமாக அவரைப் பார்த்திருந்தாள்.

இன்னும் உலகம் தழுவாத மேனி!

புத்தம் புதிதாகத் தெரிந்தாள்.

கண்ணில் தெரிந்த அந்த அறியாமை பாவனைக்கே பணத்தை அள்ளி வீசலாம். அது அவளை இன்னும் இளமையாகக் காட்டிற்று.

- உட்காருங்க! என்று அவரைப் பார்த்துக் கூறினாள்.

- சிவராம் தெரியுமா?

- தெரியுங்க.

- அவர்தான் உன்னைக் காப்பாத்தறாரு?

- ஆமாங்க.

- உங்கூட யார் இருக்காங்க?

- யாருமில்லீங்க? தனியாகத்தான் இருக்கேன்.

- சிவராம் இறந்தது தெரியுமா?

- தெரியுங்க!

- யார் சொன்னாங்க?

- கம்பெனிக்கு போன் செஞ்சேன்.

- எப்போ செஞ்சீங்க?

- நேத்திக்கு.

- நடந்தது கொலைன்னு தெரியுமா?

- சொன்னாங்க!

- அவருக்கு விரோதி யாருன்னு தெரியுமா?

- தெரியாது.

- சிவராம் அதைப் பத்தி சொன்னதில்லையா?

- இல்லைங்க.

- சிவராம் இங்கே வர்றது அவர் வீட்டுலே தெரியுமா?

அவள் திகைத்தாள்.

- தெரிஞ்சதைச் சொல்லிடணும். அப்போதுதான் உங்களைத் தொந்தரவு செய்யாம விட்டுருவோம்! என்றான் செந்தில்.

- ஸார்! அவங்க வீட்டுலே தெரியும் ஸார்! அவங்க எனக்குப் போன் பண்ணி மிரட்டியிருக்காங்க!

- மிரட்டினது யாரு சிவராம் மனைவியா?

- ஆமா ஸார்!

- என்ன மிரட்டினாங்க?

- நீ என் புருஷனை விட்டுடு! இல்லாட்டி உன் உயிருக்கே ஆபத்துன்னு.

- நீங்க இதை சிவராம்கிட்ட சொன்னீங்களா?

- இல்லை ஸார்!

- ஏன் சொல்லலை?

- அப்புறம் அவர் போய் அந்த அம்மாவை திட்டுவாருங்க! அடிப்பாருங்க!

- அடிப்பாரா?

- ஆமாங்க. அவர் [illegible] இருக்காரு. அதனாலதான் அமமாவுக்கு [illegible] கொடுக்கக் கூடாதுன்னு சொல்லலைங்க!

யோசித்தான் [illegible]

- சரி! பெண்தா[illegible]ங்களா?

- ஆமா ஸார்!

- ஆண் குரல் எதுவும் கேட்டதில்லை?

- இல்லை ஸார்! ஆனால். . .

- சொல்லுங்க.

- இவர் நண்பர் ஒருத்தர் ராமலிங்கம்னு! அவர் மிரட்டியிருக்காரு!

- அவர் ஏன் மிரட்டினாரு?

- அவர்தான் என்னையும், என் அக்காவையும் நெல்லூரிலேந்து அழைச்சிட்டு வந்[illegible]

- சரி!

- ராமலிங்கம் வயசானவருங்க. அதனாலே அக்கா என்னை அவர்கிட்டே போகவிடாம சிவராம்கிட்டே ஒப்படைச்சுட்டாங்க!

- ராமலிங்கத்துக்கு தெரியாமலா?

- ஆமாம்! அவர் கேட்டப்ப ராகினி ஊருக்குத் திரும்பிப் போயிட்டாள்னு எங்க அக்கா பொய் சொல்லிட்டாங்க.

- அப்புறம்?

- நான் இங்கேதான் இருக்கேன்! சிவராமோட இருக்கேன்கிற விஷயம் ராமலிங்கத்துக்குப் பின்னாடி தெரிஞ்சுப் போச்சு!

- ஓ! ஆபத்தாச்சே!

- அதிலேந்து எங்களுக்குள்ளே சண்டைங்க! அந்த ராமலிங்கம்தான் என்னை மிரட்டுவாரு!

- என்ன மிரட்டுவாரு!

- மரியாதையா அவனை விட்டுட்டு வந்திரு! இல்லாட்டி எது வேணும்னாலும் நடக்கும்னு கத்துவாரு!

மணி அப்போது அடிக்க, அவள் அவரைப் பார்த்துக் கொண்டே டெலிபோன் பக்கம் போனாள்.

எடுத்து - ஹலோ என்றாள்.

அடுத்தக்கணம் அவள் முகம் விகாரமாகியது.

சரேலென்று செந்தில் எழுந்தான். அவள் அருகில் போய் கையை நீட்டினான்.

அவள் 'ஹாய் ஹாய்' என்று பதில் சொல்லி வந்தாள்.

பிறகு படக்கென்று நிமிர்ந்தாள். - வச்சுட்டாங்க! என்றாள்.

- யாரு?

- ஒரு பெண்ணுன்னு சொன்னேன் இல்லே அவள்! அவள் குரல் பதறியது. போனை வைக்கப் போனவள் அதைக் கீழே நழுவ விட்டாள். அது கீழே தொங்கி ஊசலாடியது.

செந்தில் அதை எடுத்து சரியாக வைத்தான்.

- அதே பழைய பெண்தானா?

- ஆமாங்க!

- என்ன சொன்னா?

- சிவராம் போயாச்சு. அதோடு தீர்ந்துப் போயாச்சுன்னு நினைக்காதே! உன்னையும் முடிச்சிட்டுத்தான் மறுவேலைன்னு சொன்னா.

செந்தில் முகத்தில் கை வைத்து யோசித்தார். சிறிது நேரம் அதே நிலை.

பிறகு, - ஏன் மேடம்? குரல்லேர்ந்து அவள் வயது தெரிகிறதா?

- ஓரளவு ஊகிக்கலாம். 28 அல்லது 30 இருக்கலாம். செந்தில் எழுந்தார்.

- ஸார்! இப்போ எனக்கு பயமா இருக்கே.

- உங்க அக்காதான் இப்போ இருக்காங்க இல்லையா?

- ஆமாம் ஸார்! ஆனா ரெண்டு பேரும் பெண்களாச்சே?

- ஓ! அப்படியா? வேற ஆண்பிள்ளை இங்கே கிடையாதா?

- கிடையாது!

இன்ஸ்பெக்டர் செந்தில் யோசித்தார்.

ஃ○ஃ

# 6

— சரி. நான் இங்கே காவல் போடறேன்.

ராகினியிடம் சொன்னார் செந்தில்.

- போலீஸ் நிறுத்துவீங்களா?

- போலீஸ்தான். ஆனா சாதாரண உடையிலே இருப்பாங்க.

- அப்போ கவலை இல்லையா?

- இருக்காது. அப்பப்போ போலீஸ் வேன் கூட இந்தத் தெரு வழியாகப் போகும். உங்க வீட்டைக் கண்காணிப்பாங்க! நீங்க அனாவசியமா கதவைத் திறக்கக் கூடாது!

- புரியுது ஸார்!

- நல்லத் தெரிஞ்சவாளைப் பார்த்துத்தான் கதவைத் திறக்கலாம். அப்புறம் வெளியில போறதுன்னா துணையோடு போகணும்.

- சரி ஸார்!

ஸ்கூட்டரில் செந்தில் கிளம்பியபோது மனம் கலங்கியது.

சட்டுப்புட்டென்று கேசை முடித்துவிட நினைத்திருந்தான்.

-ஆனால் அது போகும் போக்கைப் பார்த்தால் நீளும்போல இருந்தது.

ஒரு பெண் மிரட்டினாளே!

அவள் ஏன் மிரட்ட வேண்டும்?

அவள் பின்னால் யாராவது ஆண்பிள்ளை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த துணிச்சல் வருமா?

- சரி! ஆணே மிரட்டி இருக்கலாமே! அவனது குரல் வெளியில் தெரிந்துவிடும் என்று பயப்படுகிறானா?

அது யார் இந்த ராமலிங்கம்?

அவர்தான் இந்தப் பெண் ராகினியையும், அவள் அக்காவையும் நெல்லூரில் இருந்து அழைத்து வந்திருக்கிறார் என்று கூறினாளே.

அவர் பெரிய மனிதர் என்றாள்.

அவர் ஏன் இந்த வேலை செய்யவேண்டும்?

சரி, இதில் ராகினிக்கு சிவராம் தொடர்பு ஏற்பட்டபோது அதை ராமலிங்கம் விரும்பவில்லை என்று தெரிகிறது.

அதனால் ஏதாவது சிக்கல் வந்திருக்குமா?

ராமலிங்கத்தைப் பற்றி விசாரிக்க பெரிய கஷ்டமாக இல்லை.

காலை பதினொரு மணிக்கு ராமலிங்கம் நடத்தும் 'ஈஸ்டர்ன் லெதர்ஸ்' நிறுவனத்தில் போய் இறங்கினான் செந்தில்.

சின்ன பங்களாவாக இருந்தது. அந்தக் கம்பெனிக் கட்டிடம்.

சுற்றி வர பசுமைத் தோற்றம்!

செடிகள் எல்லாம் கத்தரிக்கப்பட்டு நல்ல டிரிம் ஒழுங்கில் நின்றன.

நடைபாதை கூட துப்புரவாக நேர்கோட்டில் இருந்தது.

கட்டிடம் ஒரு சின்னப் பெண்போல் அழகு தெரிந்தது.

உள்ளே ரிசப்ஷனில் நின்றான்.

குளுமையான உட்புற நடு கவுண்டரில் ஒரு 'பளிச்' இளமை மின் அடித்தது.

அவள் முகத்தில் ரொம்ப பிஸிகளை காட்டினாள்.

போனை கீழே விடவே இல்லை.

கையிலும் முகத்திலும் தவழ்ந்து கொண்டே இருந்தது.

செந்தில் அருகில் போய் தன் கார்டைக் காண்பித்ததும், அவள் அதை சாதாரணமாக எடுப்பது தெரிந்தது.

பிறகு போனில் பேசினாள்.

அடுத்தகணம், - வாங்க! என்று அவனை உள்ளே அழைத்து கொண்டு போனாள்.

ஒரு பாலீஷ் போட்ட கதவின் முன் அவள் நின்றாள்.

அதன் பித்தளைக் கைப்பிடி மஞ்சளாக மின்னியது.

கதவைத் திறக்கும்போதே உள்ளே இருட்டாக இருந்தது.

- வாருங்கள்! என்று சொல்ல அவனும் நுழைந்தான்.

ஏசியின் முதல் திவலை அவனைத் தொட்டது.

அடுத்தாற்போல் ஒரு கண்ணாடிக் கதவு.

அந்த கதவும் திறக்க உள்ளே சென்றான்.

உள்ளே ஏசியின் குளிர் அதிகமாக இருந்தது.

குளித்து விட்டாற்போல் உணர்ச்சி!

ரிசப்ஷனிஸ்ட் அங்கே நிற்காமல் கதவுகளை மூடிக் கொண்டு திரும்பிப் போனாள்.

- வாங்க! வாங்க! என்று சொன்னபோதுதான் செந்திலின் கண்கள் அந்தக் கட்டிலுக்கு பாய்ந்து சென்றன.

கட்டிலில் படுத்திருந்த ராமலிங்கம் சற்று பிரயத்தனத்துடன் எழ முயன்றார்.

- உடம்பு சரியில்லையா? படுத்துக்குங்க! என்று செந்தில் கூறினான்.

- உட்காரணும்! என்று சொல்லி கைகளை கூப்பினார் ராமலிங்கம்.

எதிரே சோபா நாற்காலியில் உட்கார்ந்தான்.

அவர் இரண்டு திண்டுகளைத் தூக்கிப் போட்டு சாய்மானமாக சாய்ந்து கொண்டார்.

- மன்னிக்கணும்! எனக்கு அல்சர்! பெப்டிக் அல்சர்!

முகத்தில் வேதனை தெரிந்தது.

- இந்த சமயத்தில் நான் யாரையும் கூப்பிட்டு பேசறதுக்கு விரும்பமாட்டேன். ஆனா நீங்க போலீஸ்னு தெரிஞ்சதும் கூப்பிட்டேன்.

செந்தில் பேசாமல் இருந்தான்.

- சிவராம் விஷயமாகத்தானே விசாரிக்க வந்திருக்கீங்க?

அவரே விஷயத்துக்கு வருவது ஆச்சரியமாக இருந்தது.

- ஆமாம்! என்பது போல் தலையை ஆட்டினான் செந்தில்.

- நான் இப்போ உங்களை உள்ளே கூப்பிட்ட காரியத்தை சொல்றேன். எனக்கும் சிவராமை கொன்னவன் யாருன்னு தெரிஞ்சாகணும்! என்று கூறினார்.

- ஏன்? என்று கேட்டான் செந்தில்.

- நானும் சிவராமும் இப்போ கொஞ்ச நாளாப் பிரிஞ்சிருக்கோம். இருந்தாலும் அவன் செஞ்ச நன்மைகளை மறந்திட முடியாது. ஒண்ணு ரெண்டு உதவியில்லே. இந்த ஏசி அறையிலே நிம்மதியா படுத்துட்டு இருக்கிறேனே அதுக்கு காரணம் அந்த சிவராம்தான்! இப்போ சாப்பிடுற சோறு அவனுடையது. அவன் பல்லாண்டு வாழ்றதைத்தான் நான் பார்க்க விரும்பினேன். இப்படி அல்பாயுசிலே யாரு கொன்னாலும் அவனை விடக்கூடாது. நீங்க என்ன சொல்றீங்க? என்று செந்திலைப் பார்த்து பார்வையைத் திருப்பினார்.

செந்திலுக்கு பல எண்ணங்கள் ஓடின. நாம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இவரே விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போகிறாரே என்று நினைத்தான்.

தன் மேல் இருக்கும் குற்றத்தை மறைப்பதற்காக இப்படிச் சொல்கிறாரோ அல்லது தன்னை யாரும் சந்தேகப்படக்கூடாது என்பதற்காக இந்த விதமாக பேசுகிறாரோ என்று நினைத்தான்.

- மிஸ்டர் ராமலிங்கம்! நான் இங்கு விசாரணைக்கு வந்தது இந்த கேசை முடிக்கிறதுக்குத்தான். நீங்களும் அதையே சொல்றீங்க! என்று அழுத்தமாகக் கூறினான் செந்தில்.

- ரைட்! உண்மை ஸார்! நீங்க இந்த கொலையை எப்படியும் கண்டுபிடிச்சிடணும். காரணம் எனக்கு சிவராம்

மேலே அவ்வளவு அன்பு. அவ்வளவு பாசம். அவனை ஒருத்தன் சாகடிச்சான்னா அந்த ஆசாமியை விடக் கூடாது. இதை நீங்க நல்லா புரிஞ்சிருப்பீங்க என்று நினைக்கிறேன் என்றார் ராமலிங்கம்.

அவருக்கு ஐம்பது நிறையும் பிராயம் இருக்கும். தலையின் பின்புறத்தில் சற்று வழுக்கை விழுந்திருந்தது.

- நிச்சயம் செய்யலாம், நீங்க என்ன உதவி செய்வீங்க? என்று கேட்டான் செந்தில்.

- ஏன்? உங்களோட அன்னன்னிக்கு பேசி, முன்னேற்றத்தை தெரிஞ்சிக்கலாம். எனக்கு ஏதாவது ஆலோசனை தோணினா சொல்லலாம். என் காரை உங்க பொறுப்பிலே விட்டுடறேன். இந்தக் கேஸ் விஷயமா ஆராய்ச்சிக்கு எங்கெல்லாம் சுத்தினாலும் சரி, நான் அதுக்கு ஒத்துழைக்கிறேன்! என்று கூறினார் அவர்.

இன்ஸ்பெக்டர் செந்திலுக்குப் புன்னகை வந்தது.

- ரொம்ப நன்றி ஸார். எனக்கு இப்போ கார் எல்லாம் வேண்டாம். வேண்டியது உங்க ஒத்துழைப்புதான்.

- அதைத்தான் தரேன் என்று சொல்கிறேனே.

- நீங்க ராகினியின் அக்காகிட்டே போய் சண்டை போட்டீங்களா மிஸ்டர் ராமலிங்கம்? என்று கேட்டான் செந்தில்.

ஒரு கலக்கம் அவர் முகத்தில் தோன்றியது.

- ஆமாம் ஸார்! திட்டினேன். அதனால என்ன?

- மிஸ்டர் ராமலிங்கம்! நீங்க அவர் நண்பர். ஆனா உங்க மனசுல ஏதோ நயவஞ்சகம் இருந்திருக்குன்னு நான் ஏன் நினைக்கக் கூடாது.

- இன்ஸ்பெக்டர் என்று அழுத்தமாக கூறினார் ராமலிங்கம். - என்னஅபாண்டமாக பேசறீங்க?

- நான் போலீஸ் அதிகாரி. அப்படித்தான் பேச முடியும்! என்றான் செந்தில்.

- பேசிக்கிறதுன்னா பேசிக்குங்க. அதைப் பத்தியெல்லாம் அக்கறையில்லை. ஆனா நான் உங்க விசாரணைக்கு உட்பட மாட்டேன். உங்களுக்கு நான் எந்தத் தகவலும் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

- இல்லே, கட்டாயம் கொடுக்கணும். இல்லாட்டா உங்க மேலே சந்தேகம் வலுத்துடும்.

ராமலிங்கம் பேசவில்லை.

- கொலை நடந்த அன்னிக்கு நீங்க எங்கே இருந்தீங்க? குறிப்பா அன்னிக்கு ராத்திரி நீங்க எங்கே இருந்தீங்க? என்று கேட்டான் செந்தில்.

அவனைப் பார்த்து அப்படியே விழித்துக் கொண்டிருந்தார் ராமலிங்கம்.

ராமலிங்கம் சிறிது நேரம் செந்திலைப் பார்த்தார்.

உதடு மடிந்தது.

- இன்ஸ்பெக்டர்! நான் என் வீட்டில்தான் இருந்தேன்! என்று கூறினார் அவர்.

- நிச்சயமாவா? என்று கேட்டான் செந்தில்.

- என் பேச்சை நம்பினா அதுதான் உண்மை! இதற்கு மேல் எதுவும் சொல்வதற்கு இல்லை! என்று கூறினார் அவர்.

- சரி இதுலே பின்னாலே மாற்றம் எதுவும் வராதே?

- ஏன் ஸார் வரப்போகுது? இருந்தாலும் நீங்க எப்போ விருப்பப்பட்டாலும் வரலாம். இப்போ எனக்கு வயித்து வலி தாங்கலை. நான் படுக்கலாமா?

- ரைட் ஸார்! வரேன்! பின்னாடி எப்ப வேணும்னாலும் வருவேன்.

சட்டென்று செந்தில் எழுந்தான்.

வெளியில் போனதும் ஜீப்பில் ஏறிப் பறந்தான்.

அவன் நினைவுகளும் பறந்தன.

புகழ்பெற்ற இன்ஸ்பெக்டர் சிங் அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது.

ஒரு கேஸ் விசாரணை செய்யும்போது நம்முடைய உணர்ச்சிகள் எந்தவிதத்திலும் பாதிப்பு ஆகக் கூடாது.

அப்பொழுதுதான் உண்மையான விசாரணை நடக்கும் என்று கூறி இருக்கிறார்.

யோசனைகள் தொடர ஆபீஸ் வந்து சேர்ந்தான்.

அலுவலகத்தில் நுழைந்து நாற்காலியில் அமர்ந்தான்.

ஃபேனைச் சுழல விட்டு விட்டு சற்று முதுகை பின்புறம் தளர்த்தி ஓய்வாக உட்கார்ந்தான்!

- சார் என்ற குரல்.

நிமிர்ந்து பார்த்தான்.

அருகில் துணை இன்ஸ்பெக்டர் ரகு நின்றான்.

- என்ன ரகு?

- தலைவலி வந்திருக்கு ஸார்!

- என்ன?

- கொலைதான்!

- கொலையா?

- ஆமாம் ஸார்! அதே மாதிரி கொலை!

திடுக்கிட்டான் செந்தில். - அதே மாதிரியா?

- ஆமாம்!

- எங்கே நடந்திருக்கு?

- பவழக்காடு.

- எப்போ?

- நேத்திக்கே நடந்திருக்கு. கொலை பண்ணி, காரை ஓரமா ஒதுக்கி ஒரு மறைவுக்குள்ளே வச்சிருக்கு. இந்நேரம் வரைக்கும் யார் கண்ணிலேயும் படல்லே. இப்பதான் தெரிய வந்திருக்கு. நமக்கு கால் வந்தாச்சு! என்று கூறினான் ரகு.

ஐஐஐ

# 7

செந்திலுக்கு எதுவும் ஓடவில்லை.

மேஜை மீது கை வைத்து அழுத்தினார்.

இதென்ன? கொலைகள் தொடர்கின்றனவா?

சற்று நேரம் பிரமை பிடித்தாற்போல் இருந்தார்.

பிறகு மெல்ல நிமர்ந்து, - என்ன ரகு? நீ இப்ப என்ன சொல்றே? நாம் போக வேண்டியதுதானே? - என்று கேட்டார்.

- ஆமாம் ஸார்! போக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கு.

- இது பவழக்காடு போலீஸ் பிரச்சினைதானே? நமக்கு எதுக்கு?

- ஆமாம் ஸார்! ஒரே மாதிரி கொலை நடக்கும்போது நமக்கும் தகவல் கொடுக்கச் சொல்லி யிருக்காங்க. அதனாலதான்.

- முதல்ல அவங்க விசாரணை முடியட்டும். அப்புறம் போய் பார்த்துக்கலாம்.

செந்திலுக்கு அந்த ஆரம்ப விசாரணை எல்லாம் பிடிக்காது.

தவிர கொலை நடந்த இடம், அந்த ஸ்ட்ரெச்சர், ஆம்புலன்ஸ் எல்லாம் பார்க்கவே அருவெறுப்பாக இருக்கும்.

- ஸார்! என்று ரகு தயங்கினான்.

- நீங்க இப்படி சொல்வீங்கன்னு தெரியாது. நான் ஒரு மெசேஜ் கொடுத்துட்டேன்.

- என்ன கொடுத்தே?

- கொலை நடந்த இடத்தை பவழக்காடு போலீஸ் பாதுகாக்கட்டும். விசாரணை எதுவும் செய்ய வேண்டாம்! நாங்க வந்துடறோம்னு!

- ஏன் அனுப்பிச்சே ரகு?

- தவறி செஞ்சிட்டேன். மன்னிச்சிடுங்க.

செந்தில் சட்டென்று எழுந்தார்.

- ரகு! நீ செய்தது சரிதான்! நாம் கட்டாயம் அங்கே இருக்கணும். இதைத் தவிர்க்க முடியாது. தவிர்க்கவும் கூடாது. எனக்கு இருந்த மன அலுப்பிலே அந்த மாதிரி சொல்லிட்டேன். தவறு. ஜீப்பை ரெடி பண்ணு.

ரகு வெளியே ஓடினான்.

மூன்று நிமிடத்தில் ஜீப் புறப்பட்டது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பிரயாணம்.

நகரம் எப்படி எவ்வளவு தூரம் வெளிநோக்கிப் பரவி விட்டது என்பது இப்போதுதான் செந்திலுக்குப் புரிந்தது.

பவழக்காடு போலீஸ் ஸ்டேஷன் சென்று விசாரித்து விட்டு, நேராக தளத்திற்கு வந்தார்கள்.

கடற்கரை ஓரத்தில் அந்தத் தளம் இருந்தது. முக்கிய சாலையில் இருந்து அங்கே குட்டிச்சாலை தனியாகப் பிரிந்திருந்தது. அதிலிருந்து இடது புறம் மண்ணில் இறங்கி சிறிது தூரம் சென்று அடர்த்தி மரங்களுக்கு இடையே அந்தக் கார் நின்றிருந்தது.

அசப்பில் அதை கவனித்து விட முடியாது.

ஏற்கனவே ஒரு கிராமப்புற கூட்டம் கூடி இருந்தது.

போலீசார் செந்தில் வருகைக்காக காத்திருந்தார்கள்.

உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்திலுக்கு வரவேற்பு கொடுத்தார்.

செந்தில் ஜீப்பை விட்டு இறங்கினார்.

கார் அருகில் சென்று உள்ளே பார்த்தார்.

பின் சீட்டில் சடலம் சாய்ந்திருந்தது.

ஒரு கால் தொங்கியது.

மற்றொரு கால் சீட்டின் மீது இருந்தது. சட்டையில் இருந்து அந்தப் பேண்ட் வரை ஒரே ரத்தக் கலவை!

தோற்றத்தில் ஒரு கண்ணியமான குடும்பம் என்று தோன்றியது.

வயசு நாற்பத்தைந்து இருக்கலாம்.

- கைரேகை, நாய் எல்லாவற்றிற்கும் சொல்லிட்டீங்களா? என்று கேட்டார் செந்தில்!

- எஸ்! என்று கூறினார் உள்ளூர் இன்ஸ்பெக்டர், சாமிநாதன்.

செந்தில் முகத்தை வெளியே இழுத்தார்.

கைப்பிடிகள் பளபளத்தன.

தரையில் தடங்கள் தெரிந்தன.

- சார்! பல பேர் வந்து தடயங்களை எல்லாம் அழிச்சாச்சு! என்று கூறினார் இன்ஸ்பெக்டர்.

செந்தில் காரை சுற்றி வந்தார்.

- ஏதாவது வித்தியாசமாகத் தெரிகிறதா?

- எதுவும் இல்லை.

- எங்கேயாவது அடிபட்ட குறி தெரிகிறதா?

- இல்லை.

காரின் நம்பரைக் குறித்தார்.

மனசில் துறுதுறு நினைவுகள் ஓடின.

காரைவிட்டு அப்பால் போனார்.

- நகரிலுள்ள கார்தான். ஆனால் அது எப்படி இந்த இடத்தில் வந்தது? கொலை வேறு இடத்தில் செய்யப்பட்டு, கார் இங்கே கொண்டு வரப்பட்டதா?

- இன்ஸ்பெக்டர்! நீங்க முதல்லே செய்ய வேண்டியதைச் செய்யுங்க! என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்து கூறினார்.

- சடலத்தை வெளியே எடுத்துடலாமா? கேட்டார் அவர்.

- இல்லே கொஞ்சம் இருங்க. கைரேகை நிபுணர் வந்துரட்டும், போரன்சிக் நிபுணர்கள் வந்துரட்டும்.

போலீஸ் டாக்டர் வந்து இறங்கினார்.

கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் அவர் பரிசோதனை செய்தவண்ணம் இருந்தார்.

திரும்பி வந்தார்.

-என்ன டாக்டர்? என்று கூறிய செந்தில் டாக்டர் பக்கம் நெருங்கினார்.

- ஓ! நீங்க வந்தாச்சா? இதுவும் அதேமாதிரி கொலைதான் ஸார்! என்று கூறினார்.

செந்திலுக்கு பக்கென்றது.

- அதே மாதிரிக் கொலை மூன்றாம் முறையாக நடந்திருக்கிறதே! என்ன அநியாயம்! இரண்டு மணி நேரம் முன்னால்தான் ராமலிங்கத்தை விசாரித்துவிட்டு வந்தோம்! அவர் செய்திருப்பாரா? அவரால் எப்படி செய்திருக்க முடியும்? முந்தின நாள் ராத்திரி இங்கே வந்திருப்பாரா?

- ஸார்! இறந்து போயி எவ்வளவு நேரமாகி இருக்கும்? என்று கேட்டார் செந்தில்.

- கிட்டத்தட்ட இருபது மணி நேரம் ஆகியிருக்கணும்! அதே பழைய கொலைகள் நடந்த நேரம்தான்! என்றார் டாக்டர்.

- ஓ! என்று செந்தில் மனதில் கணக்குப் போட பதினோரு மணி சுமார் என்று தெரிந்து விட்டது.

வழக்கமான நேரம்தான்.

- சடலத்தில் டைரி இருந்தது! என்றார் டாக்டர்.

வாங்கிப் பார்த்தார்.

ராஜசேகர், சுப்ரமணிய காலனி, 3-வது தெரு.

என்று போட்டிருந்தது.

அந்தக் காலனி பற்றி செந்திலுக்குத் தெரியும்.

வசதி வாய்ந்தவர்கள் குடியிருந்தார்கள்.

ஆக இன்னொரு வசதி படைத்த ஆசாமி இங்கே கொலை செய்யப்பட்டு விட்டார்.

செந்தில் அந்த டைரியை ரகுவிடம் கொடுத்தார்.

அப்பொழுது ஒரு வேன் வந்து நின்றது.

அதிலிருந்து போரன்சிக்காரர்கள் இறங்கி நேராக வண்டியை நோக்கிச் சென்றார்கள்.

அவர்களது தலைவர் வெங்கடேஷைப் பார்த்ததும்,

- மிஸ்டர் வெங்கடேஷ்! என்று செந்தில் அழைத்தார்.

அவர் திரும்பிப் பார்த்துப் புன்னகையுடன் வந்தார்.
- கொஞ்சம் கவனமாகப் பாருங்க! காரை பூராவும் சோதிக்கணும்! என்று கூறினார் செந்தில்.

- ரைட்! கவனிக்கிறேன்! என்றார் வெங்கடேஷ்.

செந்தில் அதற்குப் பிறகு விடை பெற்றுத் திரும்பினார்.

வீடு சேர்ந்தபோது இருட்டிவிட்டது.

ஆபீசில் இருந்து ஒரு கவர் வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

அவசரச் செய்தி என்றால் கவரில் வைத்து அனுப்புவது வழக்கம்.

செந்தில் கவலையோடு கவரைப் பிரித்தார்.

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! தயவு செய்து என்னைத் தேடாதீங்க! நான்தான் இந்த கொலைக்கு காரணம்! இது வெறும் பொறாமைக்கோ அல்லது சொந்த பகை உணர்ச்சிக்கோ செய்யப்படற கொலை இல்லை. ஒரு ரகசியத்துக்காக செய்யப்படறது. அதனால நீங்க இதை லேசுல கண்டுபிடிக்க முடியாது. உங்களுக்கு அதுக்கு முன்னாலே எச்சரிக்கை செய்யறேன். இதை அப்படியே விட்டுட்டீங்கன்னா உங்களுக்கு நல்லது."

இப்படிக்கு எஸ்.ஆர். எஸ்.ஆர். எஸ்.ஆர். என்று மூன்று முறை போடப்பட்டிருந்தது.

செந்தில் கடிதத்தை மடித்து மேசை மீது வைத்தார்.

பிறகு கைகளை பின்னால் கட்டி நாற்காலியில் சாய்ந்தார்.

டெலிபோன் அடித்தது. எழுந்தார்.

- ஹலோ! என்றார்.

- நான்தான் பேசுறேன்! என்ற குரல் கேட்டது.

திடுக்கிட்டார் அவர்!

டாக்டர் ரவீந்திரன் மணி 7-55க்கு வெளியே பால்கனியில் வந்து பார்த்தார்.

எல்லா நோயாளிகளையும் பார்த்து அனுப்பி விட்டார்.

எட்டு மணிக்கு சரிதா 'வரேன்' என்று சொல்லி யிருந்தாள்.

பொதுவாக அவர் மனநோயாளிகளை இரவு எட்டு மணிக்கு மேல் பார்ப்பதில்லை.

சில விசேஷ சந்தர்ப்பங்களில் அப்படிச் செய்வதுண்டு.

இதுவும் ஒரு விசேஷ சந்தர்ப்பம்தான்.

ஏனெனில் சரிதாவே அதை தேர்ந்தெடுத்திருந்தாள்.

ஏற்கனவே ரவீந்திரன் அவளை எச்சரித்திருந்தார்.

எப்போது அவளுக்கு இருட்டில் பயம் இருக்கிறதோ அப்பொழுது அவள் இருட்டில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இருட்டில் செய்யக் கூடியது எதுவும் செய்யக் கூடாது என்று! ஆனால் சரிதா விசித்திரமாக இருந்தாள்.

இரவு வேளையைத் தேர்ந்தெடுத்திருந்தாள்.

ரவீந்திரன் ஏற்கனவே அந்த முதல் சம்பவத்திலிருந்து சிறிது அச்சப்பட்டு இருந்தார். காரணம் திடீரென்று விளக்குகள் அணைந்து விட்டால் அவளுக்கு அந்தப் பேய்த்தனம் வந்து விடுகிறது.

பேய்த்தனம் வருகிறதா? இல்லை ஹிஸ்டீரியாவா? ரவீந்திரன் அந்த நோயை கண்டுபிடிக்க வேண்டும்.

அவர் காத்திருந்தார்.

7-58 ஆகிற்று. பிறகு 7-59 ஆகிற்று.

எட்டு மணி டாண் என்று அடிக்கும்போது வாசலில் கார் வந்து நின்றது.

சரிதா அதிலிருந்து இறங்கினாள்.

இறங்கியவுடன் கார் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து போய் விட்டது.

கீழே நர்ஸ் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

அடுத்த அறையில் ரவீந்திரன் காத்திருந்தார்.

அவள் நுழைந்ததும் - வாங்க! என்று கூறினார்.

அவள் முகத்தில் அழகான புன்னகை வந்தது.

உண்மையில் அப்போது பார்ப்பதற்கு அவள் தேவதைபோல் இருந்தாள்.

கண்களில் அழகான ஒளிவெட்டுகள் மின்னிக் கொண்டு சென்றன.

ஒரு குறுநகை அவளது மேல் உதட்டில் உட்கார்ந்தபடியே இருந்தது. மறையவே இல்லை.

மென்மையாக நடந்து வந்து அவர் அருகில் அமர்ந்தாள்.

- டாக்டர்! ஸாரி! நான் இந்த நேரத்திலே உங்களை 'அப்பாயிண்ட்மெண்ட்' வச்சிக்கிட்டேன்! என்றாள்.

- பரவாயில்லை மேடம்! நீங்க இங்கே வந்ததிலே குணமாயிடணும். அதான் என்னோட குறிக்கோள்.

அவளை அழைத்துக் கொண்டு அவரும், நர்சும் உள்ளே சென்றார்கள்.

நர்சு அவளுக்கு கட்டிலை தயார் செய்துவிட்டு சில டம்ளர்கள், மாத்திரைகள், மருந்துகளை எல்லாம் சற்று எட்டத்தில் மேஜையில் வைத்துவிட்டு வெளியே போனாள்.

டாக்டர் ரவீந்திரன் சற்று தள்ளி நாற்காலியில் அமர்ந்தார்.

- சரிதா! நீ இப்போ நிறைய பேசியாச்சு! அதனால உனக்கு தயக்கம் எதுவும் இல்லைன்னு நினைக்கிறேன்! என்று ஆரம்பித்தார் ரவீந்திரன்.

சரிதாவுக்கு மெல்லியதாக சிரிப்பு வந்தது.

- ஆமாம் டாக்டர்! உண்மைதான்! எனக்கு ஓரளவு தயக்கம் போயிடுத்து! என்றாள்.

- இப்ப கேள் சரிதா! இல்லாததை இருக்கும்னு நினைக்கிறோம் நாம். அதனாலதான் நமக்கு பயம் வருது தெரியுமா? என்றார்.

அவள் அதற்கு பதில் சொல்லவில்லை.

- இப்பப்பாரு! முதல்லே நீ என்னைப் பார்த்தபோது உனக்கு அச்சமோ தயக்கமோ இருந்தது இல்லையா?

- ஆமாம்!

- இது எப்படி போச்சு என்று அவர் கேட்க. . .

அவள் பதில் சொல்லத் தெரியாது திகைத்தாள்.

- ஒண்ணுமில்லேம்மா. முதலிலே நீங்க என்கிட்ட பழகல்லே. பழகாததாலே எங்கிட்ட உங்களுக்கு அச்சம் தோணியிருக்கு. எப்படிப்பட்டவனோ, ஏதுபட்டவனோ அப்படியெல்லாம் நெனைச்சி இருப்பீங்க. ஆனா பழகின

பிறகு நான் உங்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு சிநேக பாவத்துக்கு வந்துட்டேன். நீங்க என் மேலே நம்பிக்கை வைக்கலாம்னு தோணிடுத்து! அப்போ அந்த பயம் மறைஞ்சிடுத்து இல்லையா? என்று கேட்டார்.

- ஆமாம் ஸார்! சிரித்துக் கொண்டே கூறினாள்.

- முதல்லே தோணின பயம், இப்போ போயிடுத்து இல்லையா?

- ஆமாம்!

- இதேமாதிரிதாம்மா இப்படி இருட்டிலே யாரையோ பார்க்கிறேன்னு சொல்றே. உண்மையிலே லைட்டை போட்டா அந்த ஆள் இல்லே. இருட்டுக்குள்ளே யாரோ இருக்கான்னு உன் மனசு நினைச்சுட்டது தவறு இல்லையா?

அவள் பதில் பேசவில்லை.

- சரிதா நல்லா யோசிச்சு பதில் சொல்லணும். இருட்டுக்குள்ளே நீங்க யாரோ ஒளிஞ்சிட்டிருக்கிறதா நினைக்கறீங்க இல்லையா?

- உண்மை அதுதான்! இருட்டுக்குள்ளே யாரோ இருக்காங்க! அவங்க தடால்னு உங்கள் கழுத்தை அமுக்க வந்திடுவாங்கன்னு ஒரு நினைப்பு இருக்கே, அது உங்க மனசிலே நல்லா ஆழமா பதிஞ்சிடுத்து.

- ஓ! உண்மைதான்! என்றாள் அவள்.

- அதனாலதான் சொல்றேன். இப்ப இருட்டிலே ஒண்ணும் இல்லை. யாரும் உங்களை அமுக்கப் போறது இல்லை என்ற ஒரு மாற்றும் எண்ணம் மனசிலே ஆழமாப் பதிஞ்சிடுத்துன்னா நீங்க அப்புறம் பயப்படவே மாட்டீங்க.

- ஓகே! ரொம்ப ஈஸியா நீங்க சொல்லிட்டீங்க. அதை நிறைவேற்ற முடியுமா?

- ஏன் நிறைவேற்ற முடியாமல்? நான் அதுக்குத்தானே இருக்கேன்! என்று கூறினார் அவர்.

- எஸ் டாக்டர்! நானும் அதைத்தானே எதிர்பார்க்கிறேன் என்று சொன்னாள் அவள்.

- இப்போ சரிதா! நான் இன்னொன்றும் கேட்கப் போறேன். நீங்க இதிலே கூட தயக்கப்படுவீங்க! தயக்கத்தை யெல்லாம் உடைச்சிட்டு எங்கிட்டே பதில் சொல்லணும்! என்றார் ரவீந்திரன்.

- என்ன சொல்லுங்க? என்றாள்.

- இரவிலே உங்க பிரண்ட் யாரோ வந்தாங்கன்னு சொன்னீங்க இல்லையா?

- ஆமாம்.

- இதுக்கு முன்னாலே இதே அளவுக்கு ஏதோ ஒரு விஷயம் உங்க மனசை பாதிச்சிருக்கு. அது என்னன்னு நீங்க சொல்லிறணும்.

- என்ன டாக்டர்? அப்படி இன்னொரு விஷயம் என்னை பாதிச்சிருக்கு என்றா சொல்றீங்க?

நல்லா பாதிச்சிருக்கு. அதனாலே உங்களுக்கு மன பலவீனம் ஏற்பட்டிருக்கு. அப்படி மனம் பலவீனம் ஆனதாலதான், உங்க சிநேகிதி ஆவியை நீங்க இரவு பார்க்க முடிஞ்சது. உங்க மனம் பலமா இருந்தா அந்த ஆவியை நீங்க பார்த்திருக்க முடியாது.

- ஓ! அப்படி ஒரு கோணத்திலே கேட்கறீங்களா? என்று கேட்டாள் சரிதா.

- ஆமாம்.

அவள் யோசித்தாள்.

அறை நிசப்தமாகியது.

அந்த எலக்ட்ரானிக் கடிகாரம் மட்டும் லேசான டிக்குடன் கேட்டது.

ஒரு விதக் காற்றுச் சலனம் எதுவுமே இல்லை.

யோசித்தவாறே இருந்தாள்.

- சொல்லுங்க மேடம்! நிச்சயமா உங்க வாழ்க்கையிலே ஏதோ ஒண்ணு நடந்திருக்கு. அதுவும் அதே இருட்டு சமயம்தான் நடந்திருக்கும்! என்று கூறினார்.

அவள் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள்.

மேலும் நிசப்தம் அங்கே கூடியது.

திடுக்கிட்டு டாக்டர் ரவீந்திரன் அவளைப் பார்த்தார்.

ﮩ٨ـﮩ

# 8

*சரிதாவை டாக்டர் ரவீந்திரன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.*

*சாய்வுப் படுக்கையில் அவள் படுத்திருந்தாள்.*

*அப்போது ஏற்பட்ட நிசப்தம்தான் அவரை சற்று யோசிக்க வைத்தது.*

*முன்னைய நிசப்தத்தை விட இது பாறையாக கனத்திருந்தது.*

*சற்று நேரம் அவர் எதுவும் பேசவில்லை.*

*சில நிமிடங்கள் ஓடி இருக்கும்.*

*சட்டென்று அவள் திரும்பி - டாக்டர் உண்மைதான்! என் வாழ்க்கையில் ஒரு இருட்டு விஷயம் நடந்திருக்கு! என்று கூறினாள்.*

*- எப்போ நடந்தது? என்றார் ரவீந்திரன்.*

*- பதினான்காவது வயசிலே நடந்திச்சு.*

*- எங்கே?*

*- எங்க ஊரிலே. எங்க வீட்டிலே.*

*- என்ன சொல்ல முடியுமா?*

*அவள் யோசித்தாள்.*

*- ஸார்! அதை மட்டும் கேட்காதீங்க! என்றாள்.*

- ஏன் கூடாது? என்றார் அவர்.

- அது இதைவிட என்னை படுகுழியில் ஆழ்த்தி விடும்! என்றாள்.

- எனக்கு புரியவில்லை! என்றார் அவர்.

- நான் என்னுடைய சிநேகிதியைப் பார்த்தாலே எவ்வளவு அச்சமாகி 'ஓ'ன்னு கத்தறேனோ அதைவிட பல மடங்கு அதன் பாதிப்பு அதிகம். அதனாலேதான் சொல்லாமலே இருக்கேன்! என்று கூறினாள்.

- இல்லேம்மா! நீ சொல்லித்தானே ஆகணும். அப்பதானே நான் உன்னை குணப்படுத்த முடியும்!

- ஸார்! இன்னிக்கு வேணாம் என்று அவள் பதட்டத்துடன் கூறினாள்.

- இன்னிக்கு வேணாமா? ஏன் விடணும்? நீங்களே தைரியமா வந்திருக்கீங்க. தைரியமாகத்தான் சொல்லுங்க!

அவள் சிறிது நேரம் யோசித்தாள்.

- எனக்கு கொஞ்சம் தண்ணி வேணும்! என்றாள்.

டாக்டர் எழுந்தார்.

கண்ணாடி கூஜா பக்கத்தில் இருந்தது.

அதில தண்ணீர் எடுக்கப்போனபோது தண்ணீர் இல்லை என்று தெரிந்தது.

உடனே தண்ணீர் எடுத்துக் கொடுப்பதற்காக வெளியே கதவைத் திறந்து வந்தார்.

நர்சை மணியடித்து அழைத்திருக்கலாம். ஏனோ அவருக்கு அந்த மாதிரி ஒருவித யோசனை தோன்றியது.

வெளியே வந்தார்.

அடுத்த அறையில்தான் குழாய் இருந்தது.

அதில் தண்ணீரைப் பிடித்து விட்டு சிறிது நேரம் தயங்கி நின்றார்.

அவளுக்கு யோசிப்பதற்கு நேரம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து அதனால் அதுபோல் இருந்தார்.

பிறகு திரும்பி வந்து கதவைத் திறந்து உள்ளே போனபோது கட்டிலில் சரிதாவைக் காணவில்லை.

திடுக்கிட்டு அங்கே கூஜாவை வைத்துவிட்டு, - சரிதா! என்றார்.

பதில் இல்லை.

சுற்றி வரப் பார்த்தார்.

- சரிதா! சரிதா! என்றார், பாத்ரூம் கதவு அடைக்கப்பட்டிருந்தது.

- சரிதா! என்று சற்று நடுக்கத்துடன் குரல் கொடுத்தார். பதில் இல்லாமல் போக, கதவில் லேசாகக் கையை வைத்தார்.

அப்போது ஒரு பயங்கர ‘வீல்’ சத்தம் வீறிட்டது. அடுத்த கணத்தில் அவர் உடல் இரண்டாக கிழிவது போல் உணர்ச்சி.

அறையே நடுங்கியது.

சமாளித்துக் கொண்டு, - சரிதா! என்று கூவினார்.

பதில் இல்லை.

உள்ளே ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

கதவு மட்டும் இறுக்கமாக மூடி இருந்தது.

படபடவென்று தட்டினார்.

நர்ஸ் ஓடி வந்தாள்.

- என்ன? என்று பரபரப்புடன் கேட்டாள்.

ரவீந்திரன் பதில் சொல்லவில்லை.

அவர் கண்கள் அவசரமாக எதையோ தேடின!

தூரத்தில் இருந்த கழி தென்பட்டது.

எடுத்து வந்து கதவில் பலமுறை ஓங்கி அடித்தார்.

சத்தம்தான் வந்தது.

கதவு திறக்கவில்லை.

அடுத்து ஒரு முரட்டு ஸ்டூலை ஒரே அள்ளாக அள்ளினார்.

கதவை நோக்கி வீசியெறிந்தார்.

இரண்டு முறை வீசியதில் கதவு வலிமையை இழந்தது.

படக் படக் என்று சத்தம்!

பலகை உடைய அதை உருவி எடுத்துவிட்டார்.

அவர் கண்ட காட்சி ரத்தத்தை உறைய வைத்தது.

சரிதா கீழே கிடந்தாள்.

எந்தவித அசைவும் இல்லை.

நர்சின் உதவியோடு அவளை எடுத்தார்.

கட்டிலில் கிடத்தினார்.

முகத்தில் லேசாக தண்ணீரைத் தெளித்தார்.

அவள் எழுந்திருக்கவில்லை.

மூக்கைத் தொட்டுப் பார்த்தார்.

நாடிகள் இயங்கிக் கொண்டிருந்தன.

ஆனால் நினைவு இல்லாமல் இருந்தாள்.

நேராக போனை எடுத்து எண்களைச் சுழற்றினார்.

- ஹலோ! டாக்டர் விசால், எமர்ஜென்சி கேஸ்! தயவு செய்து வந்துவிட்டுப் போக முடியுமா? என்று கேட்டார்.

- இதோ வரேன் ஸார்! என்று டாக்டரின் பதில் வந்தது.

டெலிபோனில் - நான்தான் பேசறேன்! என்று கரகரப்பான குரல் வந்தது.

இன்ஸ்பெக்டர் செந்தில் திகைப்புடன் முகத்தை சுளித்தார்.

நிச்சயம் புரிந்தது.

அது ஒரு செயற்கை குரல்!

வேண்டுமென்றே வாயைக் கரகரக்க வைத்து யாரோ பேசினார்கள்.

- என்ன இன்ஸ்பெக்டர். . கடிதாசி கிடைச்சுதா? நான்தான் பேசறேன். லேசா கண்டுபிடிச்சிட முடியாது என்னை. இதிலே நீங்க தலையிட வேண்டாம். நான் ஒரு லட்சியத்துக்காக கொலை பண்றேன். இதோடு உங்க தேடலை நிறுத்திக்குங்க. ஆமாம்.

குரல் நின்றது.

செந்தில் மெதுவாக காதிலிருந்து போனைக் கழற்றி வைத்தார்.

ஒரு அமெரிக்கையான புன்னகை முகத்தில் ஓடியது.

இது உண்மைக்குரலா? இரவல் குரலா?

யார் இப்படிப் போன் பண்ணுகிறார்கள்? இது வெறும் ஏமாற்றா?

உண்மையில் மனிதக்குரலா அது! ஏதோ ஒரு மிருகம்போல இருந்ததே!

- ரகு என்று அழைத்தார்.

அடுத்த அறையில் இருந்து ரகு துள்ளி எழுந்து வந்தான்.

- இப்போ எனக்கு வர்ற போனை எல்லாம் ரெக்கார்ட் பண்ணணும் ஏற்பாடு பண்ணிக்க!

- எஸ் ஸார்!

செந்தில் சற்று நேரம் அமர்ந்திருந்தார்.

இதுபோன்ற மர்ம டெலிபோன் கால்களை அவர் விரும்புவதில்லை.

யாரோ அவரை வேடிக்கை பார்ப்பதுபோல தோன்றும்.

அதனால் அவருக்கு கோபம் கூட எழும். நான் உன்னை கண்டு பிடிக்கிறேனா இல்லையா பார்! என்று பொறுமுவார்.

பல்லை அவர் கடித்தபோது, மீண்டும் போன் ஒலித்தது.

டக்கென்று காதில் வைத்தார்.

- மறந்திடாதீங்க! செப்டம்பர் ஒன்பதாந்தேதி! என்று சொல்லி திரும்பவும் போனை வைக்கும் சத்தம் கேட்டது.

அன்றைக்கு என்ன நடக்கப் போகிறது?

கொலையா?

- நீ உண்மையான மனிதனாக இருந்தா என்ன நடக்கப் போகிறது என்று சொல்லு! என்று அந்த மானசிக எதிராளியைப் பார்த்துக் கேட்டார்.

செந்திலின் நினைப்புகள் பல திசை அம்புகளாக ஓடின.

யார் இவன்?

லட்சியக் கொலை என்கிறானே?

எப்படி இதைச் சொல்கிறான்?

இன்றைக்குப் பார்த்துவிட்டு வந்தோமே, அந்த ராஜசேகர் கொலையையும் இவன்தான் செய்திருக்கிறான்.

ராஜசேகரை எப்படி அவரது காரிலே ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றான்.

அது எப்படி முடிந்தது?

கொலையை வேறு எங்காவது செய்துவிட்டு சடலத்தோடு அப்படி ஒரு தனியான இடத்தில் காரை விட்டு விட்டு வருகின்றானா?

கையை மடக்கி மேஜை மீது வைத்தபோது நரம்புகள் புடைத்து வெளித் தெரிந்தன.

- ரகு! என்றான்.

- ஸார்! கால் ரிகார்ட் ஆயிடுத்து! என்றான்.

- வெரிகுட். இப்போ அந்த ராஜசேகர் சடலத்தைப் பார்க்கப் போவோமா?

- எஸ் ஸார். . .

- சடலத்திலேர்ந்து டயரி எடுத்தோமில்ல. . . அதில் அவன் வீட்டு அட்ரஸ் பார்த்துக்க. எப்போ போலாம்?

- ஸார்! நாளைக் காலையிலே வீட்டுக்காரங்களுக்கு 'பாடி'யைக் கொடுத்துடுவாங்க. காலையிலே சடங்கு எல்லாம் நடக்கும். நாம்ப சாயங்காலம் போகலாம்.

மறுநாள் மாலையில் ராஜசேகர் இருப்பிடம் நோக்கி செந்தில் பறந்து கொண்டிருந்தார்.

சுப்ரமணியம் காலனியில் நல்ல பங்களாவாகத்தான் இருந்தது வீடு.

உள்ளே சென்றபோது வழக்கமான துக்க நிசப்தம் இருந்தது.

சடங்குகள் காலையிலேயே முடிந்து போயிருந்தன.

உறவினர்கள் குழுமியிருந்தார்கள்.

வீட்டில் செயற்கையான நிசப்தம்.

உள்ளே நுழைந்தபோது ஒரு பெரியவர் எதிர்கொண்டார்.

- திருமதி ராஜசேகரைப் பார்க்கவேண்டும் என்று செந்தில் கூறினார்.

- ஓ! அழைச்சிட்டு வரோம்! என்று கூறினார் அவர்.

சில கணங்களுக்குப் பிறகு அவர் திரும்பி வந்தார்.

- வா சாந்தி! வா சாந்தி! என்று ஈனஸ்வரத்துடன் கூப்பிட்டார் பெரியவர்.

அறை வாசலில் ஒரு பெண் தெரிந்தாள்.

செந்தில் எழுந்தார்.

- வேண்டுமானால் நான் அவங்க அறைக்குப் போலாமா? என்று கேட்டார்.

- ஓ! என்று பெரியவர் யோசித்தார். அது நல்ல தீர்வுதான் என்று கூறினார்.

இருவரும் அறைக்குள் புகுந்தார்கள்.

சாந்தியை அழைத்து நாற்காலியில் உட்கார்த்தினார் பெரியவர்.

- இது என் பெண் ஸார்! இறந்தது என் மாப்பிள்ளை.

- நான் ரொம்ப வருத்தப் படறேன்! என்று கூறினார் செந்தில்.

மெதுவாக சாந்தியின் பக்கம் திரும்பி, - ஏம்மா நீ அவரை கடைசியா எப்போ பார்த்தே? என்று கேட்டார்.

- ஸார்! முந்தா நாள் சாயங்காலம் பார்த்தது! என்று கூறினாள் அவள்.

- அன்னிக்கு ஆபீசுக்கு போனாரா?

- ஆமாம் ஸார்.

- ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்தாரா?

- வந்தார்.

- அப்புறம்?

- வெளியே போனார். திரும்பி வரவேயில்லை.

- ஏம்மா அவருக்கு யாராவது எதிரிங்க உண்டா?

- அது மாதிரி கிடையாதுங்க.

- வெளியில போனா எத்தனை மணிக்கு வருவாருங்க?

- ராத்திரி பத்து, பத்தரைக்கு வந்துடுவாரு!

- அவர் போன இடம் பற்றி நீங்க ஏதாவது கேட்பீங்களா?

- எதுவும் கேட்க மாட்டேங்க!

- மேடம்! அவர் ஏதாவது பெண்களைத் தேடிப் போவாரா?

அவள் தலையைக் குனிந்தாள்.

ഈ०ஒ

# 9

இன்ஸ்பெக்டர் செந்திலுக்கு ஒருவித மனிதாபிமானம் உண்டு. இரக்கம் உண்டு. கருணை உண்டு.

இப்படிப்பட்டவர் இந்த போலீஸ் தொழிலுக்கு வந்திருக்கக் கூடாது.

ஆனால் வாழ்வில் அவரவர் விருப்பப்படி தொழிலோ, மனைவியோ வேறு எதுவோ கிடைக்கிறதா?

எதிரே சோகத்துடன் தலை குனிந்து மவுனமாக இருக்கும் நிலையைப் பார்த்தார்.

மனசில் தாபம் சுரந்தது.

- பரவாயில்லேம்மா. சொல்ல முடிஞ்சா சொல்லுங்க!

இரண்டு கண்ணீர்த் திவலைத் துளிகள் அவள் கண்ணில் அரும்பின.

- சார்! அதிலே அவர் பலகீனமாகத்தான் இருப்பார்ன்னு நினைக்கிறேன்! என்றாள்.

- எதனாலே சொல்றீங்க?

- ஊகம்தான்.

- வேறு ஏதாவது இருந்தா சொல்லம்மா!

அவள் தலை நிமிர்ந்தாள் -சார்! நான் அவரைப் பத்தி தவறாச் சொல்லக்கூடாது. இருந்தாலும் கொலை செய்தவனை நீங்க கண்டு பிடிச்சாகணும் என்கிற

நிலையிலே சொல்றேன். அவர் யாரோ விஜயான்னு ஒரு பெண் மேலே சினேகம் வச்சிருந்தார்.

- விஜயா! என்று செந்தில் நெற்றியில் ஒரு சுருக்கம் குழி பண்ணியது.

- எங்கே இருக்காங்க? என்று கேட்டார்.

- தெரியாதுங்க!

- உங்களுக்கு இது எப்படி தெரிஞ்சுது?

- பேச்சுவாக்கிலே எனக்கு ஒரு நாள் தெரிஞ்சு போச்சுங்க.

- சரி அன்னிக்கு போனபோது அவளைத் தேடிப் போயிருப்பாரா?

- சார்! எனக்குத் தெரியாது. வெளியிலே போனாரு. கிளப்புக்கு போறேன்னு சொன்னாரு. அவ்வளவுதான் தெரியும்.

- இது மாதிரி அடிக்கடி கிளப்புக்குப் போயிருக்காரு இல்லே?

- ஆமாம்! என்று தலை அசைந்தது.

அவள் கண் ஓரம் மெல்லிய அழுகை மினுமினுத்தது.

செந்தில் பேசாமல் தலையைக் குனிந்தார்.

- உங்க கணவருக்கு நெருங்கின சிநேகிதர் யாரு? அதைச் சொல்ல முடியுமா?

- போலீஸ்காரங்க எல்லோரும் சினேகிதங்கதான். வருவாங்க, போவாங்க அதிலே குறிப்பா சொல்றதுக்கு முடியலை.

விஜயா யார்?

அவளை எப்படிப் பிடிப்பது?

செந்திலின் கவலைகளில் அந்தக் கேள்வியும் சேர்ந்தது.

மறுநாள் ஆபீஸ் போனபோது முதலில் வந்தது கமிஷனர் போன்.

தொடர் கொலைகள் அதிகமாகிறதே என்று கவலை தெரிவித்தார்.

செந்தில் எவ்வளவு தூரம் கேஸில் முன்னேறி இருக்கிறார் என்பதையும் வினவினார்.

செந்தில் பிறகு வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

12 மணிக்கு துணை இன்ஸ்பெக்டர் ரகு வந்தார்.

- விஜயாவைக் கண்டுபிடிச்சுட்டேன் சார்! என்றார்.

சின்ன சிலிர்ப்பு செந்திலின் முகத்தில்.

- எங்கே?

- முழுக்க சொல்லிடறேன். ரமாமணி கால்கேர்ள் குழுவைச் சேர்ந்த அவள் இப்போது ஒரு மாசமா இங்கே இல்லை. ஹைதராபாத்திலே இருக்கிறாள்.

செந்திலின் முகம் சுருங்கியது.

- கொலை நடந்த அன்னிக்கு இல்லையா? தனது சந்தேகத்தை திருப்பிக் கேட்டார்.

- இல்லை சார்.

செந்தில் யோசனையில் வீழ்ந்தார்.

ரகு கதவை நோக்கிப் போனார்.

- ரகு!

- எஸ் சார்!

- ஒவ்வொரு கொலையும் நகரத்து வெளிப்புறம் போய் நடக்குது.

- ஆமாம் சார்.

- எப்படி இவங்க நகரை விட்டு வெளியிலே போய் கொலை ஆகிறாங்க?

- அது மிஸ்டரி சார்.

- அதுவும் காணாத இடத்தில் போய் கொலை ஆறாங்க. கொலை ஆகிறவன் எப்படி அங்கே போனான். யாரை நம்பிப் போனான். எனக்கு ஒண்ணு தோணுது.

- சார்!

- கொலை நடந்த இடத்துக்கு ராத்திரி அதே நேரத்துக்குப் போகணும்.

- எஸ் சார்.

மாலையில் செந்தில் வெளியே போயிருக்க வேண்டும்.

அந்த நாலுமணிக்கு அவர் போனை எதிர்பார்க்கவில்லை.

மணி அடித்தது.

போனை எடுத்தார்.

- வணக்கம் இன்ஸ்பெக்டர் செந்தில்! டாக்டர் ரவீந்திரன் பேசறேன். என்னை தெரியும்னு நினைக்கிறேன்.

- உங்களைத் தெரியாமலா டாக்டர். பிரசித்தி பெற்ற சைக்கியாட்ரிஸ்ட் ஆச்சே!

அடுத்த கணம் டாக்டர் ரவீந்திரனின் குரல் கேட்க ஆரம்பித்தது.

- சார்! எனக்கு ஒரு இன்ட்ரஸ்டிங் கேஸ் கிடைச்சிருக்கு. நான் உங்களிடம் காண்பிக்க விரும்புகிறேன்!

- அப்படியா? என்ன கேஸ் சொல்லுங்க? என்று சொல்லி செந்தில் தனது காதில் குழாயை அழுத்தி வைத்துக் கொண்டார்.

- மிஸ்டர் செந்தில்! இது உங்க கேஸ்களுக்கு உதவியாக இருக்கும். அதனால் நீங்க நேரில் வந்தால் நல்லாயிருக்கும்.

- ஓ. கே. எப்போ வரணும்?

- ராத்திரி முடியுமா? இது ஒரு முக்கிய அர்ஜெண்ட் விஷயம்.

- ராத்திரியா?

- ஆமாம்! ஏழு மணிக்கு!

செந்தில் யோசித்தார். பிறகு, எஸ் சார் வரேன்! என்றார்.

இரவு ஏழு மணிக்கு டாக்டர் ரவீந்திரன் கிளினிக்கில் இன்ஸ்பெக்டர் செந்தில் இருந்தார்.

கிளினிக் அப்பொழுது காலியாக இருந்தது.

- இதுதான் முதல் தடவை. மனோதத்துவ கிளினுக்குக்கு வரேன் என்றார்.

- நல்லது. பார்த்துக்குங்க! என்று புன்னகையோடு உட்கார்த்தினார் ரவீந்திரன்.

நோயாளிகள். சாய்ந்து கொள்ளும் அந்தக் கட்டில் எதிரே இருந்தது.

அதன் பக்கத்தில் பலத்த ஸ்டூல் இருந்தது.

உள்ளே மிருதுவான வெளிச்சம்!

- என்ன சொல்லுங்க? என்றார் செந்தில்.

- எனக்கு ஒரு நோயாளி வந்திருக்காங்க! அவங்க பேர் சரிதா!

- ஓ. கே.!

- சரிதாவுக்கு நம்ப பாஷையிலே சொன்னோம்னா பேய் பிடிச்சிருக்குன்னு சொல்லுவாங்க. ஆனா ஆங்கில வைத்தியத்திலே ஸ்கிஸோப்ரனியா! என்றார் ரவீந்திரன்.

- ஓ. கே. புரிஞ்சுக்கிட்டேன்.

- எனக்குப் பேய் பிடிக்கிற விஷயத்திலே நம்பிக்கை உண்டு.

- ஓகோ! மேல்நாட்டு வைத்தியம் சொல்றதை நம்பறதில்லை.

- ஆமாம்! அவங்க சொல்வாங்க. மனசுக்குள்ளேயே இன்னொரு மனசு தோணிக்கிறது. அது தன்னை இரண்டு பர்சனாலிடியா காட்டிக்கறதுன்னு. நான் அதை நம்பல்லே.

- அப்ப பேய் பிடிக்கிறது உண்மையா?

- பேய்ன்னு வார்த்தை வேண்டாம். ஆவின்னு சொல்லுவோம். சிலர் மீது சிலரோட ஆவி வர்றதுக்கு சந்தர்ப்பம் இருக்கு! அதை நம்பறேன்.

- நீங்களா? என்று சொல்லி செந்தில் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

- ஆமாம். சில விஷயங்களுக்கு காரணம் சொல்ல முடியாது. திடீர்ன்னு இந்தி பாஷை தெரியாத ஒருத்தன் இந்தியிலே பேசறான். அல்லது மேற்கத்தி பாஷையே தெரியாத ஒருத்தன் அதைப் பேசறான். இதெல்லாம்

எப்படி முடியும்? இதை மேற்கத்தி விஞ்ஞானம் சரியா விளக்க முடியாம நழுவுது. அதனாலேதான் இந்த விஷயங்களை நான் நம்பறேன்.

- சரி! பொண்ணு சரிதா ராத்திரியிலே ரெண்டு நாள் முன்னாடி பாத்ரூமிலே விழுந்துட்டா.

- உங்க பாத்ரூமுக்கு எதுக்கு வந்தாங்க?

- சிகிச்சைக்கு வந்தாங்க. நாங்க பேசிக்கிட்டு இருக்கும்போது திடீர்னு அவங்களுக்கு அந்த ஆவி வந்துடுத்து. பிடிக்கிறதுக்கு முன்னாடி அவங்க பாத் ரூமுக்குள்ளே போயி கதவைத் தாழ் போட்டுக்கிட்டாங்க. அப்புறம் கதவை உடைச்சு அவங்களை வெளியே எடுத்தோம். எடுத்த நேரத்திலே மயக்கமா இருந்தாங்க.

- ஏன்?

- கீழே விழுந்துட்டாங்க. தலையிலே அடிபட்டிருந்திச்சு?

- அப்படியா? அடிபட்டு, மூர்ச்சையாயிட்டாங்களா?

- ஆமாம்.

- சரி! சொல்லுங்க!

- அதன் பிறகு சரிதாவை எடுத்து வந்து காபி யெல்லாம் கொடுத்து சரிப்படுத்தி இயல்பான நிலைக்கு கொண்டு வந்தேன். அவங்க அப்போது ஒரு மாதிரி முழிச்சிட்டு இருந்தாங்க.

- ஏன்?

- எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அப்புறம் பார்த்தா திடீரென்று டாக்டர் என் கண் முன்னாலே காட்சியாகத் தெரியுதுன்னு சொன்னாங்க.

- ஓ!

- என்ன காட்சின்னு கேட்டேன். ஒரு கொலைக் காட்சி சார்ன்னு சொன்னாங்க!

- என்ன கொலைக் காட்சின்னு கேட்டேன்.

- ஒரு சாலை தெரியுது சார்! தனியா கார் வலது ஓரமா நிக்குது சார்! அதிலே ஒரு ஆசாமி உட்கார்ந்திட்டிருக்கார் சார். அவர்தான் காரை ஓட்டறவரு. அவரை யாரோ மிரட்டறாங்க. கத்தியால் குத்திட்டு ஓடறாங்க சார்! என்று கூறினாள் அவள்.

- எனக்கு கொஞ்சம் வேடிக்கையா இருந்துச்சு! என்னம்மா இது?ன்னு கேட்டேன்.

- அதுக்கு அவ சொன்னா, எனக்கும் திகைப்பா இருக்கு! இது என்ன சார்னு கேட்டாங்க! அவங்களுக்கே விளக்கம் தெரியல்லை.

- செந்தில் இப்போது கூர்மையாக டாக்டரை பார்த்தார்.

- டாக்டர் தொடர்ந்தார்.

- அப்புறம் நானும் கொஞ்ச நாழி யோசிச்சிட்டு இருந்தேனா, உடனே சமீபத்திலே நடக்கிற கொலைங்க ஞாபகம் வந்துடுச்சு. இந்தக் கொலைகளிலே ஒண்ணைத் தான் அவங்க காட்சியாக கண்டிருக்காங்கன்னு நினைச்சேன்.

- சரிதா! சரிதா! என்று அவங்களை அவசரமாக நிறுத்தினேன்.

- இதோ பாரம்மா! சொல்லம்மான்னு தூண்டினேன். அவங்க திரும்பவும் தனக்கு தோணினதை சொன்னாங்க!

- அந்தக் கொலையாளி எப்படி இருக்கான் பாரும்மா? அவனைப் பத்தி சொல்லுன்னு சொன்னேன்.

அவங்க கொஞ்ச நேரம் விரைச்சு இருட்டை பார்த்துட்டே இருந்தாங்க.

சார் அவங்களை மட்டும் பார்க்க முடியல்லே சார்! ஒரே இருட்டா இருக்கு. முகமே தெரியல்லைன்னு சொன்னாங்க.

செந்தில் கண்களைச் சுருக்கினார்.

ரவீந்திரன் நிறுத்தி. . . உங்களுக்கு என்ன தோணுது? என்றார்.

- இல்லை! எல்லாம் கண்கட்டு வித்தையா இருக்கு!

- நம்பறது கஷ்டமா இருக்கா?

- இல்லை! உலகத்திலேயே என்னென்னவோ புதுமை நடக்குது. அதிலே இதுவும் ஒண்ணு. இதுக்கு முன்னாடி அந்த அம்மாகிட்டே இந்த சக்தி இருந்திச்சா?

- இல்லை.

- ஆனால் இப்போ எப்படி வந்திச்சு?

- அவங்களுக்கு சில சமயம் ஆவி பிடிச்சு ஆட்டறது உண்டு.

- ஓ!

- இதிலே ஒண்ணு சொல்றேன். மேனாட்டு வைத்தியம் இதை நம்பாட்டா கூட, பல விஞ்ஞானிங்க, பல்கலைக் கழகங்க இதிலே ஆராய்ச்சி பண்றாங்க.

- கேள்விப்பட்டிருக்கேன்.

- ரஷ்யாவிலே கூட இதை எல்லாம் ஒத்துக்கிட்டு ஆராய்ச்சி கூடச் செய்யறாங்க!

- அப்படியா? என்று ஆச்சரியத்துடன் கேட்டான் செந்தில்.

- ஆமாம். அது மட்டுமில்லை. மறுஜன்மம், மெஸ்மரிசம், ஈ.எஸ்.பி. எல்லாத்திலேயும் ஆராய்ச்சி செய்யறாங்க!

- படிச்சிருக்கேன்.

- மூளை என்பது இன்னும் முழுவதும் கண்டுபிடிக்க முடியாத பிரதேசம். மூளையின் ஒரு சதவீதத்தைக் கூட இன்னும் நாம்ப அறிந்தபாடில்லை. மூளைக்குள் எத்தனையோ ஆற்றல்கள் உண்டு. பல ஆற்றல்கள் மறைஞ்சு இருக்கும். அந்த மறைஞ்ச ஆற்றல் சில இப்ப திடீர்னு வெளியாயிடும்.

- புரியறது! இப்போ நீங்க சொல்ற பெண்ணுக்கு அப்படித்தான் நடந்திருக்கு இல்லையா?

- ஆமாம். அவங்க இப்போ வரப்போறாங்க.

செந்திலின் ஆர்வம் நூறு டிகிரி ஏறியது.

அப்போது ஏதோ அரவம்.

செந்தில் நிமிர்ந்து பார்க்க,

அறை வாசலில் சரிதா பிரசன்னமாகி நின்றாள்.

அவளது தோற்றமே வித்தியாசமாகத் தோன்றியது.

# 10

ரவீந்திரனும், செந்திலும் அவளைப் பார்த்தார்கள்.

ஒரு முயல்குட்டி போலத் தோன்றினாள்.

கையில் எடுத்து அரவணைக்கலாம்.

கண்ணில் மட்டும் ஆழம் இருந்தது.

ஒருவேளை அதுதான் எதிர்காலத்தை பார்த்துக் கொண்டிருக்கிறதோ?

அறிமுகங்கள் நடந்தன.

- நான்தான் அந்தக் கொலைகளை துப்பறிஞ்சுக்கிட்டு வரேன்! நீங்க உதவி செஞ்சா நல்லா இருக்கும்! என்றார் செந்தில்.

மெல்லிய புன்னகை அவள் முகத்தில் தளும்பியது.

- என்னாலே முடிஞ்சதைச் செய்யறேன். நானேதான் டாக்டர்கிட்டே சொன்னேன். இதுபோல காட்சி வருதுன்னு.

- குட்! அப்படித்தான் இருக்கணும்! எல்லா மக்களும் இப்படி போலீசோடு ஒத்துழைச்சா நாங்க சிறப்பா பணியாற்ற முடியும் மேடம்!

ரவீந்திரன் பிறகு அவளிடம் அந்தக் காட்சியை மீண்டும் பார்க்கச் சொன்னார்.

சிறிது நேரத்தில் எல்லாரும் மவுனமானார்கள்.

-அன்னிக்கு வந்திச்சு! இன்னிக்கு வருமா தெரியலை! என்று சொல்லி அவள் கட்டிலுக்குப் போனாள். மெத்தையில் படுத்தாள்.

கண்களை மூடினாள். சிறிது நேரத்தில் பார்வை துவண்டது.

மெள்ளத் திரும்பினாள். -டாக்டர் எதுவும் வரல்லை! என்றாள்.

ரவீந்திரனும் சில கேள்விகளைக் கேட்டார்.

முடிவில் அவள் -எனக்கு ஒரு துண்டு கொடுங்க! என்றாள்.

துண்டு வரவழைக்கப்பட்டது.

அதைச் சுருட்டித் தலை அடியில் வைத்தாள். தலையில் அடிபட்ட இடத்திற்கு அடியில் வைப்பதை ரவீந்திரன் அறிந்தார்.

சிறிது நேரம் அதில் அழுத்தித் தலையை வைத்தாள்.

பிறகு, டாக்டர், தெரியுது! தெரியுது! என்று கத்தினாள்.

- சரிதா விடாதீங்க! அந்த நினைப்பிலே ஊறிடுங்க! அந்தக் காட்சியை இழந்துடாதீங்க! என்று பரபரத்தார்.

செந்தில் அவர்களை கவலையோடு பார்த்தார்.

சரிதாவின் கண்கள் தொலைதூரம் ஓடியிருந்தன.

அவற்றில் ஒரு மர்ம மினுமினு தெரிந்தது.

- சொல்லம்மா! என்ன பார்க்கிறே! என்றார் ரவீந்திரன்.

டிராயரிலிருந்து பென்சிலையும் பேப்பரையும் எடுத்து அவள் அருகில் உட்கார்ந்தார்.

சரிதா ஒரு பிரயாஸையில் இருந்தாள்.

- சார்! என்றாள் முனகலாக.

- சொல்லம்மா!

- எனக்கு ஒரு இருட்டான ரோடு தெரியுது.

- சரி!

இரண்டு பக்கமும் மரம் ஜாஸ்தியாக இருக்கு.

- ரைட்.

- அதிலே ஒரு கார் வேகத்தை குறைச்சுட்டே வருது. ஒரு ஓரமாய் போய் நிற்குது. அதன் முன் விளக்கு அணையுது.

- ஓ. கே. ரைட்!

அவள் சிறிது நேரம் மவுனமாயிருக்க, என்ன என்று தூண்டிவிட்டார் அவர்.

- உள்ளே எதுவும் தெரியலை சார்!

- எதுக்குள்ளே.

- காருக்குள்ளே?

- சரி வெளிப்புறம் தெரியுதா?

- அந்தக் கார் நின்ன இடத்திலே ஏதாவது அடையாளம் தெரியுதா?

- பார்க்கிறேன் சார்! அவள் கண்ணை மூடிக் கொண்டாள்.

'டிக். . . டிக். . .' என்று நேரம் ஓடியது. ஊசி நிசப்தம் உள்ளே.

- அடையாளம் எதுவும் தெரியலை. எல்லாம் ஒரே மாதிரியான பாதையாகத்தான் தெரியுது. ஆனா

பிளாட்பாரம் நடுவே ஒரு அழகான கோழி முட்டை வடிவத்தில் ஒரு கூழாங்கல் இருக்குது.

- மேடம்! கொஞ்சம் ரோட்டைப் பார்த்து திரும்பறீங்களா?

- திரும்பறேன்.

- ரோட்டில் என்ன தென்படுது?

- தார் ரோடு ஆச்சே! கறுப்பா இருக்கு.

- ஏதாவது வாகனம் தென்படுதா?

- இப்பக்கூட ஒரு லாரி போச்சு! என்றாள் அவள்.

- அப்படியா என்ற ரவீந்திரன் தொடர்ந்து

- மேடம்! எனக்கு விவரம் வேணும். உங்களாலே அதன் நம்பரைப் பார்க்க முடியுமா? என்று கேட்டார்.

செந்திலுக்கு சுவாரஸ்யம் தட்டியது.

ரவீந்திரன் கேட்டதும் புத்திசாலித்தனமாக இருந்தது.

- ஏதாவது வாகனம் வரட்டும். பார்க்கிறேன் சார்! என்று சொல்லி திரும்பவும் கண்களை மூடிக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து - சார்! சார்! சார்! என்று கூவினாள்.

- என்ன? என்று ரவீந்திரன் பரபரக்குமுன், - ஒரு கார் சார்! ஓடிட்டது! ஓடிட்டது! என்று கூறினாள் அவள்.

- நம்பர் பார்க்க முடியலையா?

- இல்லை சார், தெரியலை.

சிறிது நேரம் அவள் பேசாமல் இருந்தாள்.

பிறகு - சார்! சார்! இதோ ஒரு சைக்கிள்காரன் போறான்! என்று கூறினாள்.

- அப்படியா ஆள் எப்படி இருக்கான்?

- சாதாரண பாண்ட்டும் சட்டையும் போட்டிருக்கான். முகத்தைப் பார்க்க முடியலை. இருட்டோடு போயிட்டு இருக்கான்.

- ரைட்.

- ஏதாவது குறிப்பிட்ட அடையாளம் சொல்ல முடியுமா?

- கவனிச்சுக்கறேன் சார்!

நிசப்தமாக இருந்தாள்.

திடீரென்று பேசத் தொடங்கினாள். - சார்! ஒரு வண்டி ஒண்ணு தூரக்க வருது.

- என்ன வண்டி! என்று கேட்டார் ரவீந்திரன்.

இரண்டு நிமிடங்கள் கழிந்த பிறகு அவள், - சார்! அது ஒற்றை காளை வண்டி! என்றாள்.

- அப்படியா? வேறே விபரம் தெரியுமா?

- ஒருத்தன் ஓட்டிட்டு வர்றான், வயசானவன்.

- சரி, பாரம் ஏற்றியிருக்கானா?

- மூட்டையெல்லாம் இருக்கு சார்! ஆனா துணி மூட்டை

- ஒருவேளை சலவைக்காரன் போறானோ என்னவோ?

- அப்புறம் சார் கீழே மண்ணெண்ணெய் விளக்கு! என்று சொன்னவள், - சார் சார்! என்று அவசரமாகப் பேசினாள்.

- என்ன?

- வண்டி பின்னாடி பொடிசா 'மாரி லாண்டரி'னு எழுதியிருக்கு சார்!

- அந்தக் கார்லே இப்போ ஏதாவது தெரியுதா?

- கவனிக்கிறேன் சார்.

- ரெண்டு பேர் சிரிச்சுப் பேசற மாதிரி சத்தம் சார்.

- அவங்க முகம் தெரியுதா?

- இல்லை! இருட்டு!

- ரவீந்திரன் கைகளைப் பிசைந்தார்.

- சார்! சார்! என்று அவள் நாக்கு குழறியது.

ரவீந்திரன் பரபரத்தார்.

- கார்லேர்ந்து 'ஆ!' என்று சத்தம் சார்!

- பாரு! பாரு! எதாவது தெரியுதா?

- இல்லை. யாரோ இறங்கி கடகடன்னு ஓடற சத்தம்!

- பாரு! பாரு!

- தெரியலையே சார்!

- மிஸ்டர் செந்தில்! நீங்க ஏதாவது கேட்கணுமா?

- நீங்க கேட்கிறதே சுவாரஸ்யமா இருக்கு. நல்லா விசாரணை பண்ணறீங்க! என்றான் செந்தில்.

சரிதா திடீரென்ற நீண்ட மூச்சுகளாக இழைத்தாள்.

ரவீந்திரனுக்கு புரிந்து விட்டது. அவள் சுய நிலைக்கு வருகிறாள் என்று.

- சரிதா! காருக்குள்ளே பார்க்க முடியுமா?

- எனக்கு இனிமே வர மாட்டேங்குது! என்று கூறினாள் அவள்.

- நீங்க பயிற்சி பண்ணினா வந்திட முடியும் இல்லையா? என்று கேட்டார் செந்தில்.

- ட்ரை பண்ணறேன் சார்! என்று கூறினாள் அவள்.

- இப்போ பாருங்க! உங்களாலே கொலை நடந்த இடத்துக்கு மானசீகமாக போக முடிஞ்சது! கொலையாளியைப் பார்க்க முடியுமா?

- முயற்சிக்கிறேன் சார்!

உடம்பில் ஒரு பதட்டம் வர கண்களை மூடினாள்.

நேரம் ஓடியது.

- சார்! சார்! என்று அவளே அழைத்தாள்.

சட்டென்று அவள் கட்டிலை விட்டு எழுந்து அடுத்த அறைப் பக்கம் ஓடினாள்.

உடனே ரவீந்திரன், சரிதா! சரிதா! என்று சொல்லி அவளைத் தொடர்ந்தார். இரண்டு எட்டில் அவளைப் பிடித்து விட்டார். அவள் கண்கள் மட்டும் ஏதோ கொடூரமாக எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தன. அவள் ஆத்திரத்துடன் திரும்பினாள்.

- டாக்டர்! டாக்டர்! என்னை விட்டுடுங்க! எனக்கு இதெல்லாம் வேண்டாம்! என்று கோபக் கெஞ்சலாகக் கூறினாள்.

டாக்டர் விடவில்லை.

- சரிதா கொஞ்சம் இருங்க! பொறுமையாக இருங்க! இப்ப ஏன் ஓடறீங்க! என்ன நடந்திடுத்து? ஏன் உங்களுக்கு பயம்? என்று கேள்விகளை அடுக்கி கொண்டே போனார்.

அவள் அதைக் கேட்கும் நிலையில் இல்லை.

- இல்லை சரிதா! என்று கையை அழுத்தமாகப் பிடிக்க, அவள் திமிறினாள்.

- மேடம்! உங்களுக்கு இதெல்லாம் பிடிக்கலையா? என்று அவளிடம் கேட்டார்.

- சார்! என் மனசு குழம்புது. இந்த மாதிரியெல்லாம் என்னை சோதனை பண்ணாதீங்க. என்று அவள் கெஞ்சிக் கேட்டாள்.

உடனே செந்தில் - ரவீந்திரன்! அவங்க இஷ்டப் படலைன்னா விட்டுடுங்க. ஏன் தொந்தரவு பண்றீங்க? என்று கேட்டார்.

ரவீந்திரன் அவள் கையை நழுவ விட்டார்.

அடுத்த கணம் மடமடவென்று அவள் கீழே ஓடினாள். படிகளில் அவளது காலடிகள் ஓசையாக அடித்தன.

- வாங்க ரவீந்திரன்! அவங்க விருப்பப்படாட்டா நீங்க என்ன செய்ய முடியும்?

இருவரும் கீழே இறங்கினார்கள்.

- இதென்ன மழை பெய்கிறது? என்று சொன்னார் ரவீந்திரன்.

- ஓ! இதுவரை சத்தம் கேட்கலையே! என்றார் செந்தில்.

தூறல் விழுந்த சத்தம் பலத்தது.

- செந்தில், நீங்க இதை நம்பறீங்களா? என்றார்.

- நான் நம்பறேன். நான் மட்டுமல்ல மேனாட்டிலே கூடப் போலீஸ் நிறுவனங்கள் இந்த மாதிரி விஷயங்களைத் தான் நம்பறது.

- நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். இதெல்லாம் உண்மையா? என்று கேட்டார் ரவீந்திரன்.

- எல்லாம் உண்மை. அமெரிக்காவிலும் நம்பறாங்க. ஐரோப்பாவிலும் நம்பறாங்க. டிபார்ட்மெண்ட்டிலேர்ந்து கூட அவங்களுக்குச் சம்பளம் கொடுக்கிறாங்க.

- ஓகோ... அவ்வளவு தூரத்துக்கு ஒத்துக்கறாங்களா?

- ஆமாம். கோர்ட்டிலே மட்டும் அந்த குறி சொல்றது எடுபடாது.

அவங்க நம்ப மாட்டாங்க. மழை சடசடக்க ஆரம்பித்தது.

- ஓ! பெரிய மழை ஆரம்பிச்சுட்டதே! என்று கூறினார் ரவீந்திரன்.

அதே நேரம் அவர் கண்கள் வாசல் கதவை நோக்கித் திரும்பின.

செந்திலும் திரும்பினார். அங்கு சரிதா திடீரென்று நின்றாள். அவள் உடை நனைந்திருந்தது.

மழையில் போய்விட்டு திரும்பியிருக்கிறாள்.

- மழை வந்துடுத்து! என்று சொல்லி உள்ளே வந்தாள். சோபாவில் அமர்ந்தாள். மேலே சொட்டும் நீர்களை கர்ச்சீப்பால் ஒத்தினாள்.

இருவரையும் பிரமையோடு பார்த்தாள்.

ஜ0ஞ

# 11

சோபாவில் அமர்ந்த சரிதா,

முகத்தில், கூந்தலில் உடைகளில் சில திருத்தங்களைச் செய்தாள்.

டாக்டரையும், இன்ஸ்பெக்டரையும், ஒரு மிதப்பார்வை பார்த்தாள்.

- ஸாரி ஸாரி! நான் உங்களுக்கு உதவி செய்ய முடியாமல் போயிடுத்து என்றாள்.

- சரிதா! இனிமே உனக்கு பிடிக்கலைன்னா அதைப் பற்றிக் கேட்க மாட்டேன்! என்றார் ரவீந்திரன்.

அவள் கண்கள் சுருங்கின.

- தவறா நினைக்காதீங்க. எனக்கு இது ரொம்ப கஷ்டமான அனுபவமாப் போயிடுது!

- ஓ!

- இப்போ என் உடம்பிலே என்ன நடக்குது தெரியுமா?

- சொல்லுங்க?

- சாதாரணமா சொப்பனத்திலேயும் தூக்கத்திலேயும் தேகத்தை விட்டு வெளியே போற அனுபவம் வரும். எங்கேயாவது வெளியிலே பறப்போம் இல்லையா?

- ஆமாம்.

- அதுமாதிரித்தான் எனக்கு இந்தப் பிரமை பிடிக்கிற நேரத்திலே உடம்பை விட்டு வெளியே போற உணர்ச்சி வருது.

- சரி.

- அந்த சமயத்திலே எனக்கு காட்சிங்க தோணுது. அதைத்தான் உங்களுக்கு சொல்றேன்.

- இப்போ உடம்பை விட்டு வரேனே தூக்கத்திலேயும் சரி, சொப்பனத்திலேயும் சரி, அப்ப எனக்கு அதைப் பத்தி கவலை இல்லை. எப்படியாவது திரும்ப நாம்ப உடலுக்குள்ள திரும்பப் போயிடுவோம். ஆனா இப்ப முழு நினைவோட உடம்பை விட்டு வெளியே வரேன். பாருங்க! அப்ப எனக்கு ஒரே பயம் வந்துடுது. வெளியே வந்தவள் திரும்பவும் உடலுக்குள்ளே போயிட முடியுமான்னு பயம்.

ரவீந்திரன் திடுக்கிட்டார்.

- தவிச்சுப் போயிடறேன். திரும்பி போகாமல் இருந்துடுத்துன்னா என்ன ஆகுமோன்னு ஒரே பயம். அதனாலதான் நான் அந்த மாதிரி செய்யப் பயப்படுகிறேன் என்றாள் சரிதா.

- ரைட் சரிதா! இனிமே அந்த மாதிரியெல்லாம் செய்ய வேண்டியது இல்லை.

- ஆனா ஸார்! அந்த மாதிரி வெளியே போற அனுபவம் இயற்கையா ஏற்பட்டா நிச்சயம் சொல்றேன். ஆனா வற்புறத்தி அப்படிப் போக வைக்காதீங்க!

ரவீந்திரன் தலை அசைத்தார்.

சரிதா எழுந்து சன்னல் பக்கம் போய் நின்றாள்.

அவளுக்கு நல்ல காற்று வேண்டி இருந்தது.

இன்ஸ்பெக்டர் செந்தில் எழுந்து அவள் அருகில் சென்றார்.

சரிதா அரும்பாக ஒரு புன்னகை செய்தாள்.

- மேடம்! நீங்க இப்ப சொன்னதே எங்களுக்கு பெரிய தடயம்! ஒரு கேள்வி. பதில் சொல்வீங்களா?

- கேளுங்க!

- இதுக்கு முன்னாலே உங்களுக்கு அந்தக் கொலைக்காட்சி தெரிஞ்சுதுன்னு சொன்னீங்களே. இந்தக் காட்சிங்க எப்படித் தெரிய ஆரம்பிச்சது?

- அதுவா? என்னுடைய சிநேகிதி ஒருத்தி இறந்து போனா, அவள் இறந்து போன அதே நேரத்திலே என் படுக்கை அறையில் வந்து நின்னா! அன்னிலேர்ந்து இந்த மாதிரிக் காட்சிங்க வர ஆரம்பிச்சாச்சு.

- ஓ. கே. மேடம்! என்றார் செந்தில்.

**கா**லையில் ஆபீஸில் இன்ஸ்பெக்டர் செந்தில் மவுன நடையில் உலாவினார்.

மணி அடித்தது.

போனைத் தாபத்துடன் எடுத்தார்.

- ஏஸி பேசறேன். என்ன ஆச்சு?

- தோரணை பீறிட்டது.

- செப்டம்பர் ஒன்பதுன்னு தேதி கொடுத்திருக் கிறான். அதான் லேட்டஸ்ட்! உங்களுக்குத்தான் சொன்னேனே!

- ஆக்ஷன் உடனே எடுங்க!

- எடுக்கிறேன். எல்லா சாலைகளையும் இரவு நேரத்திலே கண்காணிக்கப் போறேன்.

- அதைச் செய்யுங்க. நடக்குதோ நடக்கலியோ! கோட்டை விட்டுராதீங்க.

- இல்லை ஸார்! நிச்சயம் கவனிக்கிறேன். ஒரு வேண்டுகோள். ஆள் பலம் தேவை.

- கேளுங்க எவ்வளவு வேணாலும் கொடுக்கிறோம்!

போனை வைத்தார்.

ஆக்ஷன், ஆக்ஷன்.

- யார் மீது ஆக்ஷன்?

- தொடர் கொலை என்றால் சாதாரண விஷயமா?

செய்பவன் அறிவாளியாக இருப்பான்.

யார் கண்ணிலும் மண்ணைத் தூவுவான்.

கொலையை ஒரு சாதனையாகச் செய்வான்.

இல்லாவிட்டால், தேதியை அறிவிப்பானா?

அதுவும் போலீஸ் துறையிடம்.

இன்ஸ்பெக்டர் செந்திலின் தலைக்குள் 100 டிகிரி செல்சியஸ் குதித்தது.

கண்கள் தீயாகப் பார்த்தன.

எரிச்சலுடன் மேஜையில் ஏறி உட்கார்ந்தார்.

நிசப்தம்.

மெள்ள மெள்ள சரிதா விஷயங்கள் நினைவுக்கு வந்தன.

சட்டென்று ஒரு பளிச்!

கொலை நடந்த இடத்தின் காட்சியைத்தானே அவள் கூறினாள்.

அதில் எத்தனை விஷயங்கள் வெளிவந்தன?

- ரகு! என்றார்.

துணை இன்ஸ்பெக்டர் இரண்டு எட்டில் ஆஜரானார்.

இன்னிக்கு கொலை நடந்த இடத்துக்குப் போறேன். ராத்திரிலே!

- எஸ் ஸார்!

- அந்த இடத்தைப் பற்றி ஒரு அமானுஷ்ய ஜோஸ்யம் கேட்டேன்.

- நம்பறீங்களா?

மேனாட்டுப் போலீஸ் எல்லாம் நம்புது! நாமளும் பார்ப்போம்.

- எஸ் ஸார்!

- நீ செய்ய வேண்டியது, ராமலிங்கம் தெரியுமில்லே? கொலையான சிவராமின் சினேகிதர். நெல்லூரில் இருந்து பெண்களை கொண்டு வந்தவர்.

- எஸ் ஸார்!

- பெரிய மனுஷர்தான். இருந்தாலும் ஸாடிஸ்டா இருப்பாரோன்னு தோணுது. அவரே இந்தக் கொலைகளைச் செய்திட்டு வந்தால். . .

- கண்காணிக்கலாம் ஸார்.

- இப்போ 9-ந் தேதின்னு நமக்கு கெடு போன்ல வந்திச்சு! இன்னும் மூணு நாள் தள்ளி இருக்கு 9-ந் தேதி. அதுக்கு முன்னாடி ஒண்ணு செய்யறே!

- எஸ் ஸார்!

- இன்னிக்கு ராத்திரி ராமலிங்கம் வீட்டைக் கண்காணிக்கிறே! அங்கே என்னென்ன நடக்குது? யார் யார் வராங்கன்னு தெரிஞ்சுக்கணும்.

- எஸ் ஸார்!

இரவு கனத்தது.

ஸ்கூட்டரில் செந்தில் புறப்பட்டார்.

மனம் கலங்கியது!

ஸ்கூட்டர் சீரான வேகத்தில் போக, சிந்தனைகள் தொடராக வந்தன.

கையும் காலும் தாமாகவே இயங்கின. ஸ்கூட்டர் அவரது ரிப்ளக்ஸ் நடவடிக்கையில் ஓடியது.

போக்குவரத்துகள் குறைந்து விட்டன.

சப்தம் மெதுவாக அழிந்து கொண்டிருந்தது.

மணியைப் பார்த்தார். 10-05 வாசித்தது.

பத்திலிருந்து பதினொரு மணிக்குள்தான் ராஜசேகர் கொல்லப்பட்டார்.

இப்போது அங்கே போனால் சரியாக இருக்கும்.

புறநகர் போகும் அவென்யூவைச் சேர, அரை மணி நேரம் எடுத்தது.

சாலை முழுவதுமாய் காலி!

வானத்தைக் காணவில்லை.

குறிப்பிட்ட கிளைச்சாலை வந்ததும் இறங்கினார்.

தூரத்தில் இருந்தே கொலை நடந்த இடத்தை கவனித்து விட்டார்.

அதை நெருங்க நெருங்க மனம் ஏதோ வகையில் கலங்கியது.

தலத்தை அடைந்து ஸ்கூட்டரை ஓரங்கட்டினார்.

இறங்கினார்.

இங்கேதான் கார் நின்றது! மனம் பேசியது.

ஆமாம்.

இங்கே ஸ்ட்ரெச்சரில் சடலம் இருந்தது.

பைக்குள் கையைச் செலுத்தினார். டார்ச்சை எடுத்தார்.

தரையில் வெளிச்சத்தைச் செலுத்தி ஒவ்வொரு அங்குலமாகப் பார்த்தார்.

ஏதாவது கிடைக்குமா?

அப்போதுதான் அந்தச் சத்தம் கேட்க ஆரம்பித்தது.

தடக்! தடக்!

திரும்பிப் பார்த்தார். தூரத்தில் ஒரு முணுக்கு வெளிச்சம் தெரிந்தது.

கைவண்டிதானா?

லாண்டரி வண்டியா?

ஒரே வேகத்தில் மனம் பாய்ந்தது.

கைவண்டி வந்தது.

அவரைத் தாண்டியது.

வண்டிப் பலகையில் மாரி லாண்டரி பெயரைப் பார்த்ததும் திடுக்கிட்டார்.

உடம்பில் ஒரு பதட்டம் ஓடியது.

ஆச்சரியம்! அந்தப் பெண் சொன்னது சரியாகப் போய்விட்டது.

வண்டி பின்னால் போய் - யாரப்பா? என்று குரல் கொடுத்தார், வண்டி நின்றது.

செந்தில் முன்புறம் வந்தார்.

- வண்டி எங்கே போகுது?

- காந்தி நகருக்கு!

- எங்கேயிருந்து போகுது?

பரப்புக்குளம் இல்லே. அங்கேதான் துணி வெளுத்து வக்கிறாங்க. எடுத்துட்டுப் போறேன்.

- தினம் போறியா?

- ஆமாம்.

- இந்தப் பக்கம் ஒரு கொலை நடந்ததாமே!

- ஆமாம். மூணு வாரமாச்சு! அன்னிக்கு கொலை நடக்கிறதுக்கு முன்னாடி நான் போயாச்சு!

- கொலையைப் பார்க்கலியே?

- இல்லேங்க! காரைத்தான் பார்த்தேன்! எதிரே வந்திச்சுங்க! ஒதுங்கி நின்னேன்.

- காருக்குள்ளே பார்த்தியா?

- வெளிச்சமில்லைங்க! எதுவும் தெரியலை.

- குரல் ஏதாச்சும் கேட்டதா?

- ஒரு பெண்ணும் ஆணும் பேசிக்கிட்டே போனாங்க!

- பெண்ணா?

- ஆமாம். அதுதான் சிரிச்சிக்கிட்டே போச்சு!

- அப்புறம்?

- நான் பாட்டுக்கு மெயின் ரோட் பக்கம் போயிட்டேங்க! பீடி பத்தவச்சு ரோட்டோரம் உட்கார்ந்துட்டேங்க. அயாசமா இருந்துச்சு!

- அப்பத்தான் 'ஆ'ன்னு சத்தம் கேட்டுச்சு.

- கொலையா?

- அதான் இருக்கணும். அப்பறும் காலடி ஓசையா கேட்டுச்சு! திடீர்னு கார் புறப்பட்டுதுங்க.

- அந்தக் காரா?

- அது இல்லைங்க! மெயின் ரோட்ல கேட்ட மாதிரி இருந்திச்சு! ஒரே ஓட்டம் ஓடிடுத்துங்க!

- நீ பார்த்தியா?

- இல்லைங்க? ரொம்ப இருட்டுங்க. நான் இருந்தது வலது புறங்க, அது பீச்சாங்கைப் பக்கமா ஓடிடுத்து.

செந்தில் யோசனைகள் விரிந்தன.

வண்டிக்காரனோடு மெயின் ரோட்டுக்குப் போனார்.

வலதுபுறம் நின்ற இடத்தை வண்டிக்காரன் காட்டினான்.

உண்மையில் இருட்டு அங்கே ஒரு மையாகத் தோய்ந்திருந்தது.

உயர மரங்கள் இருளை இறுக்கி இருந்தன.

மனம் சீறி ஓடியது.

என்ன இது?

கொலை செய்தது ஒரு பெண்ணா?

கண்கள் வெறித்தன.

யோசனை பலவிதப் பின்னல்கள் இட்டது.

இன்னொரு கார் வந்திருக்கிறதே?

அது யார் கார்? எப்படி வந்தது? அதில் யார் வந்தார்கள்?

ஒரு விடை தேடி மனம் அங்கும் இங்கும் பறந்தது.

ஒரு யோசனை பிடிபட்டது.

ராஜசேகரை ஒரு பெண் மயக்கி அழைத்து வந்திருக்கிறாள். இங்கே கிளைச் சாலையில் அவர்கள் கார் நின்றதும் ஒரு ஆண் ராஜசேகரை குத்திக் கொன்றிருக்கிறான்.

பிறகு பெண்ணும், ஆணும் வேறு காரில் ஏறி தப்பி விட்டார்கள்.

சரிதானா?

# 12

இன்ஸ்பெக்டர் செந்தில் மறுநாள் எழுந்த பிறகு, சிந்தனைகள் திரும்ப அவரை - மூடின.

முந்திய இரவுக் காட்சிகள் தொடர்ந்து சினிமா காட்டின.

எண்ணங்கள் வேறு எங்கும் ஓடவில்லை. அந்தக் காட்சிகளையே மொய்த்துக் கொண்டிருந்தன.

- ம்! சீக்கிரம்! சீக்கிரம்! ஏதாவது கண்டுபிடித்து ஆகவேண்டும்! ஏதாவது உடனே செய்ய வேண்டும்! என்று மனம் விரட்டியது.

- ஆமாம். அடுத்த கொலைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன.

அதற்குள். . .

போனை எடுத்தார்.

டாக்டர் ரவீந்திரனை அழைத்தார்.

- ரவீந்தர்! நான் சரிதாவைப் பார்க்க வேண்டும்' என்றார்.

சரிதாவை மாலையில் பார்த்தார்கள்.

உடலை மென்மையாக அமிழ விட்டு சோபாவின் சாய்மானத்தில் அவள் இருந்தாள்.

டாக்டரும், இன்ஸ்பெக்டரும் வந்ததைப் பார்த்ததும், சட்டென்று கலைந்து உட்கார்ந்தாள்.

- வாங்க! வாங்க! என்றாள்.

செந்தில் தன் கஷ்டங்களை கூறினார். இரண்டு தினங்களில் இன்னொரு கொலை நடக்க இருப்பதாகவும் கூறினார்.

- நீங்க ஏதாவது உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்.

- ஸார்! நான்தான் சொல்லிட்டேனே! எனக்கு அந்தப் பிரமை வரவழைக்கிறது ரொம்ப கஷ்டம் ஸார்! என்று முகத்தை சுளித்து அந்தச் சிரமத்தின் வலிப்பைக் காட்டினாள்.

- ரைட் மேடம்! ஒரே ஒரு உதவி. நீங்க சொன்ன இடத்துக்கு நேத்து போயிட்டு வந்தேன். எல்லாம் நீங்க சொன்ன மாதிரிதான் நடந்திருக்கு! நீங்க எங்களோடு அந்த இடத்துக்கு வந்தா உங்களுக்கு ஏதாவது தெரிய வருதான்னு பார்க்கலாம்.

டாக்டரும் அப்படியே வழிமொழிந்தார்.

சரிதாவின் கண்கள் மேலே ஓடின.

- ஊம்! என்று பலவீனமாக ஒலித்தாள்.

மூவரும் புறப்பட்டு அங்கே போய் சேர்ந்தபோது ஒன்பதுக்கும் மேல் ஆகியது.

இருட்டு அடைந்து மரங்களை மறைத்தது.

கிளைச்சாலையில் ஜீப்பை நிறுத்தி, வண்டியின் முன் விளக்கு வீசிய 'மா' வெளிச்சத்தில் நடந்து போனார்கள்.

'சிள்' என்று சுருதி அடித்தது இரவு.

கீழே சில ஜந்துக்கள் 'குடுகுடு' உருண்டு தடத்தை விட்டு ஓடின.

இறந்த உடல் காரில் கிடந்த இடத்தை அவளிடம் காட்டினார்கள்.

சரிதா தனது மெஸ்மரிச கண்களுடன் பார்வையைச் செலுத்தினாள்.

அங்கங்கு தயங்கி பார்வை மிதந்தது.

செந்திலும், ரவீந்திரனும் அவளைக் கவனித்துக் கொண்டே இருந்தார்கள்.

ஒன்று, இரண்டு என்று நிமிடங்கள் ஓட,

மெள்ள மெள்ள அவள் பார்வை தனது விரிவைச் சுருக்கிக் கொண்டு அவளிடமே தஞ்சமாக அமர்ந்து கொண்டது.

திரும்பினாள்.

- ஸார்! நெகிழ்ச்சி எதுவும் வரலை! என்றாள் சோகமாக.

இரண்டு பெருமூச்சுகள் மற்ற இருவரிடமும் வந்தன.

அவளை அழைத்துக் கொண்டு சாலைக்கு திரும்பினார்கள்.

26260

பல இடங்களில் நிறுத்தி அவளுக்கு நெகிழ்ச்சி ஊட்டப் பார்த்தார்கள்.

ஊஹூம்! எதுவும் பலிக்கவில்லை.

ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

- சரிதா நாளை, அதற்கு மறுநாள், இதற்குள் உங்களுக்கு ஏற்பட்டால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்க! என்றார் செந்தில்.

**கா**லையில் அந்தக் கவலை கனத்துக்கு கொண்டு ஏறியது.

செந்தில் வெப்பமூச்சுடன் உலாவினார்.

ஆபீசுக்கு சீக்கிரமே போய் விட்டார்.

அங்கங்கே புறநகர் செல்லும் பிரைவேட் கார்களை எல்லாம் சோதனை செய்ய உத்தரவு கொடுக்கப் பட்டிருந்தது.

எங்கிருந்து என்ன செய்தி வரும் என்று செந்திலின் ஆவல் தூங்காமல் எரிந்து கொண்டே இருந்தது.

இரவும் வந்தது.

கெடுநாளுக்கு முந்திய இரவு இது என்று அவர் மனம் முணுமுணுத்தது.

இவ்வளவு பந்தோபஸ்து செய்திருக்கிறோம். இதில் கொலையாளி சிக்கப் போகிறானா?

சலித்தது மனம்.

ராமலிங்கத்தைக் கண்காணிக்க வேண்டும். துணை இன்ஸ்பெக்டர் ரகு ஏற்கனவே போயிருந்தார்.

இரவு எட்டு மணிக்கு மேல் அவரும் புறப்பட்டார். தெற்கு அவென்யு ஓரம் நிழல் இருட்டுக்குள் அவர் ஜீப் நின்றது.

ரகுவுடன் வயர்லெஸ் தொடர்பு கொண்டார்.

எட்டரை தாண்டி ஒன்பது நெருங்கும்போது ரகு ஒரு செய்தி அனுப்பினார்.

ராமலிங்கம் வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

காரில் புறப்படுகிறார், என்று ரகு கூறினார்.

அவர் காரைப் பின்பற்றி ரகு போவதாகக் கூறினார்.

செந்தில் அவசரமாக அவென்யூவை விட்டு, அடுத்த மெயினுக்கு ஓடினார்.

இரண்டாவது கிராஸ் ஓரமாக வண்டியை நிறுத்தினார்.

ராமலிங்கத்தின் காரை நிறுத்தினார்.

ராமலிங்கம் கோபமாக கீழே குதித்தார்.

போலீஸ் தலைகளைப் பார்த்ததும் ஆச்சரியம் குபுக் என்று மேலே கிளர்ந்தது.

- வாட் மிஸ்டர்? என்று செந்திலைக் கேட்டார்.

செந்தில் கனத்த அடிகளுடன் முன்வந்தார்.

- சும்மா செக் பண்றோம்.

அதற்குள் காரின் மீது டார்ச்சுகளை அடித்து போலீசார் எல்லா இடங்களையும் பார்த்தார்கள்.

- பெட்ரோல் டாங்குக்குள்ளே தங்கம் போட்டு வச்சிருக்கேன்! என்று சொல்லிச் சிரித்தார் ராமலிங்கம்.

செந்தில் அடக்கிய எரிச்சலுடன் அவரைப் பார்த்தார்.

ராமலிங்கம் கவலைப்பட்டதாக தெரியவில்லை.

- இன்ஸ்பெக்டர்! சிவராம் இறந்து போனதிலிருந்தே என்னை ஒரு சந்தேகப் புள்ளியாக பார்க்கிறீங்க போல இருக்கு! என்றார்.

மீண்டும் அவர் முகத்தில் மாறாத புன்னகை!

செந்திலுக்கு எரிச்சல் காந்தியது. என்ன பேச? என்ன பதில் சொல்ல?

- சரி! அதுக்கு அடுத்தாப்போல ஒரு கொலை நடந்திச்சே? எங்கேயோ நகரத்துக்கு வெளியிலே கார் நின்னுதே! பேப்பர் எல்லாம் செய்தி முழங்கிச்சே. அப்போ நான் எங்கே இருந்தேன், என் கார் எங்கே இருந்துச்சுன்னு

சோதிச்சிருக்கலாமே, உங்களுக்கு சந்தேகம் எல்லாம் போயிருக்குமே.

செந்தில் பல் அரைபட்டது.

- என் கார் ஒர்க் ஷாப்பிலே நின்னுச்சு. நான் கோயமுத்தூர் லெதர் கம்பெனீஸ் கான்பரன்ஸ்லே இருந்தேன். நான்தான் அங்கு நடுநாயகப் புள்ளி! கலெக்டர் முருகுத்தம்பி வந்திருந்தார். நான்தான் கலெக்டருக்கு இரவு மாநாட்டில் எல்லா விளக்கமும் கொடுத்தேன். அதாவது கொலை நடந்த அன்று இரவு கோயம்புத்தூர் மாநாட்டிலே கலெக்டரோடு பேசிட்டிருந்தேன். அவரே அத்தாட்சி. கேட்டுக்கோங்க போதுமா?

- அதெல்லாம் இருக்கட்டும் ஸார்! என்றார் முதல் பேச்சாக செந்தில்.

- இப்போ எங்கே போறீங்க?

- அதைக் கேளுங்க! என் மைத்துனி திருமணமானவள். கணவரோடு சண்டை போட்டுக்கிட்டு இன்னொரு சிஸ்டர் வீட்டுக்கு போயிருக்காங்க. நான் அவங்களைச் சமாதானப்படுத்தி சேர்த்து வைக்கிறதுக்காகப் போறேன்! நீங்க வேணும்னா என்னை பின்பற்றலாம்!

- சரி என்றார் செந்தில்.

அந்த பதில் ராமலிங்கத்தை திணறவைக்கும் என்று நினைத்தார்.

ஆனால் அவர் காரில் ஏறிபோக ஆரம்பித்தார்.

செந்தில் பின்பற்றினார்.

புறநகரில் கங்காநகர் பகுதி.

அங்கே ஒரு வீட்டு வாசல் முன் கார் நின்றது.

ராமலிங்கம் இறங்கி மணி அடிக்க, செந்தில் வாசலில் இருந்து கவனித்தார்.

ஒரு பெரியவர் வெளியே வந்தார். அதைத் தொடர்ந்து இரு பெண்மணிகள். ஒருத்தி இளையவள்.

- வாங்க! ராமலிங்கம்! நான் ஏற்கனவே நிறைய அட்வைஸ் பண்ணியாச்சு! நீங்க இனிமே எதுவும் சொல்ல வேண்டாம். மோகனா இன்னும் கலக்கத்துலதான் இருக்கிறா. நீங்க உங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க! காலையிலே புருஷன் வீட்டிலே கொண்டு போய் விடுங்க! என்றார்.

மேலும் சில பேச்சுக்கள் தொடர்ந்தன.

அழுதுகொண்டே, இளைய பெண்மணி ராமலிங்கத்தின் காரை நோக்கி வந்தாள்.

அவளை ஏற்றிக் கொண்டு கார் புறப்பட்டது.

செந்திலும் பெருமூச்சோடு ஜீப்பில் ஏறினார்.

நகரத்திற்கு திரும்பும்போது வழியில் ஒயர்லெஸ்சில் கமிஷனர் பேசினார்.

- செந்தில்! இப்போ எங்கே இருக்கீங்க? ராமலிங்கத்தைப் பின்பற்றினீர்களா?

- நகரத்து எல்லையிலே வந்துக்கிட்டிருக்கேன். என் முன்னாலேதான் ராமலிங்கம் கார் போகுது. பின் பற்றியாச்சு. ஆனா இதுவரைக்கும் எந்த உண்மையும் தெரிய வரல்லை.

- அப்படியா சொல்றீங்க?

- ஆமாம். கெடு நாள் முடியற வரை அதாவது நாளை தாண்டி அடுத்த நாள் வரை அவர் எங்க கண்காணிப்பு வட்டத்திலேதான் இருப்பார். அதைத் தாண்டி போக முடியாது.

- ஆளை விட்டுடாதீங்க! கவனிச்சுக்குங்க! செந்தில் தொடர்பை அணைத்தார்.

**கா**லை ஐந்து மணிக்கு செந்தில் வீட்டை அடைந்தார்.

படுத்துக் கொள்ளத்தான் மனம் ஓடியது.

அவ்வளவு சோர்ந்திருந்தது.

உள்ளத்திலும் களைப்பு தோன்றியிருந்தது.

நேராக படுக்கை அறைக்குச் சென்று படுத்து விட்டார்.

எழுந்தபோது காலை எட்டு மணி.

அவசர அவசரமாக பல் தேய்த்து தனது சொந்த வேலைகளை முடித்தார்.

பத்தரைக்கு தாயார் அழைத்தாள் சாப்பாட்டிற்கு புறப்பட்டிருப்பார்.

அதற்குள் மணி அடித்தது.

- ஹலோ! என்றார்

போனைக் கேட்டுக் கொண்டே நின்றார்.

ரிஸிவரை வைத்தபோது அவர் முகம் மாறி விட்டது.

- என்னடா? என்று சொல்லித் தாயார் வந்தாள்.

- இல்லேம்மா வெளியிலே சாப்பிடுகிறேன்! என்றார்.

அவளுடைய பதிலுக்கு காத்திருக்கவில்லை.

நேராக அறைக்குள் சென்று டிரெஸ்சை மாற்றினார்.

வெளியே பாய்ந்து ஜீப்பில் தொத்தினார்.

மனம் குமைந்தது.

ஒரு விஷயத்தில் வெற்றி கண்டோம் என்று நினைத்தது எவ்வளவு பெரிய தவறு.

ஜீப் ஓட, தெருக்கள் பறந்து ஓடின. சாலைகள் அவர் முன் 'திடும் திடும்' என்று ஓடி வந்தன.

கோசல்ராம் தெருவுக்குள் சென்று பதினெட்டாம் நம்பர் வாசல் முன் நின்றார்.

ஏற்கனவே போலீஸ் தலைகள் தென்பட்டன.

சுற்றி ஒரு கூட்டம் நின்றது.

இறங்கினார்.

போலீசார் கும்பல் கீறி வழிவிட்டது.

தடதடவென்று போனார்.

படிகளில் தாவினார்.

உள்ளே நுழைந்தபோது ஏற்கனவே இன்ஸ்பெக்டர் மோகன் நின்று கொண்டிருந்தார்.

செந்திலைப் பார்த்ததும் கையைக் காட்டினார்.

பக்கத்தில் படுக்கை அறை!

அதன் கீழே ஒரு சடலம் கிடந்தது.

கையையும் காலையும் மடக்கி இருந்த விதம் பயமாக இருந்தது.

அருகில் சென்றார்.

புரிந்துவிட்டது.

அதே நேரடித்தாக்குதல்தான்.

ரத்தம் பீறிட்டு உடல் முழுவதும் மறைத்து விட்டது. கீழே கருஞ்சிவப்பாகத் தேங்கி இருந்தது.

சற்று நேரம் பேச முடியவில்லை.

இந்தக் கொலைக் குற்றம் புறநகர்ச் சாலை எதிலும் நடக்கவில்லை.

அப்படி நிகழ்ந்திருந்தால் பெரிய விபரீதமாக இருந்திருக்கும்.

தொடர் கொலையில் சேர்த்திருப்பார்கள்.

- மீண்டும் கோட்டை விட்டாய்! என்று அவனைப் பழித்திருப்பார்கள்.

நல்லவேளை.

லேசாக முகத்தில் புன்னகை வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு மோகன் அருகில் வந்தார்.

- ஏதாவது தடயம்? என்று கேட்டார் செந்தில்.

- ஐயோ! என்று எதையோ மிதித்ததுபோல் துள்ளினார் மோகன்.

- இதைக் கொடுக்க மறந்திட்டேனே! என்று சொல்லி தனது காக்கிப் பாக்கெட்டில் இருந்து துண்டுக் கடிதத்தை அவரிடம் நீட்டினார்.

செந்தில் பிரித்து படித்தார்.

திடுக்கிட்டார்.

ஃ0ஃ

# 13

இன்ஸ்பெக்டர் செந்திலின் மனம் அதுவரை ஒரு நிம்மதியில் இருந்தது.

இந்தக் கொலை தொடர் கொலையில் சம்பந்தப் பட்டது இல்லை என்று எண்ணி இருந்தார்.

ஆனால் இன்ஸ்பெக்டர் மோகன் துண்டுச் சீட்டை அவரிடம் நீட்டி விட்டார்.

அதைப் படித்துப் பார்த்ததும் கண்கள் பொறி இழந்து செந்தில் நின்றார்.

மனசு நிதானப்பட பல விநாடிகள் எடுத்தன.

துண்டுக் காகிதத்தை எடுத்து மீண்டும் படித்தார்.

"போலீஸ் துறையே! என்னை பின்பற்ற வேண்டாம்! நான் கிடைக்க மாட்டேன். என்னை பிடிக்க முயற்சிக் காதீர்கள்! உங்கள் கவனம் வேற பிரச்சினைகள் மீது திரும்பட்டும் தெரிந்ததா?"

அடியில் 'பின் குறிப்பு' என்ற அந்த எழுத்துக்கள் அவனை இழுத்தன.

"சீக்கிரம் அடுத்த கொலையையும் நான் செய்வேன்! என்னைத் தேட வேண்டாம்!"

வார்த்தைகள் நெஞ்சில் வந்து அடித்தன.

அதுவரை இருந்த அவரது மெத்தனம் ஓடிவிட்டது.

கவலைகளும் திபுதிபு என்று வெள்ளமடித்து உள்ளே நுழைந்தன.

இனிமேல் கேஸ் அவரது கேஸ்! சடலமும் அவரது சடலம். நினைப்புகளை அடக்கிக் கொண்டு சடலத்தைப் பார்த்தார்.

அதன் வலது கை மடங்கி இருந்தது.

குனிந்து பார்த்தார். விரல்கள் மூடி இருந்தன. அவைகளை எளிதில் திறக்க முடியாது.

ஏதாவது தடயம் கிடைக்குமா?

சோதிக்க வேண்டும்.

படுக்கையை நோக்கினார்.

இரட்டைப் படுக்கைக் கட்டில்.

போர்வைகள் கலைந்திருந்தன.

ஒரு தலையணை மட்டும் சாய்ந்திருந்தது.

ஒரு படுக்கை கலைந்திருந்தது.

மற்றொன்று சரியாக இருந்தது.

படுக்கையில் நல்லமுத்து கொல்லப்பட்டார் என்பது தெரிந்தது.

அதில் ரத்தம் சிதறி இருந்தது.

- பின்னாடி பார்த்துடலாமா? என்று பொதுப் படையாக கேட்டார்.

செந்தில் அந்த படுக்கையை ஒருமுறை சுற்றினார்.

- மிஸ்டர் சஞ்சீவி! என்று அழைத்தார்.

வந்தார்.

- ஜன்னல் எல்லாம் பார்த்துட்டீங்களா?

- பார்த்துட்டேன்!

- ஏதாவது கிடைச்சுதா?

- செந்தில் கேட்டது கைரேகை பற்றி.

- இல்லை ஸார்!

- இதப் பாருங்க. கட்டிலுக்கு அடியிலே தூசியிருக்கு. யாருடையதோ கால் தடம் இருக்கு!

சஞ்சீவி அதைக் கவனிக்கவில்லை.

கட்டிலின் கீழே தொங்கும் போர்வையை விலக்கினார்.

அடியில் பார்த்தபோது ஒரு காலின் ஐந்து விரல்கள் மட்டும் பதிந்திருந்தன. அவற்றை நோக்கி சஞ்சீவி காரியத்தில் இறங்கினார்.

செந்தில் வாசல்புறம் சென்றார்.

கையில் கர்ச்சீப்பை கட்டி கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுப் பார்த்தார்.

எந்த தடயமும் இல்லை.

வெளியில் இருந்து யாரோ திறந்திருக்கிறார்கள்.

சுலபமாகவும் திறந்திருக்கிறார்கள்.

பூட்டை உடைத்து வரவில்லை.

ஒவ்வொரு அறைக்கும் சென்று பார்த்தார்.

அலமாரிகள், மேஜைகள் எல்லாவற்றையும் கவனித்தார்.

எதிலும் கைபடாமல் பார்த்தார்.

எதுவுமே பாதிக்கப்பட்டதாக தெரியவில்லை.

வீட்டில் கொள்ளை நடக்கவில்லை.

மனசு வெதும்பியது.

இவ்வளவு சிரமப்பட்டும் கடைசியில் எதிர்பாராத இடத்தில் கொலை நடந்துவிட்டதே. கொலையாளி தனது கொலைக்களத்தை மாற்றிக் கொண்டு விட்டானே!

- சரி! இன்றைக்கு நமக்கு சிவராத்திரிதான் என்று நினைத்தார்.

காலையில் சிறிது நேரம்தான் ஓய்வெடுக்க முடிந்தது.

பிறகு மீண்டும் விசாரணை மிக முக்கியம். ஏனெனில் புற நகரில் நடந்த கொலைகளுக்கு அதிகம் விசாரிக்க முடியாத நிலை.

ஆனால் இது நகரில் நடந்த கொலை! அக்கம் பக்கத்தில் ஆட்கள் இருப்பார்கள். விசாரித்தால் ஏதாவது கிடைக்கலாம்.

பத்து மணிக்குள் நல்லமுத்து வீட்டில் இருந்தார்.

எதிர் வீட்டுக்காரர் முதலில் வந்தார்.

- விளக்கு ஏதாவது எரிந்ததா? என்று ஒரு கேள்வி மட்டும் கேட்டார், செந்தில்.

- எனக்குத் தெரியாது நான் சீக்கிரம் படுத்துட்டேன்! என்று கூறினார் அவர்.

அடுத்து பக்கத்து வீட்டில் இருந்து பத்மநாபன் வந்தார்.

- ஸார்! அவங்க மிஸஸ் இல்லங்கறது தெரியும். முந்தா நாள் ராத்திரி நல்லமுத்து வழக்கம்போலதான் ராத்திரி வீட்டுக்கு வந்தார்.

- எப்படித் தெரியும்?

- கார் வர்ற சத்தம் வழக்கமாக கேட்கும்.

- ஓகோ! அதிலேர்ந்து ஊகிச்சிடுவீங்களா?

- ஆமாம்.

- அதே மாதிரிச் சத்தம் தினந்தோறும் கேட்குமா?

- ஆமாம் ஸார்.

- சரி, நீங்க வெளியிலே போய் பார்த்தீங்களா?

- இல்லே, ஹால்லே உட்கார்ந்து படிச்சுட்டு இருந்தேன்.

- சரி! வழக்கமான நேரத்திலேதான் கேட்டுதா? அல்லது கொஞ்சம் முன்னாடியோ, பின்னாடியோ கேட்டுதா?

- வழக்கமான நேரத்திலேதான் ஸார்.

- சரி! நல்லமுத்துவைப் பத்தி ஏதாவது அபிப்ராயம் உண்டா?

- நல்ல மனுஷன்தான். எந்த சச்சரவுக்கும் வரமாட்டார். வெளியிலே பார்க்கிறதே அபூர்வம்.

- ரைட்! அவங்க வீட்டிலே ஏதாவது சச்சரவு நடக்கிறதைப் பார்த்திருக்கீங்களா?

- இல்லை! அந்த மாதிரி எதுவும் இல்லை. ரொம்ப சைலண்ட் ஆக இருக்கும். எப்பவாவது டி. வி. சத்தம், ரேடியோ சத்தம் கேட்கும். வேற எதுவும் கேட்காது.

- அவங்க மனைவி உங்க வீட்டுக்காரங்களோட பேசுவாங்களா?

- அவங்கல்லாம் வர்றது ரொம்ப அபூர்வம்தான் ஸார்.

பத்மநாபனை அடுத்து ஆரோக்கியசாமியை விசாரித்தார். அவர் வலது பக்க வீட்டுக்காரர்.

அதிர்ஷ்டவசமாக ஆரோக்கியசாமி அன்று வெளி வராண்டாவில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது மணி சரியாகத் தெரியாது.

நல்லமுத்துவின் கார் வரும் சத்தம் கேட்டது.

நல்லமுத்துதான் ஓட்டி வந்தார்.

அவரே கேட்டைத் திறந்து காரை உள்ளே செலுத்தினார்.

போர்டிகோவில் கார் நின்றது.

அதை ஆரோக்கியசாமி கவனிக்கும்படியாக ஆயிற்று.

வழக்கமாக நல்லமுத்து மட்டும் காரிலிருந்து இறங்குவார்.

அன்று இரவில் அவருடன் இன்னொருத்தர் யாரோ இறங்கினான்.

- அப்படியா? என்று ஆச்சரியத்துடன் கேட்டார் செந்தில்.

- ஆமாம். முன் சீட்டிலே உட்கார்ந்திருந்தான்.

- நீங்க அவனைப் பார்த்திருக்கீங்களா?

- இதுவரைக்கும் பார்த்ததில்லை.

- வழக்கமாக நல்லமுத்து தனியாக வருவாரா? யாரையாவது அழைச்சிட்டு வருவாரா?

- வழக்கமாக தனியாகத்தான் வருவாரு!

- அந்த ஆளு எப்படி இருந்தான்!

- தலையிலே ஒரு குல்லா வச்சிருந்தான். கண்ணாடி போட்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்தபோது நல்லமுத்துவோட பழகின ஆள்மாதிரிதான் தோணித்து.

- ஓகோ! வேறே என்ன பார்த்தீங்க?

- வேறே தெரியல்லை. போர்டிகோவில் அதிக வெளிச்சம் இல்லை.

- ரைட் இறங்கினப்புறம் என்ன நடந்தது?

- ரெண்டு பேரும் பேசிக்கிட்டே உள்ளே போனாங்க. நான் அப்புறம் அரை மணியிலே உள்ளே போய்விட்டேன்.

- அப்போ அந்த புது ஆசாமி வெளியே போனது உங்களுக்குத் தெரியாது.

- தெரியாது.

- சரி! அப்புறம் வீட்டுக்குள்ளே ஏதாவது சத்தம் கேட்டதா?

- ஒண்ணும் கேட்கலை சார். அவங்க உள்ளே போய் ஒரு நிமிஷத்துக்கு எல்லாம் மியூசிக் சத்தம் கேட்டது.

- அப்படியா? தினம் கேக்குமா?

- என்னிக்காவது கேட்கும்.

- அது எவ்வளவு நேரம் கேட்டுக்கிட்டு இருந்தது?

- கொஞ்ச நேரம்தான் முதல்லே சத்தம் ஜாஸ்தியா கேட்டுது. அப்புறம் குறைய ஆரம்பிச்சுடுத்து.

ஆரோக்கியசாமி போன பிறகு செந்தில் பெருமூச்சு விட்டார்.

இப்பொழுது புரிந்து விட்டது.

கொலைகாரன் நல்லமுத்துவோடு உள்ளே வந்திருக்கிறான்.

அவரைக் கொன்று விட்டுப் போயிருக்கிறான்.

அப்படியென்றால் அந்த கொலைகாரனுடன் நல்லமுத்து ஏன் பழகினார்?

அல்லது அந்த அன்னியன் தன்னை நம்பும்படி நல்லமுத்துவிடம் நடித்தானா?

எப்படி இருப்பினும் கொலையை அந்த அன்னியன் செய்திருந்தால் நிச்சயமாக பெரிய யுக்தியோடுதான் செய்திருக்கிறான்.

செந்தில் எழுந்தார்.

வாசல் கேட்டிலிருந்து அந்த வராந்தா வரை கீழே மண் தரையில் ஆராய்ந்து பார்த்தார். எதுவும் புலப்படவில்லை.

இன்னும் நல்லமுத்துவின் மனைவி வரவில்லை.

மாலையில்தான் வருவதாகச் செய்தி வந்தது.

அவளை அடுத்த நாள்தான் விசாரிக்க முடியும்.

சோர்வுடன் வீட்டுக்குப் போனார்.

தனது மேல் அதிகாரிகளுக்கு போன் செய்து அன்று நடந்தவைகளைக் கூறிவிட்டு ஓய்வாக சோபாவில் சாய்ந்தார்.

சிறிது கண்ணை மூடியிருக்க மாட்டார்... மணியடித்தது.

- ஹலோ டாக்டர் ரவீந்திரன் பேசுகிறேன்!

- ஹா! ரவீந்தர் விஷயம் தெரியுமா? இன்னொரு கொலை நடந்துப் போச்சு! என்று சொன்னார் செந்தில்.

- பேப்பரிலே பார்த்தேன். ஆச்சரியமா இருக்கே! நிறைய பந்தோபஸ்து பண்ணினீங்களே!

- எவ்வளவோ ஏற்பாடு பண்ணினோம். கொலைகாரன் ஏமாத்திட்டான்.

- புரிந்தது. எப்போதும் ரோடிலே செய்வான். இப்போ வீட்டிலே செய்துட்டான்.

- ஆமாம் ஸார்! ஏமாந்துட்டோம்! மிஸ்டர் ரவீந்தர்! இப்போ அந்தப் பொண்ணு ஏதாவது சொல்வாளான்னு பாருங்களேன்.

- அதைத்தான் சொல்ல வந்தேன். அந்த பெண் வீட்டிலே இருக்கிறாங்க! என்னை அவசரமா கூப்பிட்டாங்க.

- அப்போ? என்று துள்ளினார் செந்தில்.

- ஏதோ அவளுக்கு வருதுன்னு அர்த்தம். வரீங்களா?

- வரேன் டாக்டர்!

செந்திலின் களைப்பு அடுத்த கணம் பறந்தது. வீசிக் கொண்டு புறப்பட்டார்.

டாக்டர் ரவீந்திரன் காத்திருந்தார்.

அவருடன் சேர்ந்து சரிதா வீட்டுக்குப் பறந்தார்.

அவள் வீட்டின் விஸ்தார அறை!

அதற்குள் நுழைந்தார்கள்.

மெல்லியதாக வெளிச்சம் உள்ளே.

சரிதா ஒரு ஜன்னல்புறம் நின்றிருந்தாள்.

பார்க்கும்போது அவள் கண்கள் சரியில்லை என்று தெரிந்தது.

- வந்துட்டீங்களாடா?

ஒரு கர்ஜனை குரலை அவர்கள் மீது எறிந்தாள்.

திடுக்கிட்டார்கள் இருவரும்.

அவளிடம் திடீரென்று வரும் அந்தக் குரலை செந்தில் முதன் முறை கேட்கிறார்.

அடுத்தகணம் சரிதாவின் கையும், காலும் உதற,

ரவீந்திரன் அவளைப் போய்த் தாங்கினார்.

அவள் ஜன்னல் சட்டத்தில் சிறிது நேரம் ஓய்வு எடுத்தாள்.

பிறகு எழுந்தாள். திடீரென்று விழித்ததுபோல் - ஸாரி ஸார்! என்று சொன்னவள் மேலே பார்த்தவண்ணம் நடந்தாள்.

அவளுக்கு அந்தப் பிரமை பற்றி விட்டது என்று ரவீந்திரனுக்குத் தெரியும்.

- சொல்லு சரிதா!

ஸார் அதோ அதோ! என்று கூரையை பார்த்த அவள் கூறினாள்.

செந்தில் அதிர்ச்சியுடன் காத்திருந்தார்.

ஒ௦௫

# 14

சரிதாவின் முகம் பின்னியது.

டாக்டர் ரவீந்திரன் பரபரப்பில் பார்த்தார்.

புலம்பலாக சரிதா ஏதோ பேசினாள்.

திடீரென்று - எவண்டா புது ஆசாமி? என்ற ஆண் குரல், அவள் வாயிலிருந்து வெடித்து வந்தது.

திடுதிடு என்று முன்னே போனாள்.

செந்திலின் காக்கி காலரைப் பிடித்து முன்னும் பின்னும் ஒரு படீர் உலுக்கு.

- போடா என்று ஒரு தள்ளு!

அதன் அசுர வேகத்தை செந்தில் எதிர்பார்க்கவில்லை.

இரண்டு மூன்று அடி தடுமாறி ஒரு தத்தளிப்புடன் நிறுத்தம் செய்தார்.

உள்ளே தடதடப்பு உடம்பெல்லாம் ஓடியது. இதயம் டமாரமாக அடித்தது.

- ஆல்ரைட்! ஆல்ரைட்! என்று ரவீந்தர் அவள் அருகில் போய், அவளைக் கை அமர்த்தினார்.

சரிதா எதையும் பொருட்படுத்தாமல் திரும்பினாள்.

அவளுள் எக்கி எக்கி ஒரு அசுர வேகம் ஓடி அணைவது தெரிந்தது.

நீண்ட மூச்சுக்கள் நாகச் சீறல்கள் போல் வெளியே வீசின.

மெள்ள அவள் பார்வை மீண்டும் நிதானமாகி மோட்டை நோக்கின.

அவள் எங்கேயோ பார்த்தவாறே பேச ஆரம்பித்தாள்.

- மரத்தடியிலே அவன் நிற்கிறான். என்னவோ யோசனை செய்கிறான். அப்புறம் மணியைப் பார்க்கிறான் என்றாள்.

- அந்த கொலைகாரன்தானே? ரைட் மேடம்! என்றார் ரவீந்தர்.

- அது டிஜிடல் கடிகாரம். அதிலே விசையை அமுக்கி லைட் அடிச்சு, மணி ஒன்பது ஆகியிருக்கு. ஏதோ தீர்மானம் செய்யறான்.

அங்கிருந்து நகர்ந்து திருப்பத்துக்கு வரான்.

மெயின் சாலையில் நுழையறான்.

- சரிதா! என்று இங்கே குறுக்கிட்டார் ரவீந்திரன் - அவளைப் பற்றிச் சொல்ல முடியுமா?

- பாண்ட் கோட்டும் போட்டிருக்கான். கண்ணியமான மனுஷன் மாதிரி இருக்கான்.

- சரி மேலே சொல்லு!

- சாலை நிசப்தமா இருக்கு.

மெயின் சாலை ஓரம் நிக்கறான்.

கம்பங்களில் வெளிச்சம் பூத்திருக்கு. மோகனமான வெளிச்சம்.

ஒரு கார் தூரத்தில் வருது.

அது அந்தக் கோட்டுக்காரன் பக்கத்தில் வந்து நிக்குது.

ஒரே சிரிப்பு அவனுக்கு.

வந்த காரின் முன் கதவு திறக்கிறது.

சீட்டில் அந்த 'கோட்' உட்காருகிறான்.

டிரைவர் சீட்டில் நாற்பது வயது கண்ணியமான ஆசாமி. புள்ளி போட்ட டை கட்டி இருக்கிறார்.

'கோட்'டைப் பார்த்ததும் அவருக்கும் சிரிப்பும் குஷியும்.

உல்லாசமாக பேசுகிறார். கார் பத்து நிமிடம் பயணமாகி ஒரு பங்களா முன்னால் நிக்குது.

காரை ஓட்டிய கண்ணியமானவர்தான் வீட்டுக்காரர். அவர் கதவைத் திறக்கிறார்.

உள்ளே போகிறார்கள்.

வீட்டுக்காரர் கோட் போட்டவனை கையால் அரவணைத்து உள்ளே போகிறார்.

அதில் அவர்கள் சிநேகம் நல்லா தெரியுது.

பெட்ரூமுக்குள்ளே போறாங்க.

ஆளுக்கு ஒரு டிரிங்க்.

பிறகு, எழுந்து ரெண்டு பேரும் உலாவிக் கொண்டே பேச்சு.

வீட்டுக்காரர் தமது சவுண்ட் சிஸ்டத்தைக் காண்பிக்கிறார். அதைப் போடுகிறார்.

கோட் ஆசாமி சிரித்து அதன் வால்யூமை அதிகமாக்குகிறார்.

கொஞ்சம் டான்ஸ் மாதிரி ஆட்டம் காட்டுகிறான்.

அப்போ தடுமாறி விழறான். சமாளித்து எழுந்திருக்கிறான்.

வீட்டுக்காரர் மெத்தையில் உட்காருகிறார்.

கோர்ட் ஆசாமி தன் கைப்பையைத் திறந்து எதையோ எடுக்கிறான். பளபளன்னு ஒரு கத்தி லைட்டுலே மின்னுது. அடுத்த வினாடி அந்தக் கத்தி. . எதிரே இருந்த வீட்டுக்காரர் சட்டை வழியே நுழைஞ்சு பனியனுக்குள்ளே நுழைஞ்சு இதயத்துக்குள்ளே நுழைஞ்சு நெட்டக்குத்தா நிக்குது. வீட்டுக்காரர் விழிச்சு பார்க்கிறார்.

சிறிது சிறிதா தள்ளாடி விழறாரு.

அவர் உயிர் அடங்குது.

அந்த கோர்ட் ஆசாமி அந்த கத்தியை உருவி துணியாலே சுருட்டி, காகிதத்திலே மடிச்சு, கைப்பைக்குள்ளே போட்டுக்கறான்.

வாசலைப் பார்த்து டிப்டாப்பா நடக்கிறான்.

தெரு வந்தவுடனே வலது பக்கம் திரும்பி நடந்துக்கிட்டே போறான்.

- இந்தா சரிதா! என்றார் ரவீந்திரன்.

'ஆ' என்று அவள் ஒரு ஈனமான பதில் கொடுத்தாள்.

- அவன் எப்படி இருக்கான் பாரு?

- பார்க்கிறேன் ஸார்! என்று தீனமாகக் கூறினாள் அவள். பிறகு சிறிது நேரம் கழித்து,

- ஒல்லியா இருக்கான், நல்ல உயரம். கன்னம் பக்கம்தான் தெரியுது. நல்ல நிறம்தான்!

குறுக்கிட்டார் ரவீந்திரன் - வயசு கண்டுபிடிக்க முடியுதா?

- சரியாகச் சொல்ல முடியாது. முப்பது இருக்கும்.

- கோர்ட்டு போட்டுருக்காருன்னு சொன்னீங்க! என்ன கோர்ட்டு?

- லைட் கலரா இருக்கு. அவ்வளவுதான் தெரியுது.

- ரைட். வேற எதாவது அடையாளம் தெரியுதா?

- இல்லை ஸார்! ஒரு கண்ணியமான மனுஷன் மாதிரி இருக்கான். இப்போ அவசரமா வீட்டை விட்டு வர்றான் ஸார். தெருவுக்குள் நுழையறான். அப்படியே போறான். இருட்டிலே போய்கிட்டே இருக்கான். இப்போ... மெயின் சாலையைப் பிடிக்கிறான்.

அங்கே அவள் நிறுத்தினாள்.

- இன்னும் ஏதாவது சொல்ல முடியுமா? என்றார் ரவீந்தர்.

- இல்லை. அவன் முகத்தை மட்டும் திருப்ப மாட்டேங்கிறான். எனக்கு புரியமாட்டேங்குது! என்றாள் அவள்.

- அப்புறம்?

அவள் மவுனமாக இருந்தாள்.

எங்கேயோ தொலைதூரத்தைப் பார்ப்பதுபோல முகபாவனை.

பேசவில்லை.

அவள் முகம் மாறியது.

அவளுக்கு 'எதுவும் வரவில்லை' என்று தெரிந்தது.

செந்திலும், ரவீந்திரனும் திரும்பும்போது, செந்தில் ஒரு பதட்டத்தில் இருப்பது தெரிந்தது.

- என்ன இன்ஸ்பெக்டர்? என்று ரவீந்திரன் கேட்டார்.

- அந்தப் பெண் திடீர்னு கூச்சல் போட்டது. . .

சிரித்தார் ரவீந்திரன்.

- இதெல்லாம் மனநோயாளி உலகத்திலே ரொம்ப சாதாரணம். திடுக்கிடவே கூடாது.

- அதெல்லாம் புரியது. இந்தப் பெண் குரல் எப்படி மாறுது? ஆண் பிள்ளைக்குரல் எப்படி வந்திச்சு? ஏதோ வில்லன் குரல் மாதிரி.

- அதான் ஸ்கிஸோப்ரனியா! ரெட்டைப் பர்சனாலிடி!

- என் சட்டை காலரைப் பிடிச்சுத் தள்ளினா பாருங்க! என்ன வலு! அசந்துட்டேன். அந்த வில்லன் குரல் இன்னும் எனக்கு நடுக்கம் காட்டுது!

- செந்தில்! அவளைச் சமயத்திலே ஒரு ஆவி பிடிச்சிருக்கிறது. அதனோட குரல்தான் அது!

- ஆவி பிடிக்கிறது, பிசாசு பிடிக்கிறது எல்லாம் சரி. ஆனா. . . ஆண் பிள்ளை மாதிரி கத்த முடியுமா?

- முடியும்.

- எப்படி முடியும் டாக்டர்?

- ஆவி அப்படி செய்ய வைக்கிறது.

- ஆவிக்கு அந்த சக்தி உண்டா?

- ஆமாம் மிஸ்டர் செந்தில்! இந்த சரிதா மாதிரி ஒருத்தியை எடுத்துக்குங்க!

- எஸ்.

- அவங்களுக்கு அநேகமா பலவீனமான மனம் இருக்கும்.

- எப்படி?

- அது என்ன காரணத்தினாலேன்னு சொல்ல முடியாது. சுபாவமாவே இருக்கலாம். பிறவியாலே இருக்கலாம் அல்லது எதையாவது கண்டு பயந்து அந்த நிலைமைக்கு வந்திருக்கலாம்.

- சரி!

இந்த மாதிரி பலவீனமான மனதைத்தான் ஆவிகள் தேடும்.

- எந்த ஆவிகள்?

- துர் மரணம் காரணமா அல்லது வேறு செயற்கையாவே இறந்த ஆவிங்க பூமியிலேயே அலைஞ்சிட்டு இருக்கும்.

- அப்படியா?

- ஆமா. ஏதோ ஒரு விஷயத்துலே அந்த ஆவிங்களுக்கு ஒரு குறை இருக்கும். அதை எப்படியாவது நிறைவேத்திக்கணும்னு பூமியிலே அலையும்.

- எப்படி நிறைவேத்திக்க முடியும்?

- அதுக்குத்தான் ஒரு உடம்பு தேவை. வாழற உடம்பு.

- ஓ! கிடைக்குமா?

- அதான் சொல்றேன். இந்த சரிதா மாதிரி பலவீன மனமுள்ளவங்க உடம்புதான் வாழற உடம்பு! இந்த உடம்புக்குள்ளே அந்த ஆவி போய் உட்காரணும்னு நினைக்கும்.

- முடியுமா?

- சமயத்திலே முடியும்! அது அந்த உடலுக்குள்ளே புகுந்துவிடும். அதிலே ஏற்கனவே ஒரு உயிர் வாழ்ந்துக் கிட்டு இருக்கே, அதை மெள்ள மெள்ள ஓரம்கட்டப் பார்க்கும்.

- அதாவது இன்னொருத்தர் உடம்புக்குள்ளே புகுந்து, அந்த உடம்புக்குள்ளே இருக்கிற உயிரை மெள்ள மெள்ள ஒதுங்க வைக்கும் இல்லையா?

- அதுவேதான். கொஞ்சம் கொஞ்சமா ஒதுங்க வச்சு, பிறகுதானே, அதை முழுசா ஆக்கிரமிக்க ஆரம்பிக்கும்.

- ஓ!

- அந்த ஆக்கிரமிப்பு மூலம், அந்த உடம்பை தனதாக்கிக்கிட்டு, அந்த உடம்பு மூலமா தனது விட்டுப் போன ஆசைகளை நிறைவேற்றிக்கப் பார்க்கும்.

- ஆச்சரியமாயிருக்கே.

- அதாவது அந்த ஒண்ட வந்த ஆவி, இன்னொருத்தன் உடம்பை தன் இஷ்டத்துக்கு பயன்படுத்திக்கும்.

- ஓ! அதைத்தான் நாம்ப பிசாசு பிடிச்சிருக்கு என்கிறோமா?

- ஆமாம். இதைப் பத்தி நம் நாட்டிலேயும் ஆராய்ச்சி பண்ணி இருக்காங்க. மேனாட்டிலேயும் பண்ணி இருக்காங்க. மேனாட்டிலேயே எட்கார் கெய்ஸ் என்பவர் முக்கியமானவர்.

- அவர் என்ன சொல்றார்?

- அவர் இந்த ஒண்ட வந்த ஆவிகிட்டே எல்லாம் பேசி அந்த அனுபவத்தை எல்லாம் புத்தகமா போட்டிருக்கார்.

செந்தில் யோசனையில் வியந்தார்.

ரவீந்தருக்கு புன்னகை வந்தது.

- வாங்க! காப்பி சாப்பிட்டு பேசுவோம்! என்றார் ரவீந்திரன்.

இருவரும் ஒரு ஓட்டலில் அமைதியான ஓரத்தில் அமர்ந்தார்கள்.

ரவீந்திரன் தொடர்ந்தார்.

- இன்ஸ்பெக்டர் இந்த சப்ஜெக்ட் பேர் 'பாரா சைகாலஜி'! உலகம் முழுக்கும் இதுக்கு ஆராய்ச்சி நடக்குது! என்றார் ரவீந்தர்!

- இந்த கேசுக்கு வாங்க டாக்டர்! சரிதாவை ஏதோ ஒரு ஆவி பிடிச்சிருக்கு என்றீங்க!

- ஆமாம் அப்பப்போ பிடிக்குது.

- சரி அந்த ஆவிக்கு இந்தக் கொலை நடந்த சமாசாரம் எல்லாம் தெரியுமா?

- நல்ல கேள்வி கேட்டீங்க. ஆவிகள்லே சில அபூர்வ சக்திகளோடு இருக்கும். நடந்ததை அதாலே கண்டுபிடிக்க முடியும்.

- முடியுமா?

- முடியும். முடியும்! அதை வச்சுத்தானே அதுங்க கிட்டே ஆருடம் கேட்டு மேனாட்டு போலீசுங்க கேஸ்களைப் பிடிக்கிறாங்க.

- ஓ!

- இந்த சரிதா ஆவியாலும் நடந்துபோன நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியுது!

- நிகழப் போறதை சொல்ல முடியுமா?

- எல்லா ஆவிகளாலேயும் முடியாது. அது பெரிய சப்ஜெக்ட். இப்போ சரிதா விஷயத்துக்கு வருவோம்.

அவள் சொல்றது உங்களுக்கு உதவியா இருந்தா எடுத்துக்குங்க.

- சரிதாக்குள்ளே யாருடைய ஆவி ஒட்டிக் கொள்ளுது?

- அதைத்தான் நான் கண்டு கொள்ளணும்னு பார்க்கிறேன். இன்னும் அது பிடி கொடுக்கலை.

- சரி ரவீந்திரன். இப்போ இந்த மாதிரி ஆவி பிடிச்ச ஆசாமியைக் குணப்படுத்தறது எப்படி?

- வழிங்க இருக்கு. ஒண்டிக்கிட்ட ஆவிக்கு, "நீ ஒண்ட வந்த ஆவிதான்'னு புரிய வைக்கணும்.

- முடியுமா?

- செய்யறாங்க. நீ வெறும் வெளி ஆவிதான். நீ ஒண்ட வந்த ஆவிதான், நீ இருக்கிற இந்த உடம்பு உனக்குச் சொந்தமில்லைன்னு புரிய வைக்கணும்.

- முடியுமா?

- முயற்சி எடுத்தா முடியும்.

செந்தில் நம்பிக்கை இல்லாததுபோல் டாக்டரைப் பார்த்தார்.

ரவீந்திரன் புன்னகை புரிந்தார்.

- வீட்டுக்கு வாங்க! ஒரு சோதனையை உங்களுக்கு காட்டறேன்! என்றார்.

செந்திலுக்கு ஏனோ தெரியவில்லை. ஏதோ ஒரு விதத்திலே மனம் நடுங்குவதை உணர்ந்தார்.

# 15

இன்ஸ்பெக்டர் செந்தில் டாக்டர் ரவீந்திரனுடன் புறப்பட்டார்.

புறப்பட்டபோது, அவருக்கு பலவித குழப்பம் இருந்தது.

இதென்ன?

ஆவி உலகம்?

இதை நம்பலாமா? வேண்டாமா?

நம்பவும் வேண்டியதிருக்கிறது. நம்பாமலும் இருக்க வேண்டி இருக்கிறது.

இரண்டு விதத்திற்கும் அவரது மனத்தில் போட்டி போட்டுக் கொண்டு வாதங்கள் வந்தன.

மனம் மீண்டும் சேறாகியது.

கிளினிக்கை அடைந்தார்கள்.

- வாங்க செந்தில்! என்று உள்ளே அழைத்து போனார் டாக்டர் ரவீந்திரன்.

அவரது கன்ஸல்டிங் அறைக்கு அடுத்த சின்ன அறை.

உள்ளே மிதமான சாம்பிராணி வாசம் மிதந்தது.

இருவரும் சோபாவில் அமர்ந்த பிறகு, இருக்கும் ஒரு 'ஸீரோ' வாட் வெளிச்சத்தையும் ரவீந்திரன் அணைத்தார்.

செந்தில் மர்ம எதிர்பார்ப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தார்.

- ஒண்ணும் பெரிசில்லை. சப்தம்தான் கேட்கப் போறீங்க! என்றார் ரவீந்திரன்.

எங்கேயோ ஸ்விட்சை அவர் கிளிக்கிடும் சின்ன ஓசை கேட்க துல்லிய நிசப்தம் சூழ்ந்தது.

சில கணங்களில் 'ஈஈஈஈஈ. . .' என்று ஒரு அமானுஷ்ய கூவல்!

செந்தில் கையைக் கீழே அழுத்தினார்.

அதைத் தொடர்ந்து தடதட என்று ஒரு சத்தம்.

- இதுதான் ஆவி வர்ற ஓசை! என்ற ரவீந்திரன்.

- எங்கே வருது? என்று சிறிது தயக்கத்துடன் செந்தில் கேட்டார்.

- ஓ! அதைச் சொல்ல மறந்துட்டேனா? இது ஒரு வீட்டில் நடந்த விஷயம். அப்படியே ரிகார்ட் பண்ணி வச்சிருக்காங்க.

- ஆவி வர்ற சத்தத்தை ரிக்கார்ட் பண்ண முடியுமா?

- சிலவங்களுக்கு அந்த சக்தி இருக்கு.

- யாரிட்டே இருக்கு?

- சொன்னேன் இல்லை. கிரைக் ரைஸ்!

பாராஸைகாலஜி உலகத்திலே அதிக ஆராய்ச்சி பண்ணினவர். இது அவர் நடத்திய ஆவிப் பேச்சு ரிக்கார்டிங்!

செந்தில் மவுனமானார்.

திரும்பவும் சின்னச் சின்ன சத்தங்கள்.

(கிரைக் ரைஸ் நடத்திய பல ஆவி ரிக்கார்ட்களில் ஒன்றின் உண்மையான சாராம்சம் இங்கே கொடுக்கப்படுகிறது.)

- மிஸ்டர் தாமஸ். . . . மிஸ்டர் தாமஸ். . . ஆர் யு ஹியர்?

இந்த ஆங்கில உரையாடல் கேட்டதும் ரவீந்திரன் செந்திலின் காதில் கூறினார்.

- செந்தில்! இதுதான் கிரைக் ரைஸுடைய குரல். தாமஸ் என்று அவர் அழைப்பது ஒரு ஆவியை.

- நான்தான் இருக்கேனே! நீ யாரு? ஆவியின் குரல் கடுமைக் கோபத்தில் கேட்டது.

- நான்தான் கிரைக் ரைஸ்! நீ யாரு? ஒரு வாரமா உன்னோடு பேசிட்டிருக்கேனே!

- ஏய்! ஏன் என்னைத் தொந்திரவு செய்யறே? பேசாம போ!

- போயிடறேன். கொஞ்சம் பேசிட்டுப் போயிடறேன்.

- நீ என்னை ரொம்ப அதிகம் சீண்டறே?

- சீண்டலை. நீ இப்போ இருக்கிற உடம்பு உன் உடம்பில்லை.

- என்னது என் உடம்பு இல்லையா?

- ஆமா, இஸபெல்னு ஒரு இருபது வயசுப் பொண்ணு. அவள் உடம்பிலே உட்கார்ந்திருக்கிற.

- நோ! நோ! அவள்தான் என் உடம்பிலே உட்கார்ந்திருக்கிறா. அவளைப் போகச் சொல்லு!

(ரவீந்திரன் செந்தில் காதில் கூறினார். - தாமஸ் என்கிற ஆவி இஸபெல் என்கிற பெண்ணோட உடம்புலே புகுந்து இருக்கு. புகுந்த ஆவிகிட்டேதான் ரைஸ் பேசறார். ஆவி தன்னோட சொந்த உடம்பிலேதான் இருப்பதாக சொல்லுது!)

- இல்லே தாமஸ்! கொஞ்சம் யோசனை பண்ணு. பாட்ரிக்கோட மகன்தானே நீ?

- ஆமாமா.

- ரெண்டாவது உலக யுத்தத்திலே ஈடுபட்டே இல்லே?

- ஆமா ஆமாம். . .

- ஆகாயப் படையில் பைலட்டாக பயிற்சி செய்தே.

- ரொம்ப சரி.

- ஜெர்மனியிலே குண்டு போட உன்னை அனுப்பிச்சாங்க. நினைவு இருக்கா?

- நல்லா இருக்கு.

- ஆறு விமானத்தோடு உன் விமானமும் போச்சு. நார்மண்டியைத் தாண்டி ஜெர்மனிக்குள்ளே போனீங்க. ஜெர்மன் நகரம் ப்ராங்க்பாட் பக்கம் போனபோது எதிரிங்க பூமியிலேர்ந்து உங்களைச் சுட்டாங்க.

- ஆமாம்.

- அதிலே உன் விமானம் அடிபட்டது.

- ஆமாம்.

- நீ எவ்வளவோ முயன்றும் விமானம் நிலை பெறாமல் சுழல ஆரம்பிச்சு. நீ பயந்து போய் பாராசூட்டோடு விமானத்து வெளியிலே குதிச்சிட்டே. நினைவு இருக்கா.

- நல்லா நினைவு இருக்கு.

- ஆனா. . . என்று ரைஸ் நிறுத்த தாமஸ் என்கிற ஆவி அழும் சத்தம் கேட்டது.

- கலங்காதீங்க தாமஸ்! உங்க பாரசூட் விரியலை.

- ஆமாம் ஆமா... (தாமஸ் தேம்புவது கேட்டது)

- எல்லாம் நல்லா நினைவு வச்சிருக்கீங்களே?

- அதை நான் எப்படி மறக்க முடியும்? பாராசூட் விரியாம நான் தரையை நோக்கி விழ ஆரம்பிச்சேனே! கடவுளே கடவுளேன்னு கத்தினேன்.

- அதேநேரம் எதிரிகளும் பூமியிலேர்ந்து என்னை சுட்டாங்க! உடம்பு அடிபட்டுச் சுருண்டு கீழே விழுந்து நொறுங்கினீங்க!

- அப்போதே நீ இறந்து போயாச்சு தாமஸ்!

- பொய்! நான்தான் உயிரோட இதோ இருக்கேன்.

- தாமஸ் உங்களுக்கு விபத்து நடந்தது 1942 ஜூலை 17 நினைவு இருக்கா?

- இருக்கு.

- இப்போ தேதி தெரியுமா? 1982 மே 8.

- உண்மையாகவா?

- உண்மை! நீயே கண்ணைத் திறந்து மேல் ரூமில இருக்கிற காலண்டரைப் பாரு.

நிசப்தம்.

- என்ன தாமஸ், பார்த்தியா?

- நான் நம்ப மாட்டேன்.

- நம்பு தாமஸ்! நீ 1942-லே இறந்து போயாச்சு. இப்போ நீ உயிரோடு இருந்தா உனக்கு 60-க்கு மேலே வயசு ஆயிருக்கும்.

- என் வயசு இப்போ 24.

- இங்கே காலண்டரைப் பாரு. வருஷம் 1982. நீ 1942-லே இறந்தே. பூமியிலே சுத்திக்கிட்டே இருந்தே. இந்த இஸபெல் உடம்புக்குள்ளே புகுந்துக்கிட்டே.

- சும்மா எப்படி பூமியில் சுத்தினேன்?

- ஆவியாச் சுத்தினே!

- நோ. நோ. சுத்த ஹம்பக்! நான் உயிரோட இருக்கேன். இது என் உடம்பு. அவள் இதில் வந்து உட்கார்ந்துக்கிட்டிருக்கா. அவளைப் போகச் சொல்லு.

- அவ போக முடியாது. நீதான் போகணும். நீ இறந்து போயாச்சு. நீ இன்னொருத்தி உடம்புக்குள் உட்கார்ந்திருக்கே. நீதான் போகணும். நீ செத்துப் போயாச்சு தாமஸ்.

தாமஸிடம் பதில் இல்லை.

- தாமஸ்! இஸபெல் இளம் பெண். அவளுக்கு பலவீன மனசு. நீ அவளுக்குள்ளே புகுந்துகிட்டே உன்னோட இதுன்னு அட்டகாசம் பண்றே. அந்தப் பெண்ணை உன் விருப்பப்படி எல்லாம் ஆட்டறே!

சிறிது நிசப்தம். - இஸபெல்! இஸபெல்! என்று அழைக்கும் குரல்.

- நீ அவளை அழைக்காதே!

தாமஸ் கர்ணகடூரமாகச் சீறினான்.

ரைஸ் விடவில்லை.

- இஸபெல்! இஸபெல்!

சில சத்தங்கள்.

எங்கிருந்தோ அதல பாதாளத்திலிருந்து - எஸ் ஸார்! என்று மெல்லிய குரல் வந்தது.

அழகான 20 வயதுக் குரல்.

அதில் சங்கீதம் இருப்பதை உணர்ந்தார் செந்தில்.

அவர் மனத்தில் ஒரு ஆங்கிலப் பெண் ஒரு சோபாவில் சாய்ந்திருப்பதுபோல் தோன்றியது.

அவள் கண்கள் அழகாகத் திறந்திருந்தன.

முகத்தில் துயரம் ஒரு நிழலாக ஒட்டி இருந்தது.

- ஸார்! இந்த ஆளைப் போகச் சொல்லுங்க ஸார். என்னை விட மாட்டேங்கறான்! நான் கஷ்டப்படறேன்! என்று அவளது பரிதாபக் குரல் கேட்டது.

- ஏய்! என் உடம்பிலே வந்து ஒட்டிக்கிட்டு என்னை நீ போகச் சொல்றியா? தாமஸ் வெறியோடு கத்தினான்.

இஸபெல் பலவீனமாகப் பதில் சொல்ல முயன்றாள்.

அவள் குரல் மெள்ள மெள்ள மறைவது தெரிந்தது.

அவள் குரல் கொடுக்க முடியாமல் யாரோ அழுத்துவது போலிருந்தது.

செந்திலுக்கு முகத்தில் எங்கும் வியர்வை அரும்பியது.

அதைத் துடைத்துக் கொள்ளும்போது,

'ஸீரோ' வாட் விளக்கு மீண்டும் எரிந்தது.

அருகில் டாக்டர் ரவீந்திரன் மங்கலாக தெரிந்தார்.

செந்தில் தனது மனப் பிரமையிலிருந்து சுழல சில கணங்கள் எழுந்தன.

- பார்த்திங்களா? ஆவி பேசற உண்மை உரையாடல்! பதிவு பண்ணிட்டாங்க.

தன்னை ஆசுவாசப்படுத்திய செந்தில், உடனே - வெறும் ரிக்காட்டிங்கே இப்படி இருந்தா நிஜமான நிகழ்ச்சி பயங்கரமா இருக்குமோ!. . . அப்புறம் இஸபெல் கதி என்னாச்சு? என்றார்.

- ரைஸ் விடவில்லை, தினம் தினம் பேசி, கடைசியில் தாமஸ் இறந்துபோனவன்தான்னு அவனையே உணரும்படி செய்தார்.

- ஓ! வெற்றி அடைஞ்சுட்டாரா?

- ஆம். ஆவி தன் உண்மை நிலையை உணர்ந்தாச்சுன்னா போச்சே.

இஸபெல் உடம்பை விட்டு தாமஸ் ஆவி ஓடிடுச்சு. இஸபெல் குணமாயிட்டா.

செந்தில் யோசித்தார்.

- அப்போ இஸபெல் அதுவரை பிசாசு பிடிச்ச மாதிரியே இருந்திருப்பா இல்லே! என்றார் செந்தில்.

- ஆமாம். நல்ல வசதியான குடும்பத்துப் பெண். திடீர் திடீர்னு பிசாசு பிடிச்ச மாதிரி கத்துவா! ஆடுவா! எல்லா ஆர்ப்பாட்டமும் பண்ணுவா.

- உறவுக்காரங்க பயந்திருப்பாங்க இல்லே!

- ஆமாம். அப்புறம் ரைஸ்கிட்டே அந்த கேஸ் வந்திச்சு. அவர்தான் ரெண்டு மாசமா அந்த புகுந்த ஆவிகிட்டே பேசி அதை வெளியிலே போகச் செய்தார்.

- அப்போ நீங்க இங்கே சரிதா மேலே இருக்கிற ஆவியை. . .

என்று இழுத்து நிறுத்தினார் செந்தில்.

- முதல்லே ஒண்ணு சொல்றேன். ரைஸ் அபூர்வ சக்தியைப் பெற்றவர். அதிலே ஈடுபட்டு விருத்தி பண்ணிக் கொண்டார். உலகம் முழுவதும் அவர் செய்து காட்டிய விஷயங்களைக் கண்டு திகைச்சது. ஜனங்க அவரோட அமானுஷ்ய சக்தி மீது மோகமா இருந்தாங்க. அவரோட திறன் எனக்கு வர்றது கஷ்டம் செந்தில்!

- முடியாதா?

- கஷ்டம்தான். முயற்சி பண்றேன். வேறே பாராஸைகாலஜிஸ்ட் கிடைப்பாங்களான்னு பார்க்கறேன். ஆனா இந்தப் பெண் சரிதா நெருங்க விடமாட்டேங்கறா!

- எப்படி சொல்றீங்க?

- அவள் மேலே உள்ள ஆவியைப் பற்றி எதுவுமே அவளாலே சொல்ல முடியலை. அதன் பேர், ஊர் எதுவும் தெரியாது.

- இதிலே ரைஸ் எப்படின்னா, தாமஸ் என்பவனைத் தெரிஞ்சுகிட்டு அவன் பூர்வேத்திரங்களை எல்லாம் இங்கிலாந்திலே விசாரிப்பது மூலமாகவும், அரசாங்க ரிகார்டுகள் மூலமாகவும் தெரிஞ்சு, அவன் இறந்துபோன தேதியையும் தெரிஞ்சுக்கிட்டு இந்தக் கேஸை தீர்த்து வச்சார். இந்த மாதிரி பல கேசுங்களை முடிச்சிருக்கார்.

- ஓ! நம்ப ஊர்லே அத மாதிரி வசதிங்க எதுவும் கிடையாது.

- ஆமாம். சரிதா மேலே வர்ற ஆவியோட பேர் தெரியறதுக்கு எத்தனையோ உக்தி செஞ்சு பார்த்தேன். பலிக்கலை.

செந்தில் பெருமூச்சு விட்டார்.

டெலிபோன் மணி அடித்தது.

போனை எடுத்தார் ரவீந்திரன்.

- இந்தாங்க! உங்களுக்கு! என்று செந்திலிடம் கொடுத்தார். அந்த போன் குரலை கேட்கக் கேட்க செந்திலின் முகம் இறுகியது.

- என்ன? என்ன? என்று பரபரப்புடன் கேட்டார் ரவீந்திரன்.

# 16

இன்ஸ்பெக்டர் செந்திலின் கண்கள் சில்லிட்டுப் பளபளத்தன.

முகத்தில் எந்த தசையும் அசையவில்லை.

டாக்டர் ரவீந்திரன் அவர் அருகே சென்று, - என்ன மிஸ்டர் செந்தில்? என்றார்.

செந்தில் தன் வசம் திரும்ப பல கணங்கள் எடுத்தன.

- டாக்டர் இது அந்தக் குரல்! என்றார்.

- கொலைகாரனா?

- ஆமாம். அவனுக்கு நான் இங்கே இருக்கிறது எப்படித் தெரியும்?

- என்ன சொன்னான்?

- எச்சரிக்கிறான்! எங்கேயும் போய் என்னைத் தேடாதேங்கிறான்.

ரவீந்திரன் திகைத்தார்.

- ரவீந்தர்! நீங்கள் போட்டுக் காண்பித்த டேப் என் மனசை ரொம்ப பாதிச்சிடுத்து. நமக்குத் தெரியாமல் உலகத்திலே எவ்வளவு விஷயங்கள் இருக்கு. இப்போ நான் வர்றேன். தொடர் கொலை பற்றி உடனே ஏதாவது செஞ்சாகணும்.

செந்தில் மனத்தில் போராட்டம். நேராக தனது போலீஸ் நிலையம் சென்றார்.

உள்ளே ரகு காத்திருந்தார்.

- ரகு போன் ஏதாவது வந்துச்சா?

- இல்லை ஸார்.

- டாக்டர் வீட்டில் இருந்தேன். அந்த கொலைகாரன் பேசினான்.

- என்ன சொன்னான் சார்?

- எச்சரிக்கிறான். எங்கேயும் போய் என்னைத் தேடாதேங்கறான். எனக்கு ரத்தம் கொதிச்சிட்டு வருது. இதப்போல ஒரு கிரிமினல் எனக்கு எச்சரிக்கை கொடுப்பதாவது. . . வா!

- எங்கே?

- நாம் நல்லமுத்து வீட்டுக்கு போறோம். ஜீப்பை எடு.

நல்லமுத்து வீட்டை இரவு பத்து பணிக்கு அடைந்தார்கள்.

வழியில் செந்தில் ரகுவிடம் டாக்டர் வீட்டில் கேட்ட 'டேப்' விஷயத்தைக் கூறிக் கொண்டே போனார்.

நல்லமுத்து வீட்டில் ஏற்கனவே போலீஸ் பாரா இருந்தது.

அவர்கள் கதவைத் திறந்து விட்டார்கள்.

- நீ என்ன சொல்றே ரகு! இந்த ஆவி உலகைப் பற்றி?

- எனக்கு நம்பிக்கை இல்லை ஸார்.

- அப்படியா சொல்றே? சரிதா சொன்னது எல்லாம் தெரியும் இல்லே?

- தெரியும்.

- எங்கேயோ நடந்ததை அவள் எப்படிச் சொல்றா?

- சிலவங்களுக்கு நடந்த சம்பவங்களைப் பற்றி ஆரூடம் வரும்.

- எப்படி வரும்?

- சிலவங்களுக்கு ஏதோ ஒரு சக்தி இருக்கு. இதற்குக் காரணம் கூற முடியாது. ஒன்று பார்த்தீங்களா?

- என்ன?

- நடந்தவைகளைச் சொன்னாளே தவிர, நடக்கப் போறதை அவளாலே சொல்ல முடிஞ்சுதா?

- அப்போ என்ன சொல்றே. சரிதாவாலே நமக்கு உதவி இருக்காதா?

- எனக்குத் தோணலை. அவ கேஸ் தனி கேஸ். எங்கேயோ பார்த்து மிரண்டிருக்கா. என்னெல்லாமோ மனப்பிராந்தி வருது. இதோடு அவளுக்கு சுயமா வர்ற ஆரூடமும் சேர்ந்திருக்கு. அவ்வளவுதான்! என்றார் ரகு.

இன்ஸ்பெக்டர் செந்தில் பேசவில்லை.

நல்லமுத்து படுக்கை அறைக்குள் நுழைந்திருந்தார்கள்.

விளக்குகள் பிரகாசமாக எரிந்தன.

கட்டில் முன்னால் செந்தில் ஒரு அழுத்தப் பார்வையுடன் நின்றார்.

அன்று பார்த்தபடியே வைக்கப்பட்டிருந்தன. கலைக்கப்படவில்லை.

ஒவ்வொரு அங்குலமாக அவர் மெத்தையைப் பார்த்தார்.

- நல்லமுத்து இங்கே வந்து படுத்திருக்கிறார் என்பது தலைகாணி அழுத்தத்தில் தெரியுது. அடுத்த தலைகாணியைப் பாரு. இது லேசா அமுங்கி இருக்கு பாரு!

- ஆமாம் ஸார்.

செந்தில் அந்த தலைகாணி மீது மெள்ள மெள்ள விரல்களை வைத்துப் பார்த்தார்.

- இங்கே குழிவு கொஞ்சம் இருக்கு! தினம் தினம் தலைகாணி, போர்வை எல்லாம் மாற்றி வைக்கிறாள் வேலைக்காரி. அன்றைக்கும் அதைப் போலவே செய்திருக்கிறா. அதனால இந்தக் குழிவும் அன்னிக்குத்தான் ஏற்பட்டிருக்கணும்.

- கவனிச்சேன் ஸார்.

- நல்லமுத்துவோட வந்தவன் படுத்திருப்பான்.

- வந்தவன் தலையில் குல்லா வச்சிருந்தான்! என்றார் ரகு.

- ஆமாம். அதை எடுத்துட்டுத்தானே படுத்திருப்பான். அதனால அறையில் ஏதாவது ரோமம் உதிர்ந்திருக்கான்னு பார்க்கணும்.

பார்த்தார்கள். தரையில் குனிந்து படுத்து, பல விதங்களில் பார்த்தார்கள்.

எதுவும் இல்லை.

அறையில் இருந்த அலமாரியை மீண்டும் திறந்து பார்த்தார்கள்.

பிறகு மேஜை டிராயர்களைத் திறந்தார்கள்.

உள்ளே பேப்பர் ரசீதுகள், கடிதங்கள் என்று ஒவ்வொன்றையும் பார்த்தார்கள்.

ஒரு சின்ன அட்டை பைலுக்குள் திறந்தபோது, அதற்குள்ளும் ரசீதுகளும் இருந்தன.

- நல்லமுத்து பெரிய ரசீதுப் பிரியர்போல இருக்கு. ஒரு சின்ன ரசீதையும் கிழித்து தூரப் போடல்லை. சாதாரண லாண்டரி ரசீது கூட இருக்கு. ஓட்டல் சாப்பாட்டு பில். . .

செந்தில் ரன்னிங் கமெண்டரி கொடுத்துக் கொண்டே போனார்.

இடையிடையே சில போட்டோக்கள்.

எங்கேயோ போன இடங்களில் எடுத்த போட்டோக்கள்.

படங்கள் சரியாக எடுக்கப்படவில்லை. ஆனால் புதியவை என்று தெரிந்தது.

எல்லாவற்றையும் நகர்த்திக் கொண்டே போய் பைலைத் திரும்ப வைத்துவிட்டு களைப்புடன் வாசல் நடைக்குப் போனார்.

அங்கே வெளித் தோட்டத்தைப் பார்த்த ஒரு ஸிட்-அவுட்!

அங்கே அவர் நின்றார்.

கொலை நடந்த இடத்தில் தடயம் இல்லாமல் இருப்பது வெகு அபூர்வம். எப்படியும் ஏதாவது ஒருத்தருக்குக் கிடைக்கும் என்று ஒரு பிரபல மேனாட்டுத் துப்பறிவாளர் சொன்னது நினைவுக்கு வந்தது.

தனக்கு எதுவும் கிடைக்கவில்லையே!

அப்போது ‘சரக் சரக்’ என்ற சத்தம் எழுவதைப் பார்த்துத் திரும்பினார்.

எதிர் வீட்டு ஆரோக்கியசாமி தம் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

செந்தில் அங்கே நிற்பதைப் பார்த்து, காம்பவுண்ட் சுவர் ஓரமாக வந்தார்.

- ஸார்! ஏதாவது தெரிய வந்திச்சா? என்றார் ஆவலுடன்.

- இல்லையே ஸார்! என்றார் செந்தில். - தேடிட்டு இருக்கோம். சீக்கிரம் கண்டுபிடிச்சிடுவோம்! என்றார்.

- ஒரு விஷயம் ஸார்! கொலை நடந்த அன்னிக்கு யாரோ ஒருத்தரோடு நல்லமுத்து வந்தாருன்னு சொன்னேன் இல்லே.

- ஆமாம்.

- சாதாரணமா அந்த மாதிரி வரவே மாட்டார். தனியாகத்தான் வருவார். அன்னிக்கு அபூர்வமா. . .?

- ஏன் ஸார்? நல்லமுத்து பெரிய பணக்காரர். வீட்டிலே யாரும் இல்லாதபோது சிநேகிதங்க யாரையாவது அழைச்சுட்டு வரலாமில்லே?

- வரலாம் ஸார்! ஆனா இந்த ஆளு அப்படி இல்லை. சிநேகிதங்க, பரிச்சயமானவங்க, எல்லோரும் வெளியிலதான். வீட்டிலே சேர்க்க மாட்டார். சமயத்திலே அவங்க வந்து கார்லேயோ, வேனிலேயோ அழைச்சிட்டுப் போவாங்க அவ்வளவுதான்.

ஆரோக்கியசாமி அத்துடன் போக முயன்றார்.

- ஸார்! கொஞ்சம் உள்ளே வர முடியுமா? என்றார் செந்தில்.

ஹாலில் அவரை உட்கார்த்தி நல்லமுத்துவின் படுக்கை அறைக்குப் போய் மேஜையிலிருந்த பைலை செந்தில் எடுத்து வந்தார்.

- நல்லமுத்து எங்கெங்கேயோ உல்லாச டூர் போயிருக்கார் போல! என்றார் செந்தில்.

- அதான் சொன்னேனே! அவர் சினேகிதங்க இங்கே வந்து அவரை இழுத்திட்டுப் போவாங்க! என்றார் ஆரோக்கியசாமி.

பையில் உள்ள சில போட்டோக்களை செந்தில் அவர் கையில் கொடுத்தார்.

- ஸார்! சில படங்கள்லே நண்பருங்க இருக்காங்க. அன்னிக்கு வந்தவன் யாராவது இதிலே இருக்கானான்னு பாருங்க! என்றார்.

ஆரோக்கியசாமி கண்ணாடியை எடுத்துப் போட்டுப் பார்த்தார்.

ஒவ்வொரு படத்தையும் உற்றுப் பார்த்தார் ஆரோக்கியசாமி.

- ஸார்! இதிலே யாருமே அன்னிக்கு பார்த்த மாதிரி தெரியலை. யாருக்கும் தலையிலே குல்லா இல்லை.

-குல்லா இல்லாம எப்படி இருப்பார்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க! என்றார் செந்தில்.

திரும்பவும் ஆரோக்கியசாமி பார்த்தார்.

- ஸார்! யாருமில்லை. என்று படங்களைத் திருப்பிக் கொடுத்தார்.

செந்தில் அவரை அனுப்பி விட்டு சோபாவில் அமர்ந்து கொண்டார்.

அவர் கை அந்தப் படங்களை வருடிக் கொண்டிருந்தது.

படங்கள் பின்னால் அவை எடுக்கப்பட்ட தேதிகள் இருந்தன.

சமீபத்திய தேதியைப் பார்த்தபோது அது ஏழு மாதத்திற்கு முந்தியதாக இருந்தது.

ஒரு நண்பர்கள் குரூப் அதில் தெரிந்தார்கள். மொத்தம் ஏழு பேர்!

ஒரு மரத்தடியில் எல்லோரும் சுபாவமாக நின்றிருந்தார்கள்.

படத்தில் லைட்டிங் சரியில்லை.

சும்மா பார்த்துவிட்டு செந்தில் கீழே வைத்தார்.

பிறகு ஏதோ தோன்றவே, திரும்பவும் அந்தப் படத்தை எடுத்து கவனத்துடன் பார்க்க ஆரம்பித்தார்.

ஒவ்வொரு நபரையும் இரண்டு மூன்று முறை பார்த்தபோது திடீரென்று ஒரு நபர் அவர் மனத்தில் ஏதோ நெருடலை உண்டாக்குவது தெரிந்தது.

சிறிது யோசனை.

- ரகு! என்றார்.

ரகு துள்ளி எழுந்தார்.

- எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கு. இந்தப் படத்தைப் பார். இந்த ஆளைப் பார்! என்றார்.

ரகு பார்த்தான்.

- நம்ப தொடர் கொலையிலே ஒரு ஆசாமியோட படங்கள் பல நான் பார்த்தேன். நீயும் பார்த்தே. நினைவு இருக்கா.

- இருக்கு சார்!

- அதிலே அந்த ஆளும் இந்த மாதிரிதான் பின்னாடி கையைச் சேர்த்துக்கிட்டு நிற்கிறான்.

- ஆமாம் ஸார்.

- சிலவங்களாலே சும்மா நிற்க முடியாது. ரெண்டு கையையும் முன்பக்க மார்போடு சேர்த்து வச்சிருப்பாங்க! சிலவங்க ரெண்டு கையையும் முன்னாடி தொங்கப் போட்டு சேர்த்து பிடிச்சிருப்பாங்க.

- ஆமாம் ஸார். ஒவ்வொருத்தருக்கும் இத மாதிரி சில பெக்யூலியர் பழக்கம் உண்டு.

- இந்த ஆசாமி பின்னாடி கையை சேர்த்திருக்கான். இவனை அடையாளம் பார்க்கலாம்னா இந்தப் படத்திலே ஸைட் காட்டிக் கொண்டு நிற்கிறான். இவன் நேருக்கு நேர் நின்னா எப்படி இருக்கும்னு யோசிச்சா ஒருவேளை அந்த கொலையாளி ஆசாமியாத் தெரியலாம்.

ரகு முகத்தில் பிரகாசம் அடித்தது.

செந்தில் சிலசமயம் அபூர்வ யுக்திகளில் பேசுவார். இப்போதும் பேசிவிட்டார்.

- ஸார்! நிறைய சான்ஸஸ் இருக்கு! என்றான் ரகு.

- வா! உடனே போறோம்.

வெளியே பறந்தார்கள்.

**ம**றுநாள் மாலையில் சரிதா வந்து காரை எடுத்தாள்.

மனசில் பல எண்ணங்கள் சூழ, உடனே டாக்டர் ரவீந்திரனைப் பார்க்க விரும்பினாள்.

- டாக்டர்! என்னவோபோல குழம்பறேன். கிளப்புக்கு கிளம்பிட்டிருக்கேன். உங்க கிளினிக் வந்தாலும் வருவேன்! என்றாள்.

காரில் பறந்தாள்.

## 17

டாக்டர் ரவீந்திரன் போனை எடுத்தார்.

சரிதா ஒரு சரிந்த குரலில் பேசினாள்.

- டாக்டர்! நான் இப்போ அங்கே வரேன்!

அவள் அப்படிச் சொல்லி ஏற்கனவே 30 நிமிடங்கள் நகர்ந்துவிட்டன.

மாடியும் பால்கனியுமாக ரவீந்திரன் நடந்து கொண்டே இருந்தார். இன்னுமா சரிதா வந்து சேரவில்லை?

சின்ன கிலேசங்கள் அவரிடம் முளைத்தன.

கிசிக்சைக்கு சரிதா வரத் தொடங்கியதிலிருந்து அவள் ஒரு நல்ல சோதனை நோயாளியாக அவருக்குத் தோன்றினாள்.

அவள் மீது அவருக்கு அலாதி சுவாரஸ்யம் பிடித்துக் கொண்டது.

எனவே அவள் வந்து சேரவில்லை என்று தெரிந்ததும், சட்டென்று யோசனை அவரைத் தள்ளியது.

தடதட என்று மாடிப்படிகளில் இறங்கினார்.

கீழே அவர் 'ஸண்ட்ரா' பதுமையாகக் கிடந்தது.

அதில் தாவி ஏறி சரிதா வீட்டை நோக்கிப் பறந்தார்.

வீட்டை நெருங்கியதும் காரின் வேகத்தைத் தணித்தார்.

மென்மையான ஓட்டத்தில் விட்டு, ஓசைப்படாமல் சரிதா வீட்டுக் காம்பவுண்ட் தள்ளி மெழுக்குப்போல் நிறுத்தினார்.

காரின் கதவைக் கூட ஓசையில்லாமல் திறந்து காம்பவுண்ட் மேல்புறம் வழியே தன் கவலையான பார்வையை ஓட்டினார்.

அவர் நினைத்தது வீணாகவில்லை.

இருளில் விழுந்த மெல்லிய வெளிச்சத்திலே சரிதா தன் காரின் அருகில் சிந்தனை வசமாக நிற்பது தெரிந்தது.

அவள் அவளாகத் தெரியவில்லை.

அடிக்கடி மேலே ஆகாயத்தைப் பார்க்கும் அவளது தேம்பலான விழி அதைக் காட்டியது.

ஒரு முறை காரின் கதவைத் திறந்து உட்கார்ந்தாள்.

பிறகு 'ஆ' என்று ஒரு வலிப்பான சப்தத்தை உண்டாக்கி வெளியே வந்தாள்.

முணுமுணு என்று அவள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் கேட்டன.

சிறிது நேரம் இதே நாடகம் நடக்க,

கடைசியில் அவள் காரில் ஏறி அமர்ந்து அதைக் கிளப்பினாள்.

விர்ர்ரென்று அம்புபோல வெளியே பாய்ந்தது கார்.

ஹெட்லைட் பீச்சி அடித்து முன்புறத்தை பகலாக்க, கார் ஒரு கோபத்துடன் எவ்விக் கொண்டு ஓடியது.

ரவீந்திரன் நிதானித்தார்.

அவரது கிளினிக்கை நோக்கி அவள் கார் திரும்பவில்லை.

ரவீந்திரன் உடனே தன் காரில் ஏறினார். சரிதாவைப் பின் தொடர ஆரம்பித்தார்.

நெருக்கச் சாலைகள் கடந்த பிறகு நடமாட்ட மில்லாப் பகுதி.

சரிதா தன் காரை ஓரமாக நிறுத்தினாள்.

அவள் கண்படாத எட்டத்தில் ரவீந்திரன் காரை நிறுத்திவிட்டு,

மெள்ள ஓரமாக நடந்து அவள் கார் அருகே வந்தார்.

சரிதா செல்போனில் பேசுவது தெரிந்தது. ஆனால் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை.

புருவத்தை நெறித்துக் கொண்டு, ரவீந்திரன் ஒரு மர ஓரமாக நின்றார்.

அவள் செல்லில் பேசுமுன் மேலே அடிக்கடி பார்த்தாள். பிறகு தன் செல்லில் பேசினாள்.

இப்படி ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் செய்வது ஆச்சரியமாக இருந்தது.

அது முடிந்த பிறகு காரைக் கிளப்பி நகரம் நோக்கித் திருப்பினாள்.

ரவீந்திரன் அவளைப் பின்பற்றிக் கொண்டே வர,

அவள் மெயின் சாலைகளுக்கு வந்து, எட்டாவது குறுக்குச் சாலையில் சென்று.

'சோஷியல் கிளப்' என்று பெரிதாக நியானில் தொங்கிய போர்டுக்குக் கீழே,

விஸ்தார முகப்பில், பார்க்கிங் பகுதியில் கொண்டு போய் காரை நிறுத்துவது தெரிந்தது.

பிறகு இறங்கி கிளப்புக்குள் போனாள்.

**ம**றுநாள் முழுவதும் இன்ஸ்பெக்டர் செந்தில் கம்ப்யூட்டர் நிபுணர் ஒருவருடன் அமர்ந்து கொண்டிருந்தார்.

அவர் கொண்டு வந்திருந்த அந்த குரூப் போட்டோவில் உள்ள ஒவ்வொரு நபரின் உருவத்தையும் நிபுணர் தமது மானிடரில் வரவழைத்துக் கொண்டிருந்தார்.

பிறகு பல விசைகளைத் தட்டி,

குறிப்பிட்ட நபரின் 'ஸைட்' காட்சி முகத்தைத் திருத்தி நேரில் பார்க்கும் கோணத்தில் படமாகக் கொண்டு வந்தார்.

இன்ஸ்பெக்டர் செந்தில் பொறுமையாக சோபாவில் அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் முதல் படம் அவர் கைக்கு வந்தது.

அதைப் பார்த்ததும், சுள் என்று நாக்கில் உணர்ச்சி.

ஆ! இது சிவராம்போல இருக்கே.

தடதட. . . உடம்பில் ஒரு படபடப்பு.

அவர் ஏற்கனவே ஊகித்தது சரிதானா?

அடுத்த கால் மணியில் மற்றொரு படம் வந்தது.

பிறகு மற்றொன்று.

இரண்டு மணி நேரத்தில் எல்லோரது படங்களும் அவர் கைக்கு வந்தன.

எல்லோரும் படத்தில் நேர்முகமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

- மை காட்! ரகு! என்று கூவினார்.

ரகு அங்கே இல்லை என்பது புரிந்தது.

- ஸார்! ரொம்ப நன்றி. மீண்டும் சந்திக்கிறேன்! என்று சொல்லி வாசலுக்குப் பாய்ந்தார்.

ஆபீஸ் திரும்பி செந்தில் பரபரப்பு வேகத்தில் மேஜையில் அமர்ந்து பழைய பைலை எடுத்து பார்ப்பதைக் கண்டு, ரகு அருகில் வந்து நின்றான்.

- ரகு! தொடர்கொலையில் முதல் பைல்! என்றார்.

ரகு உடனே அவன் கைகளிலிருந்து பைல்களை வாங்கி, குறிப்பிட்ட பைலை எடுத்து அவர் முன்னால் வைத்தான்.

- கொலையானவன் படம் இருக்குதில்லே?

- இருக்கு ஸார்! ஒரு தனி கவர்லே போட்டு கடைசி பக்கத்திலே வச்சிருக்கிறேன்.

ஒரு கவரை உடைத்தான்.

அதன் மூடியைத் திறந்து போட்டோவை எடுத்து செந்திலின் முன் வைத்தான்.

கொலையான முதல் நபர் அந்த போட்டோவில் இருந்தவர்தான்.

செந்தில் விருட்டென்று, தான் கொண்டு வந்த கம்ப்யூட்டர் போட்டோக்களை எடுத்து மேஜைமீது பரப்பினார்.

பார்வை இங்கும் அங்கும் துள்ளி ஒவ்வொரு போட்டோவையும் எடுத்தது.

- இதோ பாரு, ரகு!

செந்தில் அப்படி கூவிப் பேசியதில்லை. ரகு பார்த்தான்.

கம்ப்யூட்டர் படமும், கொலையானவர் படமும் ஒத்திருந்தது.

- இதோ இதோ. . .

நான்கு படங்களும் நான்கு கம்ப்யூட்டர் படங்களுடன் ஒற்றுமையில் இருந்தன.

செந்தில் ஒரு நீண்ட பெருமூச்சுடன் நாற்காலியில் சாய்ந்தார்.

- இப்போது இது ஒரு பெரிய தடயம் ரகு! என்றார்.

- எஸ் ஸார்.

- உனக்கு ஏதாவது தோணுதா?

- குரூப் போட்டோவில் மொத்தம் ஏழு பேர் நிற்கிறாங்களே ஸார்.

- அதை நான் யோசிச்சாச்சு! இதிலே ஓரமா இருக்கிற ரெண்டு பேர் டிரெஸ்ஸைக் கவனிச்சியா?

- சாதாரணமா இருக்கு ஸார்.

- ரைட், அவங்க ரெண்டு பேரும் சாதாரண சிப்பந்திங்க அல்லது டிரைவருங்க, அல்லது உதவி ஆளுங்களா இருப்பாங்க.

- புரியுது ஸார்.

- நல்லமுத்து அடிக்கடி வெளியூர் போயிருக்கார்னு கேள்விப்பட்டோம். அது ஒரு 'பிக்னிக்'போற இடம். அப்படிப் போன இடத்திலே நல்லமுத்து இந்த குரூப் படத்தை எடுத்திருக்கிறார் சரிதானே?

- எஸ் ஸார்.

- அதிலே நாலு பேர் கொலை ஆகியாச்சு. அஞ்சாவதாக கொலை ஆனவர் இந்த குரூப் போட்டோவை எடுத்த நல்லமுத்து.

- எஸ் ஸார்.

- குரூப்லே இன்னும் ஒருத்தன் பாக்கி இருக்கானே! அவன்தான் இனிமே கொலை ஆக வேண்டியவன்.

ரகு கண்ணை மூடிக் கொண்டு திறந்தான்.

- ஸார்! என்று சொல்லி மேலே பேச்சில்லாமல் செந்திலின் கண்டுபிடிப்பில் அதிசயித்து நின்றான் ரகு!

- இப்போ கொலை ஆகப் போகிறவன் இந்தக் கடைசி ஆசாமிதான்! கொலையாளி கூட நம்பகிட்டே போன்லே சொன்னானே! இன்னும் ஒரு கொலையோட நிறுத்திடுவேன்னு. . . !

- இந்த குரூப் போட்டோவிலே இருந்தவங்களை நல்லமுத்து எப்படி போட்டோ எடுக்க நேர்ந்தது?. . .

- ஸார்! பிக்னிக் போன இடத்திலே நல்லமுத்து சும்மா போட்டோ எடுத்திருப்பார்.

- அப்படியா சொல்றே?

- ஆமாம் ஸார். தெரியாதவங்களா கூட இருக்கலாம். போன இடத்திலே கொஞ்சம் பழகி இருக்கலாம். . .

செந்தில் யோசித்தார்.

- கொலையாளி யாரா இருக்கலாம்னு நினைக்கிறே? போட்டோவில் இல்லாத வேற ஆசாமியா இருக்கலாம் இல்லே? என்றார் அவர்.

- ஏன் ஸார் போட்டோவில் இருக்கற ஒருத்தனே கூட கொலையாளியாக இருக்கலாம். ஏன், இந்த ரெண்டு சிப்பந்திகள்ல ஒரு. . . ஒருத்தனா கூட இருக்கலாம்.

- ஓ!

இருவரும் சிறிது நேரம் யோசனையில் வீழ்ந்தார்கள்.

செந்திலின் நினைவுகள் பல கிளைகளாக விரிந்து ஓடின.

பிறகு திடீரென்று, முதல்லே இந்த குரூப் போட்டோ எங்கே எடுக்கப்பட்டது? இதிலே இருக்கிற பாக்கி பேர் இப்போ எங்கே இருக்காங்கன்னு கண்டுபிடிக்கணும்! என்றார் செந்தில்.

- ஏழு மாசம் முன்னாலே எடுத்த போட்டோ! போட்டோ பின்னாடி தேதி இருக்கு. எங்கே எடுத்தாங்க என்கிறதை உடனே கண்டுபிடிக்கணும். என்றான் ரகு.

போன் மணி அடித்தது.

- ஹலோ! என்றார் செந்தில்.

டாக்டர் ரவீந்திரன் குரல் கேட்டது.

அவர் பேசப் பேச செந்தில் முகமும் கண்ணும் இறுகியது.

- கடவுளே! ஒரு எமர்ஜென்ஸி! என்று எழுந்தார்.

௧௦௪

# 18

டாக்டர் ரவீந்திரனிடம் இருந்து வந்திருந்த போன் இன்ஸ்பெக்டர் செந்திலை உறைத்தது.

சரிதா போன் செய்துவிட்டு கிளினிக் புறப்பட்டதையும்,

வெகுநேரம் அவள் வராததால் ரவீந்திரன் அவளைப் போய் வீட்டில் பார்த்ததையும்,

சரிதா ஒரு பயங்கர டென்ஷனில் கார் பக்கம் நின்று தவிக்கிறாள் என்பதையும் செல் போனில் கூறினார் டாக்டர்.

- நான் அவளை பின்பற்றப் போகிறேன். உடனே வாங்க. நிச்சயம் பலன் கிடைக்கும்! என்றார்.

செந்தில் திகைத்தார்.

- டாக்டர்! நான் போட்டோ பற்றிய ஒரு முக்கிய துப்பில் விசாரணை பண்ணிட்டிருக்கேன். தயவு செய்து நீங்க இதைக் கொஞ்சம் கவனிச்சிப்பீங்களா? என்றார்.

- நான் துப்பறியவா?

- ஏன்? நீங்கதான் ஒவ்வொருத்தர் மனதையும் துப்பறியறீங்களே? என்றார் செந்தில்.

டாக்டர் - ஓகே! என்று சிரித்தார்.

இன்ஸ்பெக்டர் செந்திலுக்கு டிகிரிடிகிரியாக பரபரப்பு ஏறியது.

கொலையானவர்களை போட்டோவில் ஏதோ ஒரு இடத்தில் நிற்பதைப் பார்த்து விட்டார்.

மனது அவரை ஓயவிடவில்லை.

- ஜீப் என்றார்.

துணை இன்ஸ்பெக்டர் ரகு பறந்தார். ஜீப் சீறிக் கொண்டு நின்றது.

அடுத்தகணம் நகரச் சாலைகளில் சுர்ரென்று சீறியது.

சிவராம் வீட்டின் முன்னால் போய் ஓய்ந்து நின்றது.

செந்தில் கீழே இறங்கி படிகளில் தாவி, மணியடித்து, உள்ளே புகுந்தார்.

திருமதி வசுந்தரா அவரை எதிர்பார்க்கவில்லை. பிரமிப்பும் திகைப்பும் முகத்தில் களை வீச,

சற்று நிதானமாகவே - வாங்க! இன்ஸ்பெக்டர்! கொலையாளியைப் பிடிச்சுட்டீங்களா? என்றாள்.

நாளாகி விட்டதால் சோகங்கள் மறைந்து மெல்லியதாக ஒரு வசீகரம் கதிர்விட்டு வீசியது.

- ஒரே ஒரு குளு மேடம்! இந்த போட்டோவைப் பாருங்க! இவர் உங்க கணவர்தானே? அவர் எங்கே போயிருந்தார்? இந்தப் படம் எங்கே எடுத்தாங்கன்னு சொல்லுங்க!

என்று தடதட என்று கேள்விகளாக உதிர்த்தார்.

வசுந்தரா போட்டோவை வாங்கி ஒரு நோட்டம் விட்டாள்.

- ஸார்! ஏழு மாசத்துக்கு முன்னாடி சிம்மாவரம் பக்கத்திலே பிக்னிக் போயிருந்தார் ஸார். அங்கே ஒரு ஏரி இருக்கு பாருங்க. ரொம்ப அழகா இருக்கும்.

- யாரோட போனார்?

- தெரியாது ஸார். சமயத்திலே பஸ்லே போயிடுவாரு.

- இந்த குரூப்ல அவருக்குத் தெரிஞ்சவர் உண்டா?

- எனக்கு யாரும் தெரியலை. சிம்மாவரத்திலே பெரிய கிளப் உண்டு. அங்கே சீட்டாட்டம், போட்டிங்னு பல கேளிக்கைகள் உண்டு. அதில் எதிலாவது கலந்திருப்பாரு. அப்போ அங்கே பரிச்சயமான கும்பலோடு நின்னபோது இந்த போட்டோ எடுத்திருப்பாங்க.

- நல்லமுத்துன்னு ஒருத்தரை தெரியுமா?

- தெரியாது.

செந்தில் முகத்தில் இருந்த வெளிச்சங்கள் ஒவ்வொன்றாக அணைய ஆரம்பித்தன.

அவர் பரபரப்பும் வந்த வேகத்தில் தணிந்து கொண்டிருந்தது.

வசுந்தா அவரை நோக்கி - ஸார், இந்த போட்டோ உங்களுக்கு எங்கே கிடைச்சது? என்றாள்.

- நல்லமுத்து வீட்டிலே! அவர்தான் சமீபத்திலே கொலையானார். இந்த போட்டோ அவர் டிராயர்லே இருந்திச்சு. இதிலே ஒரு விசேஷம் கொலையான அஞ்சு பேரும் இதில் இருக்காங்க.

- அப்படியா? என்று புருவத்தை உயர்த்தினாள் வசுந்தரா.

- அதனாலதான் உங்ககிட்டே கேட்கிறேன். உங்க கணவர் அந்த பிக்னிக் போனதைப் பற்றி ஏதாவது சொன்னாரா? நினைப்பு இருக்கா?

வசுந்தரா நினைவுகளைத் தட்டிவிட்டுக் கொண்டாள்.

சட்டென்று திரும்பி, -ஸார்! ஒரு விஷயம் நினைவுக்கு வருது. அதாவது நண்பரோட இவர் போன கார் ரிப்பேர் ஆயிடுத்து.

- ஓ! சொல்லுங்க!

-அதனால இவர் திரும்பி வரப்போ அங்கே ஒரு வேன் பிடிச்சு, அதை அஞ்சாறு பேர் வாடகைக்கு பேசி வந்துட்டாங்க.

செந்திலின் கண் எகிறியது.

வேனில் வந்தார்கள் என்ற செய்தி அவர் மனதில் ஒரு விசையைத் தட்டியது.

இது ஒரு நல்ல தடயம்.

வேனைத் தேடலாம்.

-ரொம்ப நன்றி மேடம்! என்று சொல்லி, அடுத்த கணம் வாசலை நோக்கித் தாவினார்.

**சோ**ஷியல் கிளப்புக்கு சரிதா போனாள்.

டாக்டர் ரவீந்திரன் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

கிளினிக் வருகிறேன் என்று கூறியவள் திடீரென்று மனம் மாறி இங்கே ஏன் வந்தாள்?

அடிக்கடி அவள் மனம் பேதலிக்கிறது.

ஒரு இரக்க மூச்சு விட்டுக் கொண்டு கேட்டில் நுழைந்து, கிளப் முகப்புக்கு டாக்டர் வந்தார்.

அது பெண்கள் கிளப்.

உள்ளே குரல்கள் பல சுருதிகளில் கேட்டன.

வாசல் தாண்டி, உள்ளே தெரிந்த ஹால் முழுவதையும் பார்வையில் அலசினார்.

கலர்களின் களஞ்சியம் அந்த ஹால்.

அங்கங்கே கேரம், சீட்டு என்று பல கும்பல்கள் உட்கார்ந்திருந்தன.

அவள் எங்கே, சரிதா?

டாக்டர் ரவீந்திரன் கண் தாவித்தாவி ஓடியது.

அதோ என்று தாவி ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டது.

அங்கே ஓரமாக இருந்த போன் பூத்துக்குள் அவள் போவது தெரிந்தது.

ரவீந்திரன் மனம் குறுகுறுத்தது.

பூத்துக்கு அருகே வெளிப்புறம் பார்த்து ஒரு சன்னல்.

அங்கே போனால் என்ன?

முகப்பு வாயிலை விட்டு அவசரமாக வெளியே வந்து, கிளப் கட்டிடத்தின் வலதுபுறம் இருக்கும் தோட்டத்துக்குள் போனார்.

அந்த ஜன்னலை அடையாளம் கண்டுபிடித்து அருகில் போய் நின்றார்.

சரிதாவின் குரல் மெலிதாகக் கேட்டது.

- நோ, நோ டார்லிங். எனக்கு உங்களைப் பார்க்க ரொம்ப ரொம்ப பிரியம்தான். அதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கிட்டு இருக்கேன்.

- மை டியர்! தயவு செய்து ஓட்டல் ஐடியாவை விட்டுடுங்க. ப்ளீஸ்.

- விட்டுட்டீங்களா, ரொம்ப மகிழ்ச்சி! இப்போ டியர், எனக்கு இரண்டு சாய்ஸ் இருக்கு. ஒண்ணு

வெளியிலே எங்கேயாவது ஒரு இடம், இல்லாட்டி உங்க வீடு. . .

- ஓ! என்னைத் தேர்ந்தெடுக்க சொல்கிறீர்களா? ரைட். யோசிச்சி சொல்றேன். ஆனால் டியர், இன்னிக்கு இல்லை. ரெண்டு நாள்ல போன் பண்ணிச் சொல்றேன். தயாரா இருங்க! உங்களுக்கு மில்லியன் கிஸ்ஸஸ். . .

போனை அவள் வைப்பது தெரிந்ததும், பிறகு அவள் ஹாலுக்கு போனதும்,

ரவீந்திரன் தோட்டத்தின் வழியே வெளிவந்து, முகப்பு வாயிலில் போய் நின்றார்.

**— நீ**ங்கதான் சிம்மாவரத்துக்கு வேன் ஓட்டினீங்களா?

- ஆமா ஸார்!

- இந்தப் படத்தைப் பாருங்க.

இன்ஸ்பெக்டர் செந்தில் போட்டோவை வேன் டிரைவர் வீராசாமியிடம் கொடுத்தார்.

வீராசாமிக்கு ஐம்பது வயதிருக்கும். தம் கண்களை இடுக்கிப் பார்த்தார்.

ஒரு மாதிரியான புன்னகை வந்தது.

- ஆமா ஸார். இதோ நான் இருக்கேன் ஸார். பாருங்க. இவங்கதான் நம்ப வேனில் திரும்பி வர்றப்போ ஏறிக்கிட்டாங்க, ஒவ்வொருத்தர்கிட்டேயும் ஐநூறு ரூபாய் வாங்கிக்கிட்டேன்.

- ஐநூறு ரூபாயா?

- ஆமா ஸார். அந்த நேரத்தில அந்த இடத்திலே வண்டி எப்படி ஸார் கிடைக்கும்? மெயின் ரோட்டிலேர்ந்து 20 மைல் தள்ளித்தானே கிளப் இருக்கு.

- நீங்க எப்படி அங்கே போனீங்க?

- நான் பாண்டிச்சேரிக்கு சவாரி போயிருந்தேன். திரும்பும்போது சவாரி இல்லை. அந்த நேரம் எல்லாம் சிம்மாவரம் போயிடுவேன். யாராவது அகப்படுவாங்க. உல்லாசத்துக்கு வராங்களா? கேட்ட பணத்தைக் கொடுத்திடுவாங்க.

- இந்த போட்டோ அப்போதுதான் எடுத்தாங்களா?

- ஆமாங்க! போட்டோ எடுத்தவரும் என் வேன்லதான் வந்தாருங்க. அவர் வண்டி ரிப்பேர் ஆயிடுத்து. கிளப்லேயே மெக்கானிக்கிட்டே கொடுத்திட்டு வந்துட்டாரு!

- வண்டிலே வந்தப்போ எல்லோரும் என்னென்ன பேசினாங்க நினைவு இருக்கா?

- ஸார்! அதை ஏன் கேட்கறீங்க? எல்லாரும் தண்ணி போட்டிருந்தாங்க! வண்டிலயும் தண்ணி! கண்டபடி மோசமா பேசிக்கிட்டே வந்தாங்க.

- ஒரே கலாட்டா இல்லே?

- கலாட்டாவா? உள்ளே ரகளை பண்ணி என்னைத் தள்ளி உட்கார வச்சு அவங்களே ஓட்ட ஆரம்பிச்சாங்க! எனக்கு ரொம்ப பேஜாராப் போச்சு!

- சரியா ஓட்டினாங்களா?

- தண்ணி போட்டா எப்படி ஓட்டுவாங்க? தாறுமாறா ஓட்டினாங்க. நான் கூப்பாடு போட்டேன். திட்டினேன். ஸ்டீரிங்கை பிடுங்கப் பார்த்தேன். விடலே ஸார். என்னைத் தள்ளித் தள்ளி விட்டாங்க. பயந்து போயிட்டேன். கடவுளே காப்பாத்துன்னு உட்கார்ந்துட்டேன்.

- வண்டியை எங்கேயும் மோதலியே?

- இல்லை ஸார். பல வாட்டி விபத்து நடக்கப் பார்த்துச்சு. நல்லவேளை நடக்கலை. அப்புறம் ஒரு அநியாயம் பண்ணிட்டாங்க ஸார்.

- என்ன?

- ஒரு ஆள் ஸ்கூட்டர்ல போயிட்டிருந்தான். அவனை வேணுமின்னு ஓரம் கட்டி ரோட்டோரம் தள்ளினாங்க ஸார்.

- அப்புறம் போய் பார்த்தாங்களா?

- இல்லை ஸார். பார்த்திருக்கலாம், உதவி செய்திருக்கலாம். செய்யலை. தள்ளிட்டு ஒரே சிரிப்பு. கும்மாளம் ஸார். கொஞ்ச தூரத்திலே ஒரு லெவல் கிராஸ் வந்துட்டுது. அது மூடி இருந்துச்சு. வண்டி நின்னுது. நான் இறங்கி ஓடினேங்க. அந்த ஆளு பள்ளத்திலே உருண்டு விழுந்திருந்தாருங்க.

- உயிர்?

- நல்ல காயம் ஸார்! மூச்சு சரியில்லைங்க. சரியாப் படுக்க வச்சேங்க. என்னைப் பார்த்ததும் 'தண்ணி' என்று சைகை காட்டினாங்க. நான் தண்ணிக்கு எங்கே போவேன்? பக்கத்துல ஒரு ஓடைச் சத்தம் கேட்டது. அங்கே போனேன். கையில் சேந்தி திரும்பினேன். அவர் வாயில விட்டேங்க. ஆள் உயிர் அப்போ போயிடிச்சு.

- அப்புறம்?

- பயந்து ஓடியே வந்து வேன்ல ஏறிக்கிட்டேங்க. அடுத்த ரெண்டாம் நாள் பேப்பர்லே செய்தி வந்ததுங்க. அந்த ஆள் ரோட்டோரம் ஸ்கூட்டரை ஓட்டி விபத்து ஆயிப்போச்சு. இறந்துட்டான்னு போட்டிருந்தாங்க.

செந்தில் யோசனையில் ஆழ்ந்தார்.

அவர் நினைவுகள் பல கிளைகளாக ஓடியது.

# 19

இன்ஸ்பெக்டர் செந்தில் ஆபீஸ் வந்ததும் ரகுவிடம் விவரங்களைச் சொன்னார்.

ரகு அரை மணி நேரத்தில் பத்திரிகைகளுக்கு போன் அடித்து முந்திய வருடம் நடந்த அந்த விபத்தை பற்றி விசாரித்தார்.

ஸ்கூட்டர் விபத்தில் இறந்தவர் பேர் காசிராம் என்று தெரிந்தது. வயது முப்பத்தைந்து. படித்து பட்டம் பெற்று, 'டிஸ்க் இண்டியா' என்ற நிறுவனத்தில் செக்ஷன் மேனேஜராக இருந்தவர் என்று தெரிந்தது.

பத்திரிகைகளில் வெளியான அவர் போட்டோவை ரகு வாங்கி வந்தார்.

'அவர் ஒரு பாச்சலர். தனியாக வாழ்ந்தார்' என்ற செய்தியையும் சொன்னார்.

இறந்தபிறகு அவரது சடலத்தை அவரது பக்கத்து வீட்டு அன்பர் ஒருவர்தான் வாங்கி ஈமக் கடனைச் செய்தார் என்று கூறினார்கள்.

சோஷியல் கிளப்பில் அந்த இரவு தோட்டத்தின் வழியே போய் சரிதா போன் செய்ததை பார்த்த பிறகு, டாக்டர் ரவீந்திரன் திரும்ப கிளப்பின் முகப்புக்கு வந்தார்.

அங்கிருந்து ஹாலை எட்டிப் பார்த்தார்.

சரிதா அங்கே தனியாக ஒரு இடத்தைத் தேடி அமர்வது தெரிந்தது.

யாரிடமும் பேசாமல் சிந்தனையில் மூழ்கி இருந்தாள்.

ஓ! காதல் வசத்தில் இருக்கிறாள் என்று ரவீந்திரன் நினைத்தார்.

யார் அந்தக் காதலன்?

அதைப் பற்றி நமக்கு எதற்கு என்று நினைவு வந்தது.

பின்னர் மெள்ள வெளியே போனார்.

சிறிது நேரம் உலாவுகிறார்.

இருபது நிமிடம் சென்ற பிறகு திரும்ப வந்தார்.

முகப்பின் முன்னால் நின்றார்.

உள்ளே ஹாலைப் பார்த்தபோது திடுக்கிட்டார்.

இன்னும் சரிதா அதே நிலையில் அப்படியே இருந்தாள்.

அவள் அருகில் ஒன்று இரண்டு சிநேகிதிகள் அவ்வப்போது வந்து போனார்கள்.

அவர்கள் கூல் டிரிங்க்ஸ் குடிப்பது தெரிந்தது.

ஏதோ அவளிடம் ரொம்ப ஆத்திரத்துடன் பேசுவது தெரிந்தது.

ஆனால் சரிதாவின் கடும் நிலைமை மட்டும் மாறவில்லை.

ரவீந்திரனின் புருவம் நெரித்தது.

- உம்! இவள் ஒரு பிரச்சினைப் பெண்ணாகவே இருக்கிறாள் என்று நினைத்தார்.

சற்று நேரம் அங்கிருந்துவிட்டு பிறகு வாசல் 'கேட்' தாண்டி வெளியே மீண்டும் வந்து நின்றார்.

சில நிமிடங்கள் தாண்டி ஒரு இளம் பெண் ஸ்கூட்டரில் வெளியே வந்தாள்.

ரவீந்திரனைப் பார்த்ததும், - ஹை! டாக்டர்! என்றாள்.

அவள் சோஷியல் சயன்ஸ் படித்து ஒரு கல்லூரியில் பேராசிரியையாக இருந்தாள்.

ரவீந்திரனுக்கு தெரிந்தவள்.

- ஹாய்! இந்து! நலமா இருக்கீங்களா? என்றார் ரவீந்திரன்.

இந்து ஸ்கூட்டரை நிறுத்தினாள்.

- ஏது? இவ்வளவு தூரம் டாக்டர்?

- அதுவா? உள்ளே என் பேஷண்ட் ஒருத்தி இருக்கிறா?

- இங்கேயா? எப்படி இங்கே வருவா? எங்கேயாவது மெண்டல் ஹோம்லதானே இருக்கணும்.

- இல்லை! அவள் அப்படி ஒரு முழு நோயாளி இல்லை. பகுதி நேர நோயாளி.

சிரித்தாள் அந்தப் பெண்.

- இவளுக்கு எப்போதாவது திக்பிரமை பிடிச்சிடும். அப்போ மட்டும் மாறிடுவா! என்றார் டாக்டர்.

- யாரு டாக்டர்?

- சரிதான்னு ஒருத்தி. வெளியில சொல்லாதீங்க.

- அவளா? தெரியும். இப்போதான் அவகிட்டே பேசினேன்.

- என்ன பேசினீங்க?

- அரை மணி நேரம் அப்படியே உட்கார்ந்திருக்கா. போய்ப் பேசிப் பார்த்தேன். ஒரு மாதிரி என்னவோ சொல்வாங்களே, பேய் அறைந்த மாதிரி இருக்கிறா. . . ஏன் டாக்டர் உண்மையிலே பேய் அறையுமா?

- இவ விஷயத்திலே அப்படி ஒண்ணு நடந்திருக்கு!

- என்ன டாக்டர்? நீங்க கூட நம்பிக்கை வச்சிருக்கீங்க?

- இந்து! சில மன நோய்கள் எல்லாம் எங்களுக்கு அப்பாற்பட்டது. இவ கேஸ் அப்படி! நாங்க ஏதோ இங்கிலீஷ் பேர் சொன்னா கூட, பேய் அறைஞ்சிருக்கிறதுதான் உண்மை!

- நான் பலவாட்டி பார்த்திருக்கேன் டாக்டர். இப்படித்தான் பூத்லே போய் போன் பண்ணுவா! அப்புறம் வந்து உட்கார்ந்துடுவா!

- என்ன? என்று ரவீந்திரன் திரும்பினார். - அடிக்கடி இப்படி நடக்குமா?

- ஆமாம் டாக்டர். சரிதா பூத்துக்கு போய்ட்டான்னு சொன்னாலே எங்களுக்கு யோசனை வந்துடும்.

- ஆமாம். லவ்வர்கிட்டே பேசறாளா?

- நாங்க ஒருதரம் பூத் பக்கத்திலேயே போய்ப் பார்த்தோம். ஒரு ஆண்பிள்ளை மாதிரி முறைச்சா! கோபத்துலே உறுமினா! அத்தோட விட்டுட்டோம்.

இந்து விடைபெற்றுச் சென்றாள்.

ரவீந்திரனின் முகம் மேலும் தீவிரமாகியது.

சரிதா கேஸ் ரொம்பக் கஷ்டமாக இருக்கும் என்று தோன்றியது.

அவளுக்குக்காகக் காத்திருந்தார்.

ஒரு மணி நேரம் கழித்த பிறகுதான் சரிதா வெளியே வந்தாள்.

வரும்போது மற்ற பெண்களிடம் கலகல என்று பேசி விடைபெற்று வருவது தெரிந்தது.

அடேடே! இப்போது மாறி விட்டாளே! என்று நினைத்தார்.

இப்போது அவள் ஒழுங்காக வீட்டுக்குக் காரில் போவதை டாக்டர் அவளைப் பின் தொடர்ந்தபடியே பார்த்தார்.

அன்று இன்ஸ்பெக்டர் செந்தில் வந்தபோது,

- என்ன செந்தில்! இத்தனை நாளும் வராம இருந்துட்டீங்களே? என்றார் டாக்டர் ரவீந்திரன்.

- ஸாரி டாக்டர்! நான் வேறே ஒரு ஆராய்ச்சியிலே இருந்துட்டேன்.

- இந்த கேஸ்தானே?

- ஆமாம். ஏன் அப்படிக் கேட்கறீங்க?

- நான் சரிதா வழியாகத்தான் அதைக் கண்டுபிடிப் போம்னு நினைச்சிருக்கேன்.

- அவள் நமக்கு உதவிதான்! ஆனா நடந்த விஷயத்தை மட்டும்தான் அவளால் சொல்ல முடிகிறது. அதிலேதான் சங்கடம். இருந்தாலும் ஒரு டைம் வந்தவுடனே, கொலையாளியை அவளுக்கு காண்பிப்போம். அவள் கண்டுபிடிச்சா பெரிய உதவி.

- ஓ. கே. செந்தில்! நீங்க எப்படி அவ்வளவு தூரம் போக முடிஞ்சது?

- ஒரு எதேச்சையான போட்டோ! முதல்லே அதை நான் பெரிசா எடுத்துக்கிடலை. அப்புறம் திடீர்னு யோசனை தோன்றி எடுத்துக்கிட்டேன். முன்னேற்றம் இருக்கு.

- என்ன அனுமானம் பண்ணியிருக்கீங்க?

- காசிராம்னு ஒருத்தர். அஞ்சு பேர் வந்த ஒரு வேன் காசிராமை ரோட்டோரம் தள்ளி, பள்ளத்திலே உருட்டி குளோஸ் பண்ணிட்டுது.

- முன் விரோதமா?

- இல்லை. நல்ல தண்ணி போட்டு ஓட்டினாங்க. ஒரே கலாட்டா பண்ணி, காசிராமையும் சாகடிச்சிட்டாங்க. போலீஸ் அதை விபத்துன்னு முடிவு எடுத்தாலும் அது இவங்க செஞ்ச கொலைதான். நிச்சயம்.

- அப்புறம்?

- கொலை ஆன காசிராம் ஒரு பாச்சலர். அவனுக்கு பக்கத்து வீட்டிலேர்ந்து 'ரவி'ன்னு ஒரு ஆத்ம நண்பன்தான் கடைசிக் கடன் எல்லாம் செஞ்சது. காசிராம் மாதிரி ஒரு நல்ல மனிதனைப் பார்க்கவே முடியாது என்று அவர் சொல்கிறார். காசிராம் இறந்ததுல ரவிக்கு ரொம்ப ரொம்ப வருத்தம். ஒரே கோபம். எப்படிச் செத்தார்னு விசாரிச்சு கண்டுபிடிச்சிருக்கார், அவர்!

- நடந்தது கொலைன்னு அவருக்குத் தெரிஞ்சு போச்சு இல்லையா?

- ஆமாம். அதுலேர்ந்து ரவி மாறிட்டார்னு விசாரிச்சுப் புரிஞ்சிக்கிட்டேன்.

- ஓ!

அவர்தான் தன் நண்பனைக் கொன்னவங்க எல்லோரையும் பழிவாங்கனும்னு கொலை பண்றார்னு என் தியரி! என்றார் செந்தில்.

- கடவுளே! கிட்டத்தட்ட 'சால்வ்' பண்ணிட்டீங்க!

- இருந்தாலும் முழு நிரூபணம் ஆகிற வரை கொஞ்சம் பொறுமையாக இருக்கணும்! அப்போ சரிதா உதவி நாட வேண்டி வரும். சரி, அன்னிக்கு ராத்திரி கூப்பிட்டீங்களே டாக்டர்! ஏதாவது நடந்துச்சா.

டாக்டர் ரவீந்திரன் நடந்ததை எல்லாம் கூறினார்.

சரிதா ரொம்ப விசித்திரமா நடந்து கொள்வதாகக் கூறினார்.

- அவ கேஸ் என் விஞ்ஞானத்துக்கே சவால்னு நினைக்கிறேன்! என்றார்.

செந்தில் சிறிது நேரம் அவர் சொல்வதை எல்லாம் அசை போட்டார்.

- ரவீந்திரன்! இவள் காதல் தோல்வி கேசா இருக்குமா? என்றார் செந்தில்.

- எனக்கும் தோணுது. அந்தக் காதலன் யாருன்னு கண்டுபிடிக்கணும்!

- அந்தப் போட்டோ பிரகாரம் இன்னும் ஒரே ஒரு ஆள் கொலை ஆக வேண்டி இருக்கு! அவன் பெயர் விச்சு! என்றார் செந்தில்.

- சரி விச்சுக்கு பாதுகாப்பு கொடுக்கறீங்களா?

- கொடுத்திட்டிருக்கோம். இவனைக் கொல்ல எப்படியும் கொலையாளி வந்தாகணும். அந்த நேரத்திலே போய்ப் பிடிக்கலாம்னு.

செந்தில் சொல்லி முடிக்கும் சமயம், அறைக் கதவு திறக்கப்பட்டது.

உள்ளே சரிதா விழித்துக் கொண்டே வந்தாள்.

செந்தில் ஒதுங்கி உட்கார்ந்தார்.

- டாக்டர்!

- எஸ் சரிதா! ஏன்? என்ன சமாச்சாரம்? இப்படி ராத்திரி எட்டு மணிக்குமேலே?

- சரிதா அமர்ந்தாள்.

- டாக்டர் சும்மாத்தான் வந்தேன். எனக்கு என்னமோ கலவரமாக இருக்கு.

- எப்பவும்தான் இருக்கு.

- இப்போ அதிகமாயிட்டு வருது.

செந்தில் வேண்டுமென்றே வேறுபுறம் பார்த்தார்.

சிறிது நேரம் மவுனம்.

- சரிதா! உங்ககிட்டே நான் ப்ளெய்னா ஒண்ணு கேட்கட்டுமா?

- கேளுங்க ஸார்!

- ஒளிவு மறைவு இல்லாம பதில் சொல்வியா?

- நிச்சயம் ஸார். எனக்கு எதையும் மனசுல மறைச்சுக்க முடியாது ஸார்.

- நீ யாரையாவது லவ் பண்ணி தோல்வி ஆகியிருக்கியா?

சட்டென்று முகத்தைத் திருப்பி, - நோ, நோ! முகத்தை அசைத்தாள் அவள்.

- நிச்சயமா?

- நிச்சயம். நான் யாரையும் லவ் பண்ணினது இல்லை. யாரையும் என்னை லவ் பண்ண விட்டதில்லை.

- ஏன்?

- என் தோழிங்க பல பேர் காதல்லே விழுந்து, காதலனைத் திருமணம் செஞ்சுக்கிட்டு திண்டாடிப் போயிருக்காங்க. 'லவ்' என்கிறது ஒரு டெம்பரரி உணர்ச்சி! அவ்வளவுதான்!

- அதனாலதான் லவ் பண்ணலையா?

- ஆமாம்.

- ஆச்சரியமா இருக்கே. நீ யாரையோ லவ் பண்ற மாதிரி கேள்விப்பட்டேனே. . .?

- சத்தியமா கிடையாது.

டாக்டர் திகைத்தார்.

சரிதா சொல்வது அழுத்தமாகவே இருந்தது.

ஆனால் அதை எப்படி நம்புவது?

- நம்பறேன். ஆனா யாரோ சொன்னாங்க. நீ போன்ல யாரிட்டேயோ காதல் பேசுவேன்னு.

- அந்தத் தப்பு எதுவுமே கிடையாது.

டாக்டர் யோசித்தார். ரொம்ப சாதுர்யமாகப் பேசுகிறாள் என்று தோன்றியது.

சிலரால் அப்படி முடியும்.

ஆனால் அவர் கேட்டது அவளைக் கலக்கி விட்டது என்று இப்போது தெரிந்தது.

வந்தபோது முகத்தில் இருந்த அமைதி முற்றிலும் பறந்து விட்டது.

அதற்குப் பதிலாக அவள் முகம் வெகுதீவிரமாகியது.

டாக்டர் ரவீந்திரனுக்கு முகத்தின் அந்தச் சின்னம் தெரிந்து விட்டது.

அடுத்த கணம், சரிதா சட்டென்று எழுந்தாள். ஜன்னல் பக்கம் ஓடினாள்.

எங்கேயோ பார்த்து கத்தினாள்.

பிறகு, அங்கிருந்தே - டேய்! இன்னும் ஒரே ஒரு கொலைதாண்டா! என்று கர்ண கடூரமாக இரைந்தாள்.

இன்ஸ்பெக்டர் செந்தில் திகைத்தார்.

- டேஸ்! இன்ஸ்பெக்டர் போடா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு.

அவள் குரல் அதிர்ந்தது.

ஜ௦ஞ

# 20

சரிதாவின் குரல் நாலு சுவரிலும் மோதி, இன்ஸ்பெக்டர் செந்திலின் கன்னத்தில் அறைந்தது.

- டேய்! இன்ஸ்பெக்டர் போடா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு.

செந்தில் குழம்பினார்.

சரிதா செந்திலை நோக்கிப் பாய்ந்தாள். அவர் கழுத்தைப் பிடித்து முரட்டுத்தனமாக திருகப் போக,

டாக்டர் ரவீந்திரன் தாவி அவளை பலவந்தமாக இழுத்தார்.

சரிதா வாயின் இரு பக்கமும் நுரை தள்ளியது.

- நர்ஸ்! என்று டாக்டர் அழைத்தார்.

நர்ஸ்கள் ஓடி வந்து, சரிதாவை மெத்தையில் சாய்த்தார்கள்.

செந்தில் முகத்தில் நகக்கீறல்களில் ரத்தம் கசிந்தது.

துடைத்துக் கொண்டார்.

- ஸார், செந்தில், இவள் ஒரு பெக்யூலியர் கேஸ்! வெளியுலக சரிதா வேற. உள் உலக சரிதா வேறு. இரண்டு சரிதா! சரிதா பிளஸ் சரிதா!

- ஓ! என்றார் செந்தில்.

- இந்தப் பெண்ணுக்கு உள்ளே சித்தப் பகுதி டிஸ்டார்ப் ஆகுது. அப்போ அவளுக்கு யாருடைய மனசையோ அறிய முடியுது. அந்த ஆசாமியின் எண்ணத்தை அவள் அப்படியே பிரதிபலிக்கிறா.

- அப்போ நிரந்தரமாக ஒரு ஆவி உள்ளே இல்லையா?

- என்னாலே அனுமானிக்க முடியலை. இவள் ஒரு பெக்யூலியர் கேஸ். இவளை மாதிரி ஆளுங்கதான் உலகத்திலே ஆருடம் சொல்றாங்க. நடந்ததையோ நடக்கப் போறதையோ சொல்ல முடியாது.

செந்தில் முகத்தில் இன்னும் குழப்பம் இருந்தது.

- டாக்டர்! இப்போ நான் வெளியில போறேன். நீங்களும் வாங்க!

இரவில் அந்தத் தெருவை செந்திலின் ஜீப் அணுகியது.

ஓரத்து பங்களா அருகே சற்று தள்ளியே நின்றது?

ஜீப் நின்றதும் ஒரு நிழல் அவர்களை நோக்கி வந்தது.

- என்ன ரகு? கண்காணிப்பு சரியாயிருக்கா? என்றார் செந்தில்.

- ஓ. கே. ஸார்.

- இவர் டாக்டர் ரவீந்திரன் தெரியுமில்லே?

- நல்லாத் தெரியும்.

- நீ பங்களாவுக்குள்ளே போய் ஆனந்த்கிட்டே பேசலையே!

- இல்லை ஸார்! நீங்கதான் வேண்டாம்னீங்க!

- சரி! இப்போ வா! நாம்ப உள்ளே போவோம்.

ஆனந்த் என்பவர் அந்த பங்களாவாசி. உள்ளே வந்தவர்கள் யார் என்று தெரிந்ததும் பெரிதாக வரவேற்றார்.

- இன்ஸ்பெக்டர்! நீங்க போன்ல சொன்னீங்க! எச்சரிக்கையா இருக்கும்படி! அப்புறம் நேர்ல வர்றேன்னீங்க! என்றார் ஆனந்த்.

- இப்பதான் முடிஞ்சுது வரேன்! என்றார் செந்தில்.

- எனக்கு எப்படி ஆபத்துன்னு சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?

செந்தில் அந்த குரூப் போட்டோவை எடுத்தார்.

- இந்த போட்டோவை பாருங்க ஆனந்த்! இந்த குரூப்லே எப்படி மாட்டினீங்க?

பார்த்தார்.

- ஒண்ணுமில்லை ஸார்! சிம்மாவரத்துக்கு பிக்னிக் போனபோது அங்கே எதேச்சையாக சேர்ந்த குரூப்! அவ்வளவுதான்.

- திரும்பி வரும்போது எல்லோரும் குடிச்சிட்டு வேனை ஓட்டினீங்களா?

- ஆமா ஸார், பெரிய தப்பு செஞ்சோம்.

- இப்போ ஒரு விஷயம் தெரியணும். அஞ்சு நாள் முன்னாடி ராத்திரி எட்டு மணிக்கு உங்களுக்கு ஒரு 'லவ்' கால் வந்ததா?

- ஆமாம்! என்றார் ஆனந்த் ஆச்சரிய விழியுடன்.

- யாரு! உங்களுக்குத் தெரிஞ்ச பெண்ணா?

- இல்லை.

- பின்னே எப்படி அவள் உங்ககிட்டே பேசினா?

- கொஞ்ச நாளா போன்லே பேசிட்டு வரா. ரொம்ப சுவாரசியமா இருந்துச்சு.

- அவள் பெயர் என்ன?

- ரோகிணி!

- அட்ரஸ்?

- அது கொடுக்கலை. சந்திச்ச பிறகு சொல்றேன்னா.

- இன்னும் சந்திக்கலையா?

- இல்லை. ஆனா சந்திக்க திட்டம் போட்டாச்சு.

- எப்போ? எங்கே?

- இன்னும் முடிவாகவில்லை. ரெடியா இருக்கச் சொல்லிட்டா.

- அப்புறம் அந்தப் பெண் பேசலையா?

- இல்லை.

- எங்கே சந்திப்பீங்க?

- என் வீட்டிலேயே சந்திக்கலாமான்னு கேட்டா. 'ஓ! செய்யலாம்'னு சொன்னேன். இன்னும் சில நாள்லே பேச றேன்னு சொன்னா. இதெல்லாம் ஏன் கேட்கறீங்க?

- வேற ஒரு விஷயம் அதிலே இருக்கு! அப்புறம் சொல்றேன்! என்றார் செந்தில்.

- ஆபத்து எதுவும் இல்லையே?

- எச்சரிக்கையா இருங்க! பயப்பட வேண்டாம்.

செந்தில் கண்காணிப்பு வேலையில் தீவிரமாக இருக்க, டாக்டர் ரவீந்திரன் சோஷியல் கிளப்பில் இரவு தினமும் காத்திருந்தார்.

மூன்றாம் நாள்.

இன்ஸ்பெக்டர் செந்திலின் செல்போன் ஒலித்தது.

- செந்தில்! கிளப்புக்கு சரிதா வந்திருக்கிறா. போன் பூத் போயிருக்கிறா! கவனிச்சுக்குங்க.

செந்தில் பரபரத்தார்.

- ரைட்! கவனிச்சுக்குங்க! என்றார் அவர்.

சிறிது நேரம் ஓடியது

திரும்பவும் செல்போன்.

- டாக்டர் பேசறேன். சரிதா போன்லே காதல் வசனமா பேசினா!

- சரி!

- ராத்திரி பத்து மணிக்கு வீட்டிலே சந்திக்க வரேன்னு சொல்லி இருக்கிறா.

- ஓ! டாக்டர்! இன்னிக்குத்தான் அந்த சந்திப்பு நாளா? அவள் கிளம்பின அப்புறம் நீங்க அவளைப் பின்பற்றி வரீங்களா?

- வரேன்!

- வரும்போது 'கால்' கொடுத்திட்டே வாங்க!

- எஸ் செந்தில்!

**ப**த்து மணி.

செந்திலும் அவர் ஆட்களும் ஆனந்த் பங்களா அருகே மறைவில் இருந்தார்கள்.

சரிதா பத்து மணிக்கு மேல் காரில் வந்தாள்.

பங்களாவை அடுத்துள்ள தெரு ஓரம் நிழலில் காரை நிறுத்தினாள்.

கீழே இறங்கி நடந்து பங்களாவுக்குள் சென்றாள்.

ஆனந்த் அவளைப் பரவசத்துடன் உள்ளே வரவேற்பது தெரிந்தது.

சரிதாவை பின்பற்றி வந்த டாக்டர் சற்று தொலைவிலேயே காரை நிறுத்தினார்.

விரைந்து போய் செந்திலுடன் கலந்து கொண்டார்.

செந்தில் சைகை செய்ய, அவர் ஆட்கள் உள்ளே சென்றார்கள்.

பங்களாவின் கதவு அப்போது பூட்டப்பட்டது.

செந்தில் மெள்ள கள்ளச்சாவி ஒன்றைப் பொருத்தி கதவைத் திறந்தார்.

உள்ளே போனபோது ஆனந்தும் சரிதாவும் அங்கே இல்லை.

படுக்கை அறைக்குள் போயிருப்பது தெரிந்தது.

சீக்கிரம் பூனை ஓட்டமாகப் போய் பெட்ரூம் கதவு அருகே நின்றார்.

உள்ளே சத்தங்கள் கேட்டன.

முதலில் சல்லாபப் பேச்சுக்கள்.

பிறகு திடீரென்று ஒரு ஆண்பிள்ளை குரல்.

- உள்ளே ஏது ஆண்பிள்ளை? என்று ரகு கேட்டான்.

- இரு பார்ப்போம்! என்று சைகை காட்டினார் செந்தில்.

- ஐயோ! கொலை! என்று ஆனந்தின் குரல்.

அறைக்குள் பெரிய சந்தடிகள்.

செந்தில் காலை ஓங்கி கதவை உதைத்தார்.

அவர் உதவி ஆட்களும் உதைத்தார்கள். கதவு 'படேர்' என்று உடைந்தது.

உள்ளே சீறிப் பாய ஆனந்த் அங்கே மூலைக்கு ஓடி இருந்தார்.

சரிதா கையில் கத்தியுடன் அவரை நோக்கி பாயத் தயாராக இருந்தாள்.

அவள் முகத்தில் இருந்த கோபம் ரத்த ஆவேசமாக இருந்தது. இவள் ஒரு பெண்ணா?

- டேய்! போங்கடா! வெளியே! தடுத்தீன்னா நீங்களும் கொலை! இவனை பலி வாங்கிட்டுத்தான் விடுவேன். டாய்! டாய்!

செந்தில் திடுக்கிட்டார்.

அது ஆத்திரம் மிகுந்த ஆண்பிள்ளையின் குரல்.

ஆமாம் ஒரு ஆணின் குரல்.

சரிதாவின் குரலே அல்ல.

செந்தில் பாய்ந்தார்.

சட்டென்று அவள் கையைப் பிடிக்க அவள் திமிற, என்ன பயங்கர வலு அவளிடம்!

என்ன முரட்டுத்தனம்!

செந்தில் அவளை மடக்க, ரகு அவளைப் பின்னால் பற்றி கட்டிலை நோக்கி வீசி எறிந்தார்.

அவள் சுருண்டு விழுந்தாள்.

கட்டிலின் சாய்மானப் பலகையில் நெற்றி போய் அடித்தது.

அடுத்த கணம் ரத்தம் பீறிட்டது.

மயக்கத்தோடு மெத்தையில் சாய்ந்தாள்.

போலீசார் அவளை பாதுகாப்புடன் வேனில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள்.

ஆனந்த் நன்றிக் கண்களுடன் செந்திலை நோக்கி வந்தார்.

- பயப்படாதீங்க! உங்களுக்கு பாதுகாப்பு தரேன்! என்று செந்தில் கூறினார்.

பங்களாவைச் சுற்றி போலீசை பாதுகாப்புக்கு நிறுத்தி விட்டு செந்திலும், டாக்டர் ரவீந்திரனும் ரகுவுடன் ஜீப்பில் ஏறினர்.

**— செ**ந்தில் கங்கிராஜுலேஷன்ஸ்! என்றார் டாக்டர் ரவீந்திரன்.

- டாக்டர்! இது ஒரு வினோத கேஸ்! சரிதா மேல் அந்த காசிராமின் ஆவி புகுந்து கொண்டு இந்தக் கொலைகளை எல்லாம் செய்யுதுன்னு ஊகிச்சேன். அப்படி ஊகிச்சதுக்கு உங்கள் உதவி ரொம்பக் காரணம் டாக்டர்.

- செந்தில்! என் ஊகத்தை விட உங்கள் ஊகம் அதிகமாக ஓடியிருக்கு! என்றார் டாக்டர்!

- ஒன்றுமில்லை. நீங்கள் சொன்ன பல உதாரணங்களில் இருந்துதான் நினைச்சேன். இந்தப் பெண்ணின் மீது காசிராம் ஆவி பிடித்து, இவளை இயக்கி ஏன் இந்தக் கொலைகளை நடத்தி இருக்கக் கூடாது என்று நினைச்சேன். அந்த நினைப்பே சரியாப் போச்சு!

அந்த வினோத கேஸ் கோர்ட்டுக்கு எப்படி வரும், கோர்ட் அதில் எப்படித் தீர்ப்பு அளிக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

மேனாட்டில் இதற்கு முன் உதாரணம் நடந்திருக்கிறது என்பது எல்லாம் பின்னால்தான் தெரிய வந்தது.

சரிதா இந்தத் தொடர் கொலையை செய்யவில்லை.

அவளுள் இயங்கிய காசிராம் ஆவிதான் கொலைகளுக்கு காரணம் என்பது திட்டவட்டமாகிவிட்டது.

பேப்பரில் இந்தச் செய்திகள் வந்தபோது பரபரப்பாகப் பேசப்பட்டன.

உலகத்தில் என்னவெல்லாம்தான் நடக்கிறது என்று அதிசயத்தோடு பேசிக் கொண்டார்கள்.

கோர்ட் சரிதாவுக்கு தண்டனை வழங்குமா, வழங்காதா என்று அவர்களிடையே பேச்சு.

ஒன்பது மாதமாய் நடந்த கொலைகள் இவை. எல்லாக் கொலைகளையும் சரிதாவே செய்தாள் என்பதற்கு நேரடி சாட்சி ஏதும் இல்லை என்றார் நீதிபதி.

ஆனந்த் விஷயத்தில் சரிதா கத்தியால் பயமுறுத்தினாளே தவிர, எந்த தீங்கும் செய்யவில்லை. படுக்கை அறைக்குள் அவள் போனபோது, அங்கே என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. உள்ளே ஆனந்த் ஏதாவது தவறாகப் பேசியிருந்தாலோ, அல்லது நடந்திருந்தாலோ அது சரிதாவுக்கு ஆத்திரம் உண்டாக்கி அவளைக் கத்தி எடுக்க வைத்திருக்கலாம் என்றார் நீதிபதி.

சரிதாவுக்கு விடுதலை.

டாக்டர் ரவீந்திரனுக்கு மகிழ்ச்சி.

செந்திலுக்கு பெரிய மன நிம்மதி.

சரிதாவுக்கு நெற்றிப் பொட்டில் பட்ட அடி குணமாக இரு மாதங்கள் ஆகின.

அந்த அடிபட்டதில் அவளது சித்தத்தின் பலவீனம் குறைந்து விட்டது.

இப்போது அவள் மற்ற பெண்களைப்போல பிரமை எதுவுமின்றி வாழ்கிறாள்.

**முற்றும்**